

# ஊடகங்களில் உதித்த உபதேசங்கள்

## இஸ்லாமிய கட்டுரைகள்

மௌலவி காத்தான்குடி பௌஸ்
(ஷர்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்தில் உதித்த உபதேசங்கள்

மௌலவி காத்தான்குடி பௌஸ்
(ஷர்கி)

வெளியீடு,
**ஸைனி பதிப்பகம்**
23/6, வத்தல்பொல வீதி,
ஹேனமுல்லை,
பாணந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Title** : ***OODAKATHTHIL UDITHTHA UPATHESANGAL***

**Subject** : Islamic Speech & Article Collections

**Author & Publisher** : ***Moulavi Kattankudy Fouz***
"Zaini Manzil"
23/6, Wattalpola Road,
Henamulla, Panadura.

**No. of Pages** : 108

**Size** : 5.5" x 8.5"

**Font Size** : 11 pt.

**Paper** : 70 gsm

**Copies** : 300

**First Edition** : 02 SEP 2007

**Typeset By** : Saeed A. Naleem

**Cover Page By** : A. H. Ahamed Aslam

**Printed By** : ***Far East Enterprise***
No. 68, Yonaka Mawatha,
Keselwatta, Panadura.
Tel : 0777-533248

**Copy Right** : ***Reserved***

**ISBN No.** : ***978-955-50073-3-7***

**Prize** : ***150/=***



# சமர்ப்பணம் !

என் அன்புத் தாயார் ஹாஜியானி ஹஸீனா உம்மாவுக்கும்
என் அன்புத் தந்தை மர்ஹூம்
ஏ. பி. உதுமா லெப்பை அவர்களுக்கும்



பிறந்த 10 செல்வங்களில்

1. என்சோதரன் அப்துர் ரஹ்மான்
(இரண்டாவது வயதிலும்...)
2. என் மறு சகோதரன் அப்துர் றஹீம்
(ஏழாவது வயதிலும்...)
3. மூன்றாம் சகோதரன் முஹம்மது முகைதீன்
(இரண்டரை வயதிலும்...)
4. என் அன்புச்சோதரி வஹீதா பீபி
(44 நாட்களிலும்...)
5. அடுத்த சோதரி கதீஜா பீபி
(பிறந்த அடுத்த கனத்திலும்...)
6. மற்றைய சோதரியாள் செய்னப் பீபி
(40 வது தினத்திலும்...)

மர்ஹூம்களாக இறையடி சேர்ந்தார்கள்.

இந்த இனிய மலர்களுக்கு காணிக்கையாக இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை!

காத்தான்குடி பௌஸ் என்ற பெயரில் நாட்டில் பிரபல்யம் பெற்றுள்ள மௌலவி அல்ஹாஜ் காத்தான்குடி பௌஸ் அவர்களது மற்றொரு நன்முயற்சியாக ஊடகத்தில் உதித்த உபதேசங்கள் என்ற நூல் வெளிவருகிறது.

மிம்பர்கள் மூலம் நாட்டை ஆட்சிசெயயும் உலமாக்களினால் சமூக மாற்றத்திற்கு ஆற்றக்கூடிய பங்களிப்பு அளப்பரியது. வாராவாரம் சமூகத்தை விழிப்புரச் செய்யும் வாய்ப்பு மிம்பர்கள் மூலம் சமுதாயத்திற்கு கிடைத்துள்ளது. இவ்வாறு செய்வதற்கு அறிவினை தேடி திரட்ட வேண்டியுள்ளது. இந்தப் பங்களிப்பின் போது கிடைக்கும் தகவல்களை எமது ஆக்கங்களாக வெளியிட்டு காற்றோடு பறக்கும் தகவல்களை செய்து வரும் பங்களிப்பு மகத்தானது. மற்ற உலமாக்களுக்கு இவரது சேவை முன்மாதிரியானது.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இமாமாக பணிபுரிந்து சமூகத்தை நல்வழியில் இட்டுச் செல்வதில் நிறைந்த பங்களிப்பினைச் செய்து வரும் மௌலவி பௌஸ் அவர்கள் சமூக ஆவலோடு அறிய வேண்டிய விடயங்களை மையமாகக் கொண்டு பத்திரிகைகளுக்கு நீண்ட காலமாக எழுதுகிறார். 1980 தசாப்தத்தில் நான் தினகரன் ஆலமுல் இஸ்லாம் பகுதிக்கு பொறுப்பாசிரியராக இருக்கும் போது இவரது பல கட்டுரைகளை என்னால் பிரசுரிக்க முடிந்தது. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துத்துறையில் ஈடுபட்டிருக்கும் மௌலவி பௌஸ், சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான இவர் ஊடகத்தில் உதித்த உபதேசங்கள் என்ற நூலில்தான் பத்திரிகைகளில் எழுதிய மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பேசிய உரைகளை உள்ளடக்கி வெளியிடுகிறார்.

இவை இன்றைய சமூகத்திற்கு தேவையான விடயங்களைக் கொண்ட தலைப்புகளில் வெளியானவை. இந்த ஆக்கங்கள் நூலுருவில் வெளிவருவது வாசகர்களுக்கு பிரயோசனமானதாக அமையும் என்பது எனத நம்பிக்கை மௌலவி அல்ஹாஜ் காத்தான்குடி பௌஸ் அவர்களது இந்த முயற்சிக்கு அல்லாஹ்வின் அங்கீகாரமும், வாசகர்களின் ஆதரவும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**அல்ஹாஜ் என். எம். அமீன் – தலைவர்**
ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்
முகாமைத்துவ ஆசிரியர், தினகரன



# அறிமுக உரை!

ஊடகத்தில் உதித்த உபதேசங்கள் அருமையான ஒரு சிந்தனை. ஆலிம் கவிஞர் பெருமகன் காத்தான்குடி பௌஸ் (ஷர்கி) அவர்களது உள்ளத்தில் உதித்தவை இன்று ஊடகத்தில் உதித்து எழுத்துருவில் உங்கள் கையில் உள்ளன. உலகோர் நல்வழி வாழ்ந்து கடமைக்கு செல்ல வழிசொல்வதே ஊடகம். ஊடகத்தில் குறிப்பாக இலத்திரனியல் அதிலும் வானொலியில் பணி புரிவோர் புரிவது சமூக சேவையே. அத்துடன் முஸ்லிம் சேவையில் நாம் செய்வது சமூகசேவையிலும் பெரிய அளப்பரிய சேவையே எனில் மிகையாகாது.

நூலாசிரியர் காத்தான்குடி பௌஸ் அவர்களது கனீர் என்ற குரல் கல்பைத் தொடும். காலமெல்லாம் நிலைக்குமாறு நமது வானொலி முஸ்லிம் சேவையில் அவரது உரைகள் பொதிந்த ஒரு சில நாடாக்களை வைத்துள்ளேன். அவற்றுள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பற்றிய அழகிய முன்மாதிரி எனும் உரை ரமழான் சிந்தனையாக வழங்கப்பட்டது. அதேபோல் ஸதகாவின் சிறப்பு, வறுமைப்பட்டோரை வாழவைப்போம், முதலியவை குறிப்பிடத்தக்கவை.

சமுதாயத்திற்கு தேவையான ஊட்டச்சக்தியை தரும் உபதேசங்கள் போதனைப் பொக்கிஷங்களாக இங்கே உள்ளன. அச்சு ஊடகத்தை நிச்சயமாக இலத்திரனியல் ஊடகம் முந்திக் கொள்வதை இன்று காணலாம். இன்றைய உலகக்கிண்ண கிரிக்கட் போட்டி அதிகாலை முடிவடைகிறது. இது பற்றி உலகுக்கு சொல்லும் முதல் ஊடகம் வானொலியோ, தொலைக்காட்சியோ உடனுக்குடன் செய்திகளாக மக்களுக்கு வழங்குகின்றது.

ஆலிம் கவிஞர் பெருந்தகை நண்பர் பேரன்புக்குரிய காத்தான்குடி பௌஸ் அவர்களது இந்த முயற்சி பயன்மிகு பெரும்பணியாகும். இது சமூகமும், தேசமும் பேசும் பணியாகும். பெரியோரும், சிறியோரும், பெண்களும், ஆண்களும் இதனை படித்து பயன்பெறட்டும். இதன் மூலம் பயன்பெறும் இதயங்கள் செம்புக் குடத்தில் நிறைந்த நீர் போல் நெஞ்சமதில் அன்பு நிறைந்தவையாகத் திகழ வேண்டும் என துஆ செய்து விடை பெறுகின்றேன்.

இஃது,
**அல்ஹாஜ் *M. Z.* அஹ்மத் முனவ்வர்**
சிரேஷ்ட ஒலிபரப்பாளர் – முஸ்லிம் சேவை
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் றஹீம் !

''ஊடகத்தில் உதித்த உபதேசங்கள்'' உதிராமல் உலராமல் தேன்வதையின் மகரந்தமாய் இங்கே சுவைத்து நிற்கின்றது. வாழ்வியல் வழிகாட்டியாய் வந்திருக்கும் இப்புத்தகத்தை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது புரிந்து கொண்டேன். அடக்கமான ஓர் ஆத்மாவின் உள்ளக் குமுறல்களை. ஆன்மீகத்துடன் அடக்கமும் அறிவும் கலந்து பல்துறையிலும் பரிணமித்து மானிட வாழ்வுக்குகந்த கருத்துக்களை வான்வழியாகவும் வரிவடிவாகவும் தந்து கொண்டிருக்கும் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களின் இந்நூல் தடம்பதித்துள்ளது. கட்டுரைகள் காலத்தை காட்டும் கண்ணாடிகள், கைசேதமின்றி வாழ வழி கூறும் உபதேசங்கள். இப்பொக்கிஷத்தை யாவரும் படித்து பயனடைய வேண்டும்.

1974ல் எழுத்துப் பணியில் காலடி வைத்த காத்த நகரில் பூத்த மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள் எமது நாட்டின் அச்சு ஊடகங்களைத் திகழும் தினகரன், வீரகேசரி, தினக்குரல், நவமணி, மித்திரன், ஜே மற்றும் இலத்திரனியல் ஊடகங்களான ரூபவாஹினி, ஐ அலை வரிசை, சுயாதீன தொலைக்காட்சி சேவை, சக்தி, சிரச, ரீ.என்.எல், டயனாவிஷன் என்பவற்றில் வழங்கிய சிறந்த எழுத்துக்களையும் சிந்தனைகளையும் சிந்தாமல், சிதறாமல் இருக்க எடுத்த இந்த முயற்சி பாராட்டத்தக்கது. மக்களுக்கு பயன்படத்தக்கது.

தீமையை உங்களில் எவரேனும் கண்டால் அதை அவர்களது கையினால் தடுத்து நிறுத்தட்டும் என வள்ளல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கொப்ப தீமையை விரட்டும் உபதேசமாக மிளிர்கிறது இந்நூல். ''நல்லவை எண்ணும் போதும் நல்லவை எழுதும் போதும் மட்டுமே நிம்மதி நிறைந்து நிற்கிறது'' என்கிறார் கவியரசு வைரமுத்து. இதே போல நல்ல விடயங்களை ஏட்டில் தந்திருக்கும் பௌஸ் மௌலவி அவர்களின் எழுத்து நடையும் கருத்துப் பொலிவும் பொருத்தமான உபதேசங்களும் வாசிக்கும் நெஞ்சங்களை நேசிக்கும் என நம்புகின்றேன். எழுத்துப் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

**இவ்வண்ணம்,**

சாமஸ்ரீ செந்தமிழ் செல்வன் அல்ஹாஜ் ***A. R. M.*** ஜிப்ரி
***B. Ed, Dip in Sp. Edu, Dip in Agri; Sp. Trained Maths & Science***
சிரேஷ்ட வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்



## சிறப்புரை!

காத்தான்குடியை பிறப்பிடமாகவும், பாணந்துறையில் வசிப்பிடமாகவும் கொண்ட மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள் சமூக சீர்திருத்தத்தையும், இஸ்லாமிய வாழ்க்கைத்திட்டத்தையும் தன்னைப் போன்று பிறரும் பலன் பெற வேண்டும் என்ற அடிப்படையில் எழுதிய நூலே ''ஊடகத்தில் உதித்த உபதேசங்கள்'' எனும் நூலாகும்.

இஸ்லாத்தை அதன் தூய வடிவில் பிறருக்கு அறிமுகப்படுத்தும் விதத்தில் இந்நூல் ஆசிரியர் எடுத்திருக்கும் முயற்சி முஸ்லிம்களுக்கு மாத்திரமல்லாது, ஏனைய சமூகத்தவர்களுக்கும் இஸ்லாத்திலுள்ள அருமையான கருத்துக்களைத் தெரிந்து கொள்ள அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது. தத்துவ வித்தகர் மௌலவி பௌஸ் அவர்கள் இவ்வாக்கங்களை சிறந்த தமிழ் நடையில் மக்களைச் சென்றடையும் பாங்கில் தனது பேனா முனையை நகர்த்திச் சென்றிருக்கின்றார்.

1974ஆம் ஆண்டு முதல் எழுத்துலகில் பிரவேசித்த கலாஜோதி மௌலவி அவர்கள் ஒரு செய்தியாளராக, எழுத்தாளராக, கவிஞராக அதிலும் மேலாக சிறந்த மேடைப் பேச்சாளராகத் திகழ்வது இஸ்லாமிய எழுத்துலகில் பெரும் பேறாகவே நமது சமூகம் அவரை மதிக்க வேண்டும். 1978 களில் தினகரன் லேக்ஹவுஸ் காரியாலயத்தில் அவரை அடிக்கடி சந்திப்பேன். அப்போதிருந்தே எனக்கு அவருடைய தொடர்பு இருந்தது.

2006ம் ஆண்டு அவர் எழுதிய ஐந்து நூற்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கிய பங்களிப்புக்கு ஒரு மைல்கல்லாக அமைந்து விட்டது.

கதை, கட்டுரை, கவிதை, உரைச்சித்திரம், நாடகம், வில்லுப்பாட்டு என்று பல துறைகளிலும் பங்காற்றும் அவர் வானொலி, தொலைக்காட்சிகளில் மிகத் திறமையாகப் பங்கேற்றி தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர். அன்னாரின் ஆக்கப்பணிகள் நூலுருப் பெறுவதைக் கண்டு மகிழ்ச்சி கொள்வதோடு அனைவரும் இந்நூலை வாங்கி வாசிக்க வேண்டும் எனவும் வேண்டுகிறேன்.

**இவ்வண்ணம்,**

**சாமஸ்ரீ கதை அன்பன் எம். கே. எம். அஸ்வர்**
(ஊடகவியலாளர்)
இதழியல் டிப்ளோமா பட்டதாரி (கொழும்பு பல்கலைக்கழகம்)
266/5, பள்ளிவாயல் வீதி, மோதர, மொரட்டுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீனின்

# யாத்ரா தந்த அறிமுகம்

மௌலவி காத்தான்குடி பௌஸ்

எழுபதுகளில் மரபுக்கவிதை ஒன்று பத்திரிகைகளில் பிரசுரமாக வேண்டுமாக இருந்தால் அது ஒரு சிரேஷ்ட கவிஞரின் சிபாரிசுக்குட்பட்டிருக்க வேண்டும். இந்தக் காலப்பகுதியில் கவிதைகள் படைக்கத் துவங்கியவர்களில் ஒருவர் காத்தான்குடி பௌஸ்.

1974ல் ''நூறுல் பலாஹ்'' சஞ்சிகையில் இவரது முதலாவது கவிதை இடம் பெற்றது. இது வரை நாட்டில் வெளிவரும் எல்லாத் தேசியப் பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. மற்றும் நாட்டில் அவ்வப்போது வெளிவந்த, வெளிவருகின்ற பல்வேறு சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகளிலும் தன் பங்களிப்பைச் செய்துள்ளார். 1977ல் பலப்பிட்டியில் இருந்து வெளியான 'ஜும்ஆ' என்ற பத்திரிகையில் வெளியான தூக்கம் தரும் குத்பா ஊக்கம்தர வேண்டும்' என்ற தொடர் கவிதையும் மற்றும் 2000 முதல் 2001ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நவமணியில் வெளிவந்த இவரது தொடர் கவிதைகளான 'பலஸ்தீன விடுதலைக் கவிதை', 'முஅத்தினின் முறைப்பாடு', 'காஸி கோர்ட்' ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அல்லாமா எம். எம். உவைஸ் அவர்கள் தனது மணிவிழா மலரில் இவரது கவிதையொன்றுக்கு முதலிடம் வழங்கிச் சேர்த்துக் கொண்டார் என்பது பௌஸின் கவித்துவத்திற்குக் கிடைத்த பெருமையென்று சொல்ல வேண்டும்.

கவியரங்கு மேடைகளில் காத்தான்குடி பௌஸ் ஏறிவிட்டால் கவியரங்கு களை கட்டத் தொடங்கிவிடும். வெகு சுவையாகக் கவிதை சொல்லும் திறன் இவருக்குண்டு. தவிரவும் பல்வேறு முக்கியஸ்தர்களின் குரல்களில் பேசக் கூடிய திறமை கொண்டவர். இவரது இந்தத் திறமையை விதந்தவர்களில் ஒருவர் மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள்.

ஒரு மார்க்க அறிஞராக விளங்கும் பௌஸ் சன்மார்க்க விடயங்கள் குறித்தும் பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதிவருவதோடு வானொலி, தொலைக்காட்சிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு வருகிறார். இவரது பல பாடல்கள் முக்கியமான வானொலி கலைஞர்களான கலாபூஷணம் ஏ. எம். ஜப்பார், எம். எல். எம். அன்ஸார் ஆகியோரினால் பாடப்பட்டுள்ளன. வில்லுப் பாட்டு, உரைச் சித்திரம் போன்றவற்றிலும் கால் பதித்தவர் பௌஸ். 1978ல் காத்தான்குடி பிரதேசத்திற்கான தினகரன் நிருபராகவும் இவர் சேவையாற்றியுள்ளார். இவரது மீலாத் தினப் பேச்சுக்களும் 'சுனாமி ஒரு சோதனையா? படிப்பினையா? என்ற உரையும் ஒலிநாடாக்களாக வெளிவந்துள்ளன.



தனது நீண்ட காலப் பயணத்தில் காத்தான்குடி பௌஸ் பெற்றுள்ள பரிசுகளும் பாராட்டுகளும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன. 1989ல் பலப்பிட்டி யௌவன சமாஜ நடத்திய அறிவிப்பாளர் போட்டியில் சிறந்த அறிவிப்பாளராகத் தெரிவாகியுள்ளார். 1997ல் மாத்தளை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை ரீதியாக நடத்திய கவிதை போட்டியில் மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்களினால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப் பெற்றார். 1999ம் ஆண்டு அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியம் சாமஸ்ரீ - கலாஜோதி பட்டம் வழங்கி கௌரவித்தது.

2002 ஒக்டோபரில் கொழும்பில் துறைமுக அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சு மற்றும் கிழக்கின் அபிவிருத்தி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பாராட்டுப் பத்திரமும் நினைவுச் சின்னமும் இவருக்கு வழங்கப்பட்டது. 2003ல் எம். எச். எம். ஷம்ஸ் மன்றம் நடத்திய ஷம்ஸ் நினைவு கட்டுரைப் போட்டியில் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பெற்றார்.

ஒரு சிறந்த மேடைப்பேச்சாளராக விளங்கும் பௌஸுக்கு 2003ல் பாணந்தறை இஸ்லாமிய மறுமலர்ச்சி மன்றம் 'தத்துவ வித்தகர்' என்ற பட்டத்தையும் 2004ல் பலப்பிட்டிய நலன்புரிச் சங்கம் 'தாஜுல்லிஸான்' (நாவேந்தர்) என்ற பட்டத்தையும் இவருக்கு வழங்கின. முன்னாள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் அவர்கள் இவருக்கு 'பத்ருல் மில்லத்' என்று போற்றி கௌரவித்துள்ளார்.

தனது இலக்கிய முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் என்று கவிமணி எம். எச். எம். புஹாரி, பாவலர் சாந்தி முகைதீன் ஆகியோரைக் குறிப்பிடுகிறார் பௌஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி பௌஸ் 'பா' என்ற பெயரில் ஒரு கவிதைப் பத்திரிகையும் நடத்தியவர் என்பது முக்கியமான செய்தி. மித்திரனில் அவர் தொடர்ந்து எழுதிவந்த கட்டுரைகள் 'மார்க்கத்தின் மனக் கதவு' எனும் தலைப்பில் ஒரு நூலாக கூடிய விரைவில் வெளிவர வுள்ளது. கவிஞராகவே இலக்கிய உலகுக்கு வந்த பௌஸ் தனது கவிதைகளையும் ஒரு தொகுப்பாக வெளிக் கொணர வேண்டும்.

தற்போது பாணந்துறையில் வசித்துவரும் காததான்குடி பௌஸ், 1959ம் ஆண்டு ஏ. பி. உதுமாலெப்பை, ஹஸீனா தம்பதியின் புதல்வனாகப் பிறந்தவர். காத்தான்குடி அல்ஹிறா வித்தியாலயம், மத்திய மகா வித்தியாலயம், ஜாமியத்துல் பலாஹ் அறபுக் கல்லூரி, அட்டாளைச் சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார். காத்தான்குடியைச் சேர்ந்த ஐனுல் ரிபாயாவைக் கரம் பிடித்த பௌஸ் தம்பதிக்கு முகம்மத் ஸைனி எனும் மகனும் உள்ளார்.

இலங்கையில் ஆயிரக் கணக்கில் மார்க்க அறிஞர்கள் உள்ளனர். அவர்களில் இலக்கிய ஆர்வமும், திறனும் கொண்டவர்கள் தொகை மிகவும் சொற்பமானது. அதிலும் பல்வேறு துறைகளிலும் பிரகாசிக்கக் கூடியவர்களாக மிகச் சிலரையே நாம் அடையாளம் காண முடியும். அந்த மிகச் சிலரில் ஒருவராகவே காத்தான்குடி பௌஸ் திகழ்கிறார்.

இவ்வண்ணம், யாத்திராவுக்காக.....

**தேசகீர்த்தி, சாமஸ்ரீ**
**அல்ஹாஜ் ஏ. எல். எம். அஸ்வர் *J.P.***
**பள்ளிமுல்ல,**
**பாணந்துறை.**



## ஆசியுரை!

தென்னிலங்கையில் உதித்த ஜும்ஆ பத்திரிகையில் நீண்ட காலமாக தொடர் கவிதை படைத்து மக்களை சிந்தித்து செயலாற்ற வைத்த மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களின் ஆக்கங்கள் காலத்தால் அழியாதவை.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை மலர்களிலெல்லாம் அவர் எழுதிய ஆக்கம் அனைத்தையும் மிகவும் பாதுகாப்பாக வைத்து அச்சு வாகனம் ஏற்றியுள்ளார். எல்லாவற்றையும் விட அவர் வாராந்தம் ஜும்ஆ மிம்பரில் உரையாற்றும் உரைகளையும் ஆவணப்படுத்தியுள்ளார்.

தனது பேனையினால் சமுதாயத்தில் ஏற்பட்ட குளறுபடிகளை குறிவைத்தெழுத அவர் தவறவில்லை. தென்மாகாணத்தில் பௌஸ் மௌலவி அவர்களை அறிமுகப்படுத்தும் வாய்ப்பு முதலில் எனக்கே கிடைத்தது.

எமது ஜும்ஆ பத்திரிகையில் ''தூக்கம் தரும் குத்பா ஊக்கம் தரவேண்டும்'' என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆக்கங்கள் அந்த காலகட்டத்தில் எழுத்துலகில் பெரும் விறுவிறுப்பை ஏற்படுத்தியது.

பௌஸ் மௌலவியின் ஊடகப் பிரபலம் அவரின் வாழ்வில் பல நேயர்களை தோற்றுவித்தது. அவரின் எழுத்துப்பணி தொடர வாழ்த்தி போற்றி பிராத்திக்கிறேன்.

**கவிஞர் பலப்பிட்டி அரூஸ்**
**பிரதம ஆசிரியர் ஜும்ஆ**
**பலப்பிட்டிய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை!

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம் !

எனது ஆக்கம் பத்திரிகையில் வந்து விட்டால் அன்றைய நாள் எல்லாம் சந்தோஷத்தில் மிதப்பேன். அந்தச் செய்தியை இன்னொருவர் பார்த்து கூறிவிட்டால் பத்திரிகையைத் தேடி.... ஆக்கத்தை கட் பண்ணி கைக் கெடுத்துவிடுவேன். உடனே எனது அல்பத்தில் ஒட்டி விடுவேன். ஆக்க்ங்களை தவறவிட்டு மைல் கணக்கில் செலவு செய்து தேடிப்பெற்ற நாட்களும் உண்டு.

வானொலி ஆக்கங்களை பாதுகாப்பேன். வானொலியில் எனது குரல் காற்றுடன் கலக்கும் போது..... நான் எங்கோ கடமையில் ஈடுபட்டிருப்பேன் அல்லது தொழுகை மதரஸா என்று... வானொலியை விட்டு தொலைவில் இருப்பேன். அப்போதெல்லாம்.... எனது துணைவியார் அதனை ஒலிப்பதிவு நாடாவில் ஒன்றும் விடாமல் பதிவு செய்திருப்பார்.

சில காலம் மனைவியும் வேலைப்பளுவில் பதிவு செய்யத் தவறும்போது மனதில் வேதனைக் கனைகளைச் சுமப்பேன். அப்படி ஒரு நாள் ஆழ்ந்த கவலையில் இருக்கும் போது.... பலப்பிட்டியில் இருந்து ஒரு தொலைபேசி உங்கள் வானொலிப் பேச்சை பதிவு செய்திருக்கிறோம், மக்கத்துக்கே போய்விட்ட ஒரு திருப்தி. கண்கள் மலர்ந்தன. அவாதான் மாணவர் மின்சர் பதுளைக்கு ஒரு முறை போயிருந்தேன். ஒரு வருடத்துக்கு முதல் நான் பேசிய உரையை வானொலியில் ஒலிப்பதிவு செய்து ஜனாபா பரிதா ஸிறாஜ்தீன் எனக்கு போட்டுக் காட்டினார்.

என் மனசு இஸ்லாமிய ரசிகர்களை எனக்கு இனம்காட்டி தந்தது. பாணந்துறையில் ஒரு பலப்பிட்டியைச் சேர்ந்த நண்பர் உள்ளார். அவர் அடிக்கடி ஒலிப்பதிவு செய்து நான் போகும் போதெல்லாம் எனக்கு அதனை போட்டுக் காட்டுவார். அவர் சகோதரர் மிப்றாரி முஹர்ரம் வானொலி நேரடி நிகழ்வில் கவிதை சொன்ன போது... எதேச்சையாக காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமாவில் பாடிய கவிதை அது.. அதனை காத்தான்குடி நண்பர் முகைதீன் ஒலிப்பதிவு செய்திருந்தார். காலம் கடந்து அதனை போட்டுக் காட்டினார்.



தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் அப்படியேதான். இலங்கையிலுள்ள அதிகமான தொலைக்காட்சிகளில் உரையாற்றியுள்ளேன். என்னால் ஒளிப்பதிவு செய்ய முடியவில்லை. ஒரு முறை எழுத்தாளர் எம். கே. எம். அஸ்வர் ஒளிப்பதிவு செய்திருந்தார். அத்தனை சேகரங்களின் முடிவே இந்நூலாகும்

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆக்கங்களைப் படைக்க உதவியாக இருந்தவர்களை ''ஊடகங்களில் உதித்த உபதேசங்கள்'' எனும் இந்நூலில் கட்டுரைகளின் கடைசியில் ஞாபகம் செய்துள்ளேன்.

இந்நூலுக்கு முகவுரை வழங்கிய அல்ஹாஜ் என். எம். அமீன் அறிமுக உரை எழுதிய அல்ஹாஜ் எம். இஸட் அஹ்மத் முனவ்வர், அணிந்துரை வழங்கிய அல்ஹாஜ் ஏ. ஆர். எம். ஜிப்ரி, சிறப்புரை வழங்கிய எம். கே. எம். அஸ்வர், ஆசியுரை வழங்கிய பலப்பிட்டி அரூஸ் - யாத்ரா வெளிச்சம் தந்த அல்ஹாஜ் ஏ. எல். எம். அஸ்வர், அட்டைப்பட அறிமுகம் செய்த எம். எச். எம். அஸ்லம், (லண்டன்) பின் அட்டை அறிமுகம் தந்த கவிஞர் எம். ஐ. எம். ஜாபிர், இதனை சிறப்புற அச்சிட்டுத் தந்த ஜனாப் ஸயீத் அஹ்மத் நழீம், இந்நூலினை சரிபார்த்த அல்ஹாஜ் ஏ. எல். எம். சத்தார் (நவமணி) இந்நூலுக்காக நாளும் உழைத்த எனது மனைவி ஹாஜியானி ஐனுல் றிபாயா, எனது மகன் அல்ஹாஜ் எம். எப். எம். ஸைனி ஆகியோருக்கும் நன்றி கூறுவதுடன் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளில் எனக்கு கட்டுரை ஏற்பாடுகள் செய்து தந்த அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் இந்நூலை வாங்கி வாசிக்கும் தூய நெஞ்சங்களுக்கும் நன்றி கூறுகின்றேன். எனக்காக பிராத்தனை செய்யும்படி வேண்டுகிறேன்.

**இவ்வண்ணம்,**
**மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்கி)**
**"ஸைனி மன்ஸில"**
**23/6, வத்தல்பொல வீதி,**
**பாணந்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 01. | மேற்கத்தேய உணவு முறை முஸ்லிம்களைக் கவர்கிறதா? | 01 |
| 02. | போதைப் பழக்கத்தைத் தடுக்க மாநபியினைப் பின்பற்ற வேண்டும் ! | 04 |
| 03. | திக்ர் மாத்திரம் செய்து தொழுகையை கைவிடலாமா? | 07 |
| 04. | இமாம் புஹாரி (ரஹ்) வரலாறு! இலங்கையில் புஹாரி மஜ்லிஸ் தோற்றம்! | 09 |
| 05. | அடியானின் கோபம் அல்லாஹ்வின் கோபத்தை நெருங்கும் ! | 12 |
| 06. | பணிவான தன்மையே பயன் தரும் வாழ்வு! | 14 |
| 07. | வறுமை பட்டோருக்கு வாரி வழங்குவோம் ! | 16 |
| 08. | பெற்றார் பிள்ளை உறவு பேணுவோம் | 19 |
| 09. | முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவோம்! | 21 |
| 10. | மற்றவர் மனதை மாசுபடுத்தாதே ! | 24 |
| 11 | கல்வியில் முஸ்லிம்களின் பங்களிப்பு ! | 27 |
| 12. | இமாம் ஜஃபர் ஸாதிக் (ரலி) அவர்கள் ! | 31 |
| 13. | இஸ்லாமிய இளைஞர்களின் நோக்கும் போக்கும் ! | 34 |
| 14. | உலக சமாதானத்திற்கு இஸ்லாம் கூறும் வழிகள் ! | 38 |
| 15. | இஸ்லாம் காட்டும் ஹலாலான உணவு முறை ! | 40 |
| 16. | விசால மனசுக்கு விட்டுக்கொடுப்பே முக்கியம் ! | 42 |
| 17. | இஸ்லாமிய பார்வையில் தானதர்மம்! | 45 |
| 18. | சாந்தி சமாதானத்திற்கு சன்மார்க்கம் கூறும் வழி ! | 47 |







| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 19. | பொது நோக்கு! | 49 |
| 20. | குர்ஆன் மதரஸாக்களின் குறைபாடு ! | 51 |
| 21. | சமூக ஒற்றுமைக்கு இஸ்லாம் கூறும் வழிகள்! | 53 |
| 22. | சுத்தம் பற்றி இஸ்லாம் கூறுவது என்ன? | 55 |
| 23. | ஸஹரின் மகிமை! | 57 |
| 24. | புனித பத்ர் யுத்தம் நினைவு ! | 59 |
| 25. | ரமழானின் முந்திய 10ல் ரஹ்மத்தின் முக்கியத்துவம் ! | 64 |
| 26. | அண்ணலாரின் அழகிய முன்மாதிரிகள் ! | 68 |
| 27. | நன்றி மறப்பது நன்றல்ல! | 73 |
| 28. | பெற்றாரைப் பேணு! | 74 |
| 29. | பேராசை பெரும் நஷ்டம் ! | 75 |
| 30. | பிறரை நேசிக்கும் முஃமீன்! | 76 |
| 31. | வியாதியஸ்தரை விசாரிப்பது சிறப்பு! | 77 |
| 32. | சுருங்கப் பேசுவதே சுகமானது ! | 78 |
| 33. | முந்தைய சமயங்களின் நோன்புக்கும் முஹம்மது நபியின் நோன்புக்கும் வித்தியாசம் என்ன? | 80 |
| 34. | இறை தூதரின் இறுதி ஹஜ் உபதேசங்கள்! | 84 |
| 35. | ஹஜ் முஸ்லிம்களின் சர்வதேச மாநாடு! | 88 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 01. மேற்கத்தேய உணவு முறை முஸ்லிம்களைக் கவர்கிறதா?

மேற்கத்தேயக் கலாசாரம் பாரம்பரியம் இன்றைய உலக நாட்டு மக்களின் உணவு, உடை, சமயம், வாழ்க்கை என்பவற்றில் கதிர்வீச்சு வேகத்தில் தாக்கிவருகின்றது. ஆடம்பர வாழ்வின் அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட அநாகரிகப் போக்குகளை நாகரிகமெனக் கருதி நாளுக்கு நாள் தங்கள் வாழ்வையும் இப்பாதையில் இட்டுச் செல்பவர்கள் ஏராளமாகும்.

மேற்கத்தேயத்தில் உள்ள ஒளிக்கதிர்களில் கவரப்படாதே நல்ல ஒளிச்சிதறல்களை விட்டும் விடாதே என கவிஞர் அல்லாமா இக்பால் அறிவுரை பகன்றார். ஆங்கிலேய நாடுகளின் அமைப்புகள் அனைத்தையும் சரி காணுகின்ற நிலை நம்மிடையே உருவாகி விட்டது. மனித வாழ்வின் வளர்ச்சிக்குப் போதுமான உணவு கிடைப்பது அவசியமான ஒன்றாகும். உணவை உட்கொள்வோருக்கு ஆத்மீகம், நாகரிகம், சுகாதாரம் போன்ற சிறப்பான வழிமுறையை ஏந்தல் நபி (ஸல்) எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

சாப்பாட்டிற்கு முன்னர் இருகைகளையும், வாயையும் கழுவி நிலத்தில் விரிப்பு விரித்து உணவுப் பாத்திரங்களைக் கீழே வைத்து முந்திய அத்தஹிய்யாத்தில் இருப்பது போல் வலது காலை மடித்து நாட்டிக் கொண்டு இடது காலின் மீது இருந்தோ, குந்திய வண்ணமோ, சாப்பிட வேண்டும். கதிரையில் இருந்து சாப்பிடுவது தடுக்கப்படாது விட்டாலும் சாய்ந்து, படுத்து உணவுண்பது விரும்பப் படவில்லை.

தனித்து உணவுண்பதை விட பலர் இணைந்து நல்லதை பேசி உணவுண்ணுதல் விரும்பத்தக்க செயலாகும். சாப்பிடுமுன்னர் பிஸ்மில் சொல்வது, பக்கத்திலுள்ளவர்கள் கேட்க சப்தமாகச் சொல்வது பிஸ்மில் சொல்ல மறந்து இடையில் ஞாபகம் வருமிடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆஹிறஹு எனச் சொல்வது சிறு சிறுகவளங்களாக வாயிலிட்டு மெண்டு உண்பது அதன் பின்னர் அடுத்த கவளத்தை எடுப்பது, கழிவுப் பொருட்களை பாத்திரத்தில் வைக்காது வேறு இடத்தில் வைப்பது போன்ற நல்ல அம்சங்களை இஸ்லாம் தமது அன்றாட உணவு முறைக்குக் கற்றுத் தந்துள்ளது.

உண்ணுங்கள் பருகுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள் என்பது அண்ணலாரின் அமுது மொழியாகும். இன்றைய நமது தனிமையான கூட்டான சாப்பாட்டு வழக்கங்களும் குறிப்பாக ஹோட்டல்களில் நடைபெறும் விருந்துண்ணும் முறைகளும் மேற்கத்தேயப் பண்பாடுகளை மேவக் கூடியதாக அமைந்துள்ளது.

கைகழுவிச் சாப்பிடுகின்ற அமைப்பு முறை மாறி குத்துவதற்கும், குடைவதற்கும், வெட்டுவதற்கும், விழுங்குவதற்குமான பல்வேறு கரண்டிகளால் உண்ணுகின்றனர். தனிவீடுகளைத் தவிர ஹோட்டல்களிலிருக்கும் கரண்டிகள் எத்தனையோ மனிதர்களின் வாய்களில் புகுந்து வெளிவந்தவையாக இருக்கின்றன.

பிஸ்மில் சொல்லி நல்லதைப் பேசி உண்ணவேண்டிய இடத்தில் பல்வேறு மொழியிலான கேலிப் பாடல்களை ஒளிப்பதிவு பெட்டிகள் மூலம் கேட்ட வண்ணமும் ஆபாசப் படங்களை போட்டுவிட்டு அதன் ரசனையில் சாப்பிடுவோரும் எச்சில்களையும், கழிவுகளையும் பீங்கானில் நிரப்பி கொஞ்சம் உண்டு மிச்சத்தை வீசுபவர்களும் பெருகி வருகின்றார்கள். அதே வேளை அதிகமாகச் சாப்பிடுவதற்காக ஹறாமாக்கப்பட்ட போதைப் பொருட்களான கஞ்சா தூள், லேகியம் போன்றவற்றை முன் கூட்டியே பாவிக்கின்றனர். இது இளைய தலைமுறையைப் பெரிதும் பாதித்துள்ளது.

ஹோட்டல்களில் நடைபெறும் வீண்விரயம் மிகக் கூடுதலாக காணப்படுகின்றது. வயிறு புடைக்கச் சாப்பிட்டு ஏப்பம் விடும் நிலையிலுள்ளவர்களை வைத்திய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களையும் தலையைக் காட்டிவிட்டு போய் என வரும் தனவந்தர்களையும் அழைத்து படைக்கப்படும் உணவுகள் கொஞ்சம் சுவைத்து கொட்டிவிடப்படுகின்றது. சாப்பிடும் வேளையில் இசை பிரியர்களின் ஏற்றத் தாழ்வான இசை மீட்டல்களுக்கு ஏற்ப பல்வேறு குடிபானங்களை சாய்ந்திருந்து பருகுவோரும் தொலைக்காட்சி



படப்பிடிப்பு நடைபெறும் போது சமைத்த கோழிகளைக் கையில் தூக்கி கமராமேனுக்கு போஸ் கொடுப்பதையெல்லாம் வெளியே இருந்து பசியுடன் பார்க்கின்ற ஏழைகளின் நெஞ்சம் பற்றி எரிகின்றது.

ஆடம்பரமான முறையில் அலங்கரித்து லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து நடைபெறும் திருமணங்களை ஹோட்டல்களில் பக்கத்திலுள்ள ஏழைகளான சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரிகள் கண்டு பெருமூச்சு விடுகின்றனர்.

சாப்பாட்டின் முடிவில் சாப்பாட்டை ஏற்பாடு செய்தவருக்கும் அல்லாஹ்வுக்கும் நன்றி கூறும் இஸ்லாமியப் போக்கு மாறி மேசையில் இருக்கின்ற சமையல்களை குறை கூற ஆரம்பிக்கின்றனர். திருமணத்தின் இறுதியில் கழிவு உணவுகளை குழி தோண்டிப் புதைக்கின்றனர்.


இன்றைய முஸ்லிம்கள் பிறநாடுகளில் கடைப்பிடிக்கும் உணவுப் பரிமாற்றங்களிலிருந்தும் வேறுபட்டு இஸ்லாமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொள்வார்களாயின் எல்லா வர்க்கத்தினரும் இதமாக வாழ இஸ்லாத்தை நிலைநாட்ட வழியேற்படும் என்பதில் சந்தேகமில்லை.

**நன்றி : தினகரன்**
**ஆலமுல் இஸ்லாம் – 1985 ஜுன்**
**ஏற்பாடு: அல்ஹாஜ் என். எம். அமீன்**

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 02. போதைப் பழக்கத்தைத் தடுக்க மாநபியினைப் பின்பற்ற வேண்டும் !

இன்பமும், துன்பமும் மாறி மாறி வருவதே வாழ்க்கை. இன்பத்தை அனுபவிக்க பழக்கப்பட்ட மனிதன் துன்பத்தையும் சகிக்க பழகிக் கொள்ள வேண்டும். மாறாக சுயநினைவில் ஏற்படுகின்ற சிந்தனைகளை கலைப்பதற்கு பல்வேறு முடிவுகள் ஏற்படுகின்றன. துன்பத்துக்கு ஈடுகொடுக்க முடியாத தூக்குக் கயிற்றில் தூங்குபவர்கள் தூக்கமாத்திரைகளை உண்டு மரணத்தை தழுவுபவர்கள், தீக்குளிப்பவர்கள், ஏக்கப் பெருமூச்சு விட்டு கடலில் மிதப்பவர்கள் இதன் பாதையிலேயே நினைவுகளில் இருந்து நீங்கியிருக்க மது வகைகளை உபயோகித்து போதைநிலையினை அடைகின்றனர்.

போதை பொருளை அருந்துபவர்களில் பொரும்பாலானோர் காரணம் புரியாமலே அருந்துகின்றனர். பாட்டுக்கு ஆடுபவர் ஆட்டக்காரர் பாட்டில்லாமல் ஆடுபவர் போதைக்காரர். மது பாவனத்தை பாவிக்க ஆரம்பகாலமுதல் மனிதன் கற்றுக் கொண்டான். ஆயிரத்திநானூறு ஆண்டுகளுக்கு முன்னர் அல்குர்ஆன் மது போதையை தடை செய்தது. மாநபி (ஸல்) அவர்கள் மது பானத்தை ஒழித்துக்கட்ட மட்டற்ற சிரமத்தை மேற்கொண்டார்கள். வெற்றியும் கண்டார்கள். அன்றைய அரபு நாட்டு மக்கள் மது ஜாடிகளை தெருவில் உடைத்து எறிந்தார்கள். அரபு நாட்டு வீதிகள் மதுவெள்ளமாகக் காட்சிதந்த நாட்களுமுண்டு. அண்ணல் நபியின் கூற்றை ஏற்று அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட்டார்கள்.

இஸ்லாமிய ஷரீஆவில் பற்றற்று வாழ பின்வந்த சந்ததியினர்கள் தலைப்பட்டார்கள். நாளடைவில் மது பழக்கத்தை படிப்படியாகத் தொடர ஆரம்பித்தனர். அதன் விளைவாக மடியில் கிடத்தி பாலூட்டிய தாயை குடித்துவிட்டு பேயென நினைத்து அடிப்பதையும் மனைவியையும், மக்களையும் துணிச்சலுடன் துரத்தி அடிப்பதையும் போதையின் போது பாதையில் வீழ்ந்து கிடந்து புத்திமாறிப் போவதையும் பார்க்க அசிங்கமாக இருக்கின்றது.

மது போதையைத் தரக்கூடிய அனைத்தும் ஹறாம் என மாநபி (ஸல்) சொன்னார்கள். தென்னையிலிருந்து - பழவர்க்கத்திலிருந்து வடிக்கப்பட்ட கள்ளு, சாராயம், கசிப்பு, பிறைண்டி, விஸ்கி வகைகளுடன் கஞ்சா, அபின், தூள் இப்படியாகத் தொடர்ந்து இன்று போதை வஸ்துக்கள் பொடிகளாக மாற்றப்பட்டு மூக்கில் பிடித்ததும் மயக்க முறுகின்ற புதிய நிலைக்கு அறிவு முன்னேற்றம் கண்டிருக்கின்றது. முற்றிலுமே போதைப் பழக்கம் இல்லாதவர்களும் விமானங்களில் ஏறியவுடன் உணர்வூக்கத்தால் குடிக்க பழகிக்கொள்வது கவலைக்கிடமானது. இதே பழக்கம் பாடசாலை மாணவர்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

உயர் கல்வி பெற வேண்டுமென எதிர்பார்த்த மாணாக்கன் மயக்க நிலைபெற்று வருவதைக் காணமுடிகின்றது. எந்த சமுதாயத்திடம் இஸ்லாத்தையும் எதிர்காலத்தையும் நம்பினோமோ அவர்கள் இந்த அழிவில் சிக்கி சோபை இழக்கின்றனர். கஞ்சாவின் மூலம் தயாரிக்கப்படும் பங்கு சிலும்பி, குடாக், சம்சி, டல்கோப்பி, தூள், லேகியம், சுருட்டு போன்றவற்றில் கடின உழைப்பாளிகள் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர். கலியாணம், கத்னா வைபவங்களின் போது கண்விழித்து வேலைகள் செய்வதற்கு ஆண்கள் இதனை பாவித்து கண் மூடியே தூங்கிவிடுகின்றனர்.

சிலர் நன்றாக பசி ஏற்படவேண்டும் என்ற நோக்குடன் இதனை புசித்து காலநேரம் தெரியாமலேயே கண் அயர்ந்து விடுகின்றனர். இன்னும் சிலர் ஞானம் பிறக்கும் என இவற்றை உண்டு அஞ்ஞானத்திலே மூழ்கி விடுகின்றனர். நிலாச் சோறு தின்ன நிம்மதியாகக் கடலோரம் செல்பவர்கள் கண்டிப்பாகவும் பாவிக்கின்றனர்.

முஸ்லிம் கவிஞர் ஒருவர், பாவிக்கக்கூடாத போதைப் பொருட்கள் பற்றி இப்படிப் பாடுகின்றார். ''சுருட்டுப் புகைக்காதப்பா சோரும் மனத் தோழமையே கூடாதப்பா - கஞ்சா, அபின், கள்ளு குடிபானத்தைத் தள்ளு. அஞ்சாதறிவைக் கொள்ளு. அகம் விரும்பித் துள்ளு'' என்கின்றார்.

பெரிய பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி விடுகின்றனர். பல்கலைக் கழக மட்டத்தில் உள்ளவர்களையும் குடிப்பழக்கம் விட்டுவைக்கவில்லை.

அரபு நாடுகளில் கடலோரங்களில் உள்ள பெரிய ஹோட்டல்களில் இஸ்லாமிய அரசியலில் ஈடுபடும் பெரிய புள்ளிகளின் பெண்மக்கள், ஆண்மக்கள் போதை மயக்கத்தில் ஹோட்டலை விட்டே வெளியேற முடியாமல் தவிக்கின்றனர்.

இறுதியில் ஹோட்டல் உயர்பீடம் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு பாதுகாப்பாக மஸ்துப்பிடித்த மக்களை அனுப்பி வைக்கின்றனர். பெரிய இடத்து விவகாரங்கள் கடல் குளிப்பு, நீச்சல் தடாகக் குளிப்பு, விளையாட்டு, போதையென்ற நிலைபாட்டுக்கு மாறிவிட்டனர்.

இஸ்லாத்தின் பார்வையில் யார் எவர் என்பதல்ல குற்றம் செய்பவர்கள் அனைவரும் திருந்த வேண்டும் என்றே எதிர்பார்கின்றது. மதுக்கலாச்சாரத்தில் மயங்கிக் கிடக்கும் நம் சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும்.

திறந்த கண்ணுடன் செயல்படும் தீனுடைய பணியாளர்கள் இறுக்க மூடிய போதைக்காறர்களின் கண்களைத் திறக்க வேண்டும். மது மயக்கத்தில் கலிமா நாவில் வருவதில்லை. நாவில் குடியை நனைப்பதைத் தடுத்து நாளும் நாவில் கலிமா கரைபுரண்டோட நமது சமுதாயத்தைத் தயார்படுத்துவோம்.

வீடுகளில் குடிபான வெற்று போத்தல்களை அலுமாரிகளில் வைத்து அழகு பார்ப்பவர்கள் அந்த அசிங்கமான கலாச்சாரத்தை அடியோடு மறந்து ஆக்கபூர்வமான புத்தகங்களை அலுமாரியில் அடுக்கிவைத்து வாசித்தால் பெறுமதியாக அமையும்.

மாநபியை பின்பற்றி போதை பழக்கத்தை மாநிலத்தில் தடுப்போமாக. இன்ஷாஅல்லாஹ்!

**நன்றி : தினகரன்**
**ஆலமுல் இஸ்லாம் – 1986**
**ஏற்பாடு: அல்ஹாஜ் என். எம். அமீன்**






## 03.
## திக்ர் மாத்திரம் செய்து தொழுகையை கைவிடலாமா?

இஸ்லாமிய உலகில் இன்று வேகமாக வெளிவரும் புத்தகங்கள், சஞ்சிகைகள், மலர்கள், மாத இதழ்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், வீடியோ நாடாக்கள்ஆகியன ஜமாஅத்கள் வாயிலாகவும், தரீக்காக்கள் வாயிலாகவும் வெளிவருகின்றன. இப் பிரசுரங்கள் மூலம் ஆக்கமான பயன்களைத் தூண்டுவதாக சிற்சில ஆக்கங்கள் அமைவதுடன் சிறிய சிறிய பிரச்சினைகளுக்காக விளக்கங்களும் வேண்டாத ஆதாரங்களும் நிரம்பியிருப்பதுடன் தொழுகை தேவையில்லை திக்ர் மட்டும் போதுமானதென வளருகின்ற பிரசாரங்களைக் கண்டு இஸ்லாமிய உலகம் கண்ணீர் சிந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ''காலையிலும், மாலையிலும்' உமதிறைவன் திருநாமத்தைக் கூறி துதி செய்து கொண்டிருப்பீராக". (அல்குர்ஆன் 76:25)

இந்த ஆயத்தை மையமாகக் கொண்டு காலையில் சிறிது நேரமும், மாலையில் சிறிது நேரமும் சிற்சிலர் திக்ருகளைச் செய்துவிட்டு தொழத் தேவையில்லை. என ஒதுங்கும் மக்களும் நம் வாழ்வில் பெருகி வருவதைக் காண்கின்றோம். காலையிலும், மாலையிலும் திக்ர் செய்து மற்றைய நேரங்களில் இறை வழிபாடு தேவையில்லை என நினைப்பது குற்றமானதாகும். இஸ்லாமியனின் அன்றாட வாழ்வு ஒரு தனிப் பெரும் இபாதத்தாகும். அந்த வாழ்வின் அத்திவாரமாகக் கொள்ளும் கலிமாவுடன், தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற பிரதான அமல்கள் நம் வாழ்வை சரியான பாதைக்கு இட்டுச் செல்வதாகும்.

இன்று வளர்ந்து வரும் சமூகத்தில் தொழுகை, நோன்புக்கு முக்கியத்துவம் கொடுக்காத அமைப்புகள் அதிகரித்தே வருகின்றன. அத்தனைக்கும் காரணம் கலிமாவை உணர்ந்ததன் பின் செய்ய வேண்டிய கடமைகளை மறந்ததேயாகும். தொழாமல் இருப்பவர்கள் ஒரு புறமிருப்பினும் குர்ஆனின் ஆயத்துகளை விளங்கிக் கொண்டே தர்க்கம் பண்ணுபவர்களும், குந்தகம் விளைவிப்பவர்களும் பெருகி வருவது மனவேதனையைத் தருகின்றது. முஹம்மத் (ஸல்) அவர்கள் காலை, மாலை திக்ர் செய்ததுடன் தன் வாழ்வில் ஏனைய அமல்களையும் விடாது கடைப்பிடித்து வந்தார்கள். காலை மாலை திக்ர் செய்த மாநபிதான் இரவு முழுவதும் பாதங்கள் வீங்க நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி உம்மத்துகளுக்கு உதாரணப் புருஷராகத் திகழ்ந்தார்கள். திக்ர் மட்டும் செய்தால் போதுமானது என நினைக்கும் சோதரர்கள் குர்ஆனின் அடுத்த அத்தியாயத்தை உற்று நோக்குவார்களாக.


''இரவிலும் அவனுக்கு சிரம் பணிந்து வணங்கி இராக் காலத்தில் நெடு நேரம் அவனை துதி கொண்டிருப்பீராக. (அல்குர்ஆன் 76-26) இவ்வத்தியாயத்தின் மூலம் இரவில் இறைவனை சிரம் பணிந்து சுஜூது செய்ய வேண்டும் என்பதை உணர முடிகின்றது. மனிதனிடத்திலே ஏற்படும் நான் என்னும் கர்வம் அப்படியே விடுபட வேண்டுமாயின் சுஜூது செய்யும் போது பூரண அப்தாக நாம் இருக்கின்றோம் என்பதையும் நமது கர்வத்தையும் மாற்றியமைக்கும்.

எல்லா நபிமார்களுக்கும் சிரேஷ்டமான நாயகம் (ஸல்) அவர்கள் திக்ர் செய்வது மட்டும் போதுமானதாக இருந்திருப்பின் இறைவன் தொழுவதை ஏவியிருக்க மாட்டான். இறைவன் முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து திக்ர் தஸ்பீஹுடன் தொழுகையையும் எதிர்பார்த்தான். அதனாற்றான் அல்குர்ஆனில்..... ''நபியே தொழுது வருமாறு நீர் உம் குடும்பத்தினரை ஏவும். நீரும் அதன் மேல் உறுதியாக இரும். நாம் உம்மிடம் யாதொன்றையும் கேட்கவில்லை எனினும் உமக்கு வேண்டியவற்றையெல்லாம் நாமே கொடுத்து வருகின்றோம். முடிவான நன்மை பரிசுத்தத்தன்மையாகும். (அல்குர்ஆன் 20-132)

தொழுகையின் மீது உறுதியாக இரும் என்பதைப் பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் கடைப்பிடித்து வந்தார்கள். மதீனாவில் பள்ளியை நிருவியும் யுத்தக் காலத்தில் 'ஸலாத்துல் கவ்ப்' பிரயாணத்தின் போது ஜம்உ கஸ்ர் போன்றவைகளை செய்து காட்டியதன் மூலமும் கடைசி ஸகறாத்தின் போதும் ஸஹாபாத் தோழர்களின் உதவியுடன் தொழுகையை நிறைவேற்றியதும் அவர்கள் தொழுகையை பேணி வந்த முறையைக் காட்டுகின்றது. எனவே திக்ர் மட்டும் செய்துவிட்டு சும்மா இருந்து சுவனம் போகலாம் என நினைக்கும் சோதரர்கள் நபி அவர்களை விடப் பெரியவர்கள் எவருமில்லை என்பதை உணர்ந்து ஐங்காலத் தொழுகைகளையும் வாராந்தம் ஜும்ஆ கடமைகளையும் ரமழானில் நோன்பு போன்ற கடமைகளையும் செய்வதுடன் இதர அனுஷ்டானங்களையும் செய்து இஸ்லாமிய ஷரீயாவைக் கைக்கொண்டு இறைதூதர் வழி செல்வோமாக.

**நன்றி : தினகரன் - 01-11-1991**
**ஏற்பாடு: அல்ஹாஜ் என். எம். அமீன்**






## 04. இமாம் புஹாரி (ரஹ்) வரலாறு! இலங்கையில் புஹாரி மஜ்லிஸ் தோற்றம்!

சோவியத் ரஷ்யாவில் புஹாரா எனுமிடத்தில் ஹிஜ்ரி 194ல் பிறந்தவர்களே இமாம் இஸ்மாயில் புஹாரி (ரஹ்) அவர்களாவார்கள். மிக மனன சக்தி நிரம்பிக் காணப்பட்ட இவர் சிறு வயதில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்தார்..தனது அன்புத் தாயுடன் இளம் பிராயத்தில் புனித மக்காவுக்கு சென்று அங்கேயே தங்கி விட்டார்கள். இஸ்லாமிய சட்டக்கலையான பிக்ஹ் கலையை முறையாக பயின்றதோடு முஹத்தீஸ்களான இஸ்காக் இப்னு றாஹுய்யா அலிஇப்னு மதனி ஹுதையா இப்னு ஸஈது அஹ்மத் இப்னு ஹம்பல் போன்ற ஆசிரியர்களிடம் ஹதீஸ் கலையைச் செம்மையாக பயின்றார்.

பெருமானாரின் ஹதீஸ் கலையைத் திரட்ட பாடுபட்ட இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் ஹிஜாஸ் கூபா பஸ்ரா குராஸான் குவாரிஸம் முதலான நாடுகளுக்குச் சென்று 1080 நபர்களிடம் ஹதீஸினை ஒன்று திரட்டினார்.மிக நம்பகரமானதாகக் கண்ட ஹதீஸ்களை குளித்ததன் பின்னர் இரண்டு றக்அத் சுன்னத் தொழுது எழுதினார்கள்.ஆறுலட்சம் ஹதீஸ்களை ஒன்று திரட்டி பத்தாயிரம் ஹதீஸ்களை தரம்பிரித்து 7275 ஹதீஸ்களை வடித்தெடுத்து பதினாறு வருடங்களாக சிரமப்பட்டு ஸஹீகுல் புஹாரிஎனும் நூலைத் தொகுத்தார்கள்.

இந்நூலை தொகுத்து ரஷ்யாவில் புஹாறா எனும் ஊரில் வகுப்பு நடத்தினார்கள்.இமாம் அவர்களிடம் 90000 மாணவர்கள் கல்வி பயின்றார்கள்.இத்தகைய மாணவர்களில் இமாம் திர்மிதி, இமாம் நஸயீ, இமாம் முஸ்லிம், இப்னுஹுஸைமா, முஹம்மத் இப்னு நஸ்ர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

புஹாறாவின் அமீர் காலித் இப்னு அஹமத் இமாமவர்களது நூலை தனது அவையில் வந்து அரங்கேற்றும் படி கூறி ஏவலாளர்களை இமாம் புஹாரி அவர்களிடம் அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாமவர்கள் இதற்கு இசையாது போகவே புஹாறாவை விட்டு வெளியேறும் படி இம்சிக்கப்பட்டார்கள். சமர்க்கந்துக்கு தஞ்சமடைய எண்ணிய இமாமவர்கள் சமர்க்கந்துக்கு போகும் போது குர்தங் எனுமிடத்தில் ஹிஜ்ரி 256ல் வபாத்தானார்கள்.

**இலங்கையில் புஹாரி ஷரீப்**

பேர்வளை மாழிகாச் சேனையில் புகழ் பெற்ற சூபிகளாகத் திகழ்ந்த ஷைகுநாயகம் ஹாஜி முஸ்தபா ஆலிம் (ரஹ்) அவர்கள் தென்னிந்தியா காயல்பட்டணம் சென்று மார்க்ககல்வி பயின்ற இவர்கள் பெரியார் ஷைகு அஹ்மத் இப்னு முபாறக் மௌலானாவைச் சந்தித்தார்கள். அதன் பின்னர் அன்பு வேண்டுதலுக்கிணங்க முபாறக் மௌலானா அவர்கள் இலங்கைக்கு வந்தார்.

18ம் நூற்றாண்டில் ஷைகு முஸ்தவாப்பா நாயகம் அவர்களும் முபாறக் மௌலானா அவர்களும் கேகாலையிலுள்ள அம்பை எனும் ஊரில் நல்லடக்கம் பெற்றிருக்கும் ஆரிபுபில்லாஹ் காமில் ஒலிநாயகம் ஷைகு ஸய்யித் ஸாதாத் அக்கீல் முஹம்மத் வலியுல்லாஹ் அவர்களின் ஸியாறத்தைத் தரிசித்தார்கள்.

இதே இடத்தில் வைத்தே முபாறக் மௌலானா அவர்கள் ஷைகு முஸ்தவாப்பா (ரழி)க்கு பைஅத் கொடுக்கும் அதிகாரத்தை வழங்கி உங்கள் மூலம் நபவிய்யா தரீக்கா கியாமத் நாள்வரை பிரகாசிக்கட்டும் என நல்லுரை பகர்ந்தார்கள். காலப்போக்கில் இறையடி எய்திய முபாறக் மௌலானா அவர்கள் காலியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

முபாறக் மௌலானாவின் பிரிவினால் சோர்வடைந்த ஷைகு முஸ்தவாப்பா நாயகம் தொடர்ந்தும் மக்களை ஆத்மீகப்பணியில் அழைத்துக் கொண்டிருந்தார். இக்கால கட்டத்திலேயே அரேபியாவில் உள்ள எமன் நாட்டைச் சேர்ந்த முறாளா ஊர்வாசியான மகான் ஹஸனிப்னு அப்துல்பாரியுல் அ∴தல் மௌலானா (ரஹ்) இலங்கை வந்தார். அப்பெரியாரின் வருகையை அறிந்த ஷைகு முஸ்தவாப்பா நாயகம் அவர்கள் பெரியாரைச் சென்று சந்தித்தார். இருவர்களுக்கும் ஆத்மீகப்பிணைப்பு அதிகமாகவே இருவருமாக காலியில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கும் முபாறக் மௌலானா அவர்களின் ஸியாறத்தை தரிசித்தார்கள்.



முபாறக் மௌலானாவின் சேவையைக் கண்டு இதயம் பூரித்த அ∴தல் மௌலானா அவர்களிடம் ஏதாவது ஒரு கிதாபை பறக்கத்துக்கு தொடங்க வேண்டுமென ஷைகு முஸ்தவாப்பா நாயகம் அவாவுற்றார்கள். அதன் பிரகாரம் முன்னால் இருந்த அலுமாரியில் இருந்து கிதாபை எடுத்தார்கள். என்ன ஆச்சரியம் அதுதான் புனித புஹாரி ஷரீப். மௌலானா அவர்களும் நானும் அதே கிதாபையே விரும்பினேன் என்றார்கள்.

முதன் முறையாக இலங்கையில் புஹாரி ஷரீப் ஹிஜ்ரி 1301ம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் பிறை 27ல் சில வரையறுக்கப்பட்ட சட்டங்களுடன் முபாறக் தைக்காவில் ஆரம்பம் செய்யப்பட்டது. இதனால் பேர்வளைக்கு புகழ் கிடைத்தது. இதனை தொடங்கி வைத்த அ∴தல் மௌலானா அவர்கள் காலமும் இதனை ஓதும்படியும், கலரியை சிறப்பிக்கும்படியும் சொன்னார்கள். இவ்வமைப்பில் 18 ஊருடையவர்களை தலைமை தாங்கி நடாத்திய ஷைகு முஸ்தவாப்பா நாயகம் அவர்கள் ஹிஜ்ரி 1305 ஆண்டு துல்ஹஜ் மாதம் பிறை 17ல் இறையடி சேர்ந்து மக்காவிலுள்ள ஜன்னதுல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இதனை அடுத்து வழிவந்த மஷாயிஹ்மார்களான ஷைகு ஹாஜி முஹம்மத் ஆலிம் (ரஹ்), ஷைகு அப்துல் ஸமீஉ ஆலிம் (ரஹ்), ஷைகு முஹம்மத் ஆலிம் (ரஹ்) அத்திரில்லாஹ௸ மததுகும் ஆகியோர் புஹாரி ஷரீப் மஜ்லிஸை நடாத்தி வந்தார்கள்.

தற்போது அவ்வழித்தோன்றலின் ஐந்தாவது தலைமுறையான அல் ஆலிமுல் பாழில் அஷ்ஷைகுல் காமில் அஹ்மத் ஆலிம் அவர்கள் மஜ்லிஸை முன்னின்று நடாத்தி முப்பது தினங்களும் உபந்நியாசம் செய்து வைபவத்தை சிறப்பிக்கின்றார்கள்.


இந்த புகாரி பெரிய கந்தூரிக்கென வெள்ளைக்கார ஆட்சிக்காலம் முதல் விசேட புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது. காத்தான்குடி மீராஜும்ஆப்பள்ளி, முஹைதீன் ஜும்ஆப்பள்ளி, மூதூர் ஜும்ஆப்பள்ளி, அட்டாளைச்சேனை ஜும்ஆப்பள்ளி ஆகிய இடங்களில் புகாரி ஷரீப் ஓதப்பட்டு கந்தூரிகள் சிறப்பாக வழங்கப்படுகின்றன.

புகாரி கந்தூரியில் கலந்து கொள்ளும் நாம் நாயகம் (ஸல்) அவர்களின் பொன் மொழிகளைக் கேட்டு நன்மணிகளாக நடைபயிலுவோமாக. ஆமீன்.

**நன்றி : வீரகேசரி வாரமலர்**
**24-01-1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 05.
# அடியானின் கோபம் அல்லாஹ்வின் கோபத்தை நெருங்கும்

மனிதன் எப்போதும் சந்தோஷமாகவும், முகம் மலர்ச்சியாகவும் இருக்க வேண்டும். அடிக்கடி கோபப்படுவது ஒரு மு.'.மீனுடைய குணமாகாது.

நாயகம் (ஸல்) கூறினார்கள். கத்தாளை தேனைக் கெடுப்பது போல கோபம் ஈமானைக் கெடுத்துவிடும் என்றார்கள். ஈமானுடைய மனிதனது அகமும், முகமும் எப்போதும் மலர்ச்சியுடனேயே காணப்படும்.

காலையிலே கண்விழித்து நம்முன்னே நடமாடும் தாய், தகப்பன், மனைவி, பிள்ளைகளை அன்பாகவும் ஆதரவாகவும் உரையாடி பழகிக் கொள்ள வேண்டும்.

காலையிலேயே பாடசாலை செல்வதற்காக ஆயத்தம் செய்கின்ற நமது குழந்தைகள் சிறிய வயதின் மிடுக்கினால் அழுவார்கள். அடம்பிடிப்பார்கள். இதனால் பெற்றார்கள் கோபப்பட்டுவிடாமல் அவர்களின் வயது, சிறிய மனசு என்பனவற்றை உணர்ந்து அன்புடன் அறிவுரை கூறவேண்டும்.

ஆறுதலாக அவர்களை அணைத்துக் கொள்ள வேண்டும். மாற்றமாக விடியக்காலையிலேயே சிறுவர்களை அடித்தும், ஏசியும், கடுமையாக கோபப்பட்டும் அவர்களின் பேக், புத்தகங்களை தூக்கி வீசியும் முறையற்று சினந்து கொள்கின்றபோது அந்தக் குழந்தையின் உள்ளம் பாதிக்கப்படுகின்றது. அன்றைய தினமெல்லாம் சோர்ந்து, சுருண்டு, சோம்பலாகிக் காணப் படுகின்றனர். பாடசாலையில் இருக்கும் போது கூட காலையில் தாய் தகப்பனிடத்தில் கண்ட அந்தக் கோப சுபாவத்தை எண்ணி எண்ணி வருந்துவதுண்டு. இத்தனைக்கும் கோபம்தான் காரணமாகின்றது.



ஹஸன் (ரழி) கூறினார்கள். ஆதமுடைய மகன் அல்லாஹ்வின் கோபத்திற்கு மிக நெருங்குவது கோபம் ஏற்படும் நேரத்திலாகும். சிறிய விடயங்களுக்கெல்லாம் கோபப்பட்டு அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி கொள்வது நமது இம்மை, மறுமை வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்து விடுகின்றது.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். கோபம் ஷைத்தானின் நின்றுமுள்ளது. நெருப்பை அணைப்பது தண்ணீர், உங்களுக்கு கோபம் ஏற்பட்டால் வுளு செய்து கொள்ளுங்கள் என்றார்கள். சிறிய விடயங்களுக்கெல்லாம் கோபப்படாமல் பூரணமான மு.'. மீன்களாக மாறுவோமாக. ஆமீன்.

நன்றி :
இலங்கை ரூபவாஹினி சுப உதாசன நிகழ்சி
1993
ஒளிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் ரஷீத் எம். ஹபீழ்

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 06.
# பணிவான தன்மையே பயன் தரும் வாழ்வு!

இஸ்லாமியர்களான நம்மிடத்தில் எப்போதும் பணிவான தன்மை காணப்படவேண்டும்.ஆடம்பரமான வாழ்வும் அடக்கமில்லாத நடவடிக்கைகளும் மாற்றாரை மதியாத தன்மையும் நமது ஆத்மீக உயர்வை மாசுபடுத்துகிறது.மாறுபட்ட இனங்களிடையே வாழும் நாம் மற்றவர்களையும் மதிக்க வேண்டும்.

எவரையும் ஏறிட்டுப் பாராது முதியோரை கணம் பண்ணாது சிறுவர்களுக்கு இரக்கம் காட்டாது ஏழைகளை என்னென்று கேட்காது வாழுகின்ற வாழ்க்கை அல்லாஹ்வின் கட்டளைகளை மறந்து அடக்கமற்ற ஒரு அடியானின் செயலாகும்.

பணிவாக நடக்கின்ற மனிதனை நோக்கி அன்பும் ஆதரவும் புகழும் தேடிவரும். சமூகத்திலே மற்றவர்களால் இம்சிக்கப்பட்டு விமர்சிக்கப்படுவது ஒரு துர்ப்பாக்கிய செயலாகும். நமது ஆத்மீக வழிகாட்டியான றஸுலே கரீம் (ஸல்) அவர்கள் கூட மிக பணிவாகவே தமது வாழ்க்கையை வழிநடாத்திச் சென்றுள்ளார்கள்.

அப்துல்லாஹ் இப்னு உபய் என்பவன் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்தனையோ இடையூறுகளை விளைவித்த போதும் அவர் நோயுற்றதைக் கேள்விப்பட்ட அண்ணலார் அவரை பணிவோடு சேம நலம் விசாரிக்கச் சென்றார்கள்.

எனக்கு தீங்கிழைத்தவன் துன்பப்படுகின்றான் என்று சந்தோசமோ எனது கருத்தை ஆதரிக்காதவனுக்கு கண்டிப்பாக இந்நிலை வர வேண்டுமென கர்வமாக பேசியோ நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து கொள்ளவில்லை.



இவை மட்டுமன்றி துாரத்திலே வாழ்ந்த ஜாபிர் (ரலி) அவர்கள் நோயுற்ற போது நாயகம் (ஸல்) அவர்கள் கோவேறு கழுதையில் கூட ஏறிச்செல்லவில்லை. பாதசாரியாகவே நடந்து சென்று சுகம் விசாரித்தார்கள்.


இவையனைத்தும் இறைதூதர் (ஸல்) அவர்களின் பணிவை படம் பிடித்துக் காட்டுகின்றது.அகந்தை கொண்ட மனிதனது உள்ளம் துருப்பிடித்து இறைவனது நெருக்கத்துக்கு துாரப்பட்டு விடுகின்றது. நான் என்ற எண்ணம் கொண்டவர்கள் பிர்அவ்னின் குணபாடுகளும் செயல் பாடுகளும் உடையவர்களாக மாற நேரிடும். அல்லாஹுத்தஆலா பணிவோடு வாழ நமக்கு அருள்புரிவானாக.

**நன்றி :**
**இலங்கை ரூபவாஹினி மஜ்லிஸுல் இஸ்லாம்**
1993
**ஒளிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் ரஷீத் எம். ஹபீழ்**

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 07.
# வறுமை பட்டோருக்கு வாரி வழங்குவோம் !

புனித ரமழானின் இனிய நோன்பை திறப்பதற்காக காத்திருக்கின்ற அச்சிறப்புக்குரிய நேரத்தில் வறுமையில் வாடுகின்ற மக்களை பற்றி சிந்திப்பது மிகவும் பொருத்தமாகும்.பொருளாதார ரீதியாக வறுமைப்பட்டு வாடுகின்றவர்கள் இன்று ஆயிரம் ஆயிரமாக சந்திக்கின்றோம். இத்தகைய துன்பத்தில் வாடுகின்ற மக்களைக் கவனிக்கும் படியே இஸ்லாம் நம்மை வலியுறுத்துகின்றது.

ஸகாத் எனும் தானங்கள் தரித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் என்று அல்குர்ஆன் அழகாகக் கூறி ஸக்காத் வழங்கப்படவேண்டிய வர்க்கத்தை வரிசைப்படுத்துகின்றது. வறுமையிலிருந்து மக்களை மீட்பதற்காக றஸுலே கரீம் (ஸல்) அவர்கள் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றார்கள்.

இன்று வறுமையிலே உழலுகின்ற மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இருக்க இல்லிடமின்றி வறுமையின் கோடுகள் முகத்தில் தெரிய பசிப்பிணிகளோடு நடமாடுவதை காணுகின்றோம். வீடு வீடாக தெருத்தெருவாக அலைந்து எதையாவது பெற்று தங்கள் வாழ்க்கையை நடாத்தத் துடிக்கின்றனர்.

இஸ்லாத்தின் பார்வையில் இன்னுமொருவரிடம் கையேந்தி நிற்பதை இஸ்லாம் வெறுக்கிறது. இத்தகைய நடைமுறையிலிருந்து சமுதாயத்தை மீட்டெடுப்பது நமது கடமையாகும். வறுமையில் கொடுமை இளமையில் வறுமையென்று சொல்வார்கள். சிறிய காலமுதல் வறுமை தொடரப்பட்டவர்கள் தனது இளம்பராயத்தில் பயங்கரமான முயற்சிகளிலும் பாரதூரமான விளைவுகளுக்கும் ஆளாகுவதைக் காணுகின்றோம்.

கண்மணி றஸுலே கரீம் (ஸல்) கூறினார்கள் ''வறுமை மனிதனுக்கு குப்ரை ஏற்படுத்துகின்றது'' என்றார்கள். இந்த நாயக



வார்த்தையின் உண்மையை இன்று காணக்கூடிய சந்தர்ப்பங்கள் எம்முன்னே உருவாகியுள்ளது.

ஒரு பூரண முஸ்லிமாக வாழ்வதற்கு வாழ்க்கையில் ஏற்பட்ட வறுமையின் கொடூரங்களும் சமுதாயம் என்னவென்று கேட்காது பராமுகமாக விட்டதாலும் பணத்துக்கும் பொருளுக்கும் அடிமைப்பட்டு பலா் மதம் மாறிச்செல்கின்ற நிலமை கண்டு கண்ணீர் வடிக்க வேண்டும். இவற்றிற்காக அல்லாஹ்வின் சமூகத்தில் என்ன பதிலை முன்வைக்கப் போகின்றோம் என்பதனை சிந்திக்க வேண்டும்.

தன்னை போன்று தனது சகோதரனைக் கவனியாதவர் உண்மை விசுவாசியாக மாட்டார் என காதமுன் நபி (ஸல்) கருத்துரை வழங்கினார்கள்.விசுவாசியின் முக்கிய அமல் தான் அடுத்தவரையும் பூரண விசுவாசியாக சமூகக் கண்ணோட்டத்தில் கை தாங்கி உதவி செய்வதாகும்.நாம் மட்டும் உடுத்து மகிழ்வது இஸ்லாமல்ல மற்றவர்களும் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் அமைத்து கொடுக்க தவறக்கூடாது.

புனிதம் மிகுந்த ரமழான் மாதத்தில் வறியவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை அல்லாஹ் இயற்கையாகவே கொடுத்துவிடுகின்றான். அத்தகைய எண்ணத்தின் மூலம் சந்தோசமடைந்து மனச்சாந்தி பெறுபவர்களும் இருக்கின்றனர். சிலரது உள்ளத்தில் ஷைத்தான் புகுந்து உதவிசெய்கின்ற உந்து சக்திக்கு ஊறுவிளைவிக்கின்றான்.

இத்தகைய ஷைத்தானிய வலையில் சிக்கிக் கொள்ளாது அல்லாஹ்்க்காக எளியவர்களுக்கு கொடுக்க முன் வர வேண்டும்.நாம் வாழுகின்ற இன்றைய சமூக அமைப்பில் நமதுவீடு அயல்வீடு கிராமம் என்ற வட்டத்திற்குள் வறுமையில் துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

நமது ஊர் மிஸ்கீன்கள் அடுத்த ஊருக்குச்சென்று கையேந்தும் நிலையினை மாற்றியமைக்க வேண்டும். வறுமைப்படுபவர்களுக்கு தொழில் வசதி இல்லிட வசதி என்பனவற்றை ஏற்படுத்துவோமாயின் நாளை கியாமத் நாளில் அல்லாஹ் நமக்கு சிறந்த சுவனபதியைத் தருவான் என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுபாரில்லை. ஏழ்மைப்பட்ட அநாதைகளுக்கும் அகதிகளாகத் துன்பப்படுபவர்களுக்கும் நமது ஸக்காத் ஸதகா பித்றா போன்றவற்றிலிருந்து இப்புனித மாதத்தில் வழங்கிடுவதோடு ஸஹ்ர் செய்வதிலும் இப்தார் நிகழ்ச்சிகளிலும் ஏழைகளை அழைத்து இருத்தி அல்லாஹ்வின் அருளை பெறுவோமாக.

**நன்றி :**

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**


**முஸ்லிம் சேவை – இப்தார் சிந்தனை**

**23-01-1994**

**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**

OOOOOO





## 08.
## பெற்றார் பிள்ளை உறவு பேணுவோம் !

அல்லாஹ்வை வணங்கி அவனுக்கு இணைவைக்காது பெற்றாருக்கும் நன்றி செய்து வாருங்கள் என அல்குர்ஆனின் உதவி செய்வதற்கான அத்தியாயம் தொடர்கின்றது. உதவி செய்யப்பட வேண்டிய மானுடர்களை இனம் காட்டித்தரும் அல்குர்அன் முதலில் பெற்றாரை நமக்கு அறிமுகம் செய்கின்றது.

உலகின் கண்ணே நாம் பிறந்த உடன் தாய்ப்பால் புகட்டி, நீராட்டி, இவ்வணியை அறிமுகப்படுத்திய பெருமை நமது பெற்றோரையே சாரும். அத்தகைய அன்புக்குரிய பெற்றாரை நன்றியுணர்வுடன் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கண்மணியான றஸுலே கரீம் (ஸல்) அவர்களிடம் சிறந்த அமல் எதுவெனக் கேட்டபோது நேரத்துக்கு தொழுவது பெற்றோருக்கு நன்றி செலுத்துவதும் அல்லாஹ்வின் பாதையில் பீஸபீல் செய்வதுமாகும் என்று சொன்னார்கள்.

தாய், தகப்பனுடன் நன்றியுடன் நடந்து கொள்வது சிறந்த அமலாக இருக்கின்றது என்பதை அறிகின்றோம். பிறந்த நாள் முதல் நம்முடன் பாசமாகவும் நேசமாகவும் நடந்து கொள்ளும் பெற்றாருடன் நாமும் நேசமாக நடந்து கொள்ளவேண்டும். மாண்புறு ரமழானில் ஆயிரம் ஆயிரமாக நன்மைகளை சம்பாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் நமது பெற்றாரைப் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். நோன்பு திறப்பதற்காக தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நமது பக்கத்தில் உண்ணவும், பருகவும் எத்தனையோ பொருட்கள் இருக்கின்றன.

இதே வேளை நமது பெற்றாரின் நோன்பு திறக்கும் ஏற்பாடுகள் எப்படியிருக்கின்றது? ரமழான் முடியும் வரை அவர்களது செலவு நிலைமைகள் எப்படி? என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். நாம் மனைவி மக்களுடன் அன்பாகவும், பாசமாகவும் உண்டு, மகிழ்ந்து வாழ்வது போல பெற்றோரையும் பேணி நடக்க வேண்டும். தாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனின் பொருத்தத்திலேயே அல்லாஹ்வின் பொருத்தம் இருக்கின்றது. பெற்றாரின் துஆவிலேயே அல்லாஹ்வின் திருப்தி கிடைக்கின்றது.

முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மிம்பரில் ஏறும் போது ஆமீன் என்று மூன்று தடவைகள் சொன்னார்கள். அதற்கு பதில் சொல்லும் போது நான் மிம்பரில் ஏறும் போது ஜிப்ரயீல் (அலை) மூன்று விடயங்களை முன்வைத்தார்கள். அதற்கு நான் ஆமீன் சொன்னேன். அதில் ஒன்று தான் தனது முதுமையான தாய், தகப்பனை அடைந்து அல்லது ஒருவரையடைந்து சுவர்க்கம் புகுத வழிகாட்டவில்லையோ அவர்களும் பிரயோசனமற்றுப் போகட்டும் என்றனர். நான் ஆமீன் சொன்னேன் என்றார்கள். இந்த துஆவிலிருந்து வயோதிபம் அடைந்த பெற்றார்களை நாம் எப்படிக் கவனிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்கின்றோம்.

நோன்பு மாதத்தில் தாய் தகப்பனுக்காக உணவு வசதிகளை கவனிப்பது போன்று பெருநாள் காலத்திலும் உணவும், உடையும் வழங்கி கவனிக்க மறந்து விடக்கூடாது.

பெற்றார்கள் வசதியான நிலையில் இருந்து பிள்ளைகள் பொருளாதார வளைவு சுழிவுகளுக்குள் சிக்குண்டு தவிப்பார்களானால் அவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி பெற்றார்கள் உதவி ஒத்தாசை புரிய வேண்டும்.

பெற்றாருடன் பிள்ளைகள் எவ்வளவு அன்பாக இருக்கின்றார்களோ அதே போல் பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளுடன் அன்பாக பழகிக் கொள்ளவேண்டும். தாய் தகப்பனுடன் பிள்ளைகளும் மக்களுடன் பெற்றோரும் கதை பேச்சில்லாது கோபப்பட்ட மனஉணர்வுடன் வாழ்வோமாக இருந்தால் இந்த இனிய ரமழானிலே சமாதானமாகி சந்தோஷப்பட்டு ஒன்றிணைந்து வாழ்வோமாக.

**நன்றி :**


**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

**முஸ்லிம் சேவை - இப்தார் சிந்தனை**

28-01-1994

**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**





## 09. முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவோம்!

அறிவு ஞானம் காணாமல் போன ஒரு சொத்தாகும் அதனை கண்ட இடத்தில் பெற்றுக் கொள்ளுங்கள் என கருணை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவினை தேடிப்படிப்பது ஆண், பெண் இருபாலார் மீதும் கடமையாகும் என இன்னுமொரு ஹதீஸை இறைதூதர் (ஸல்) அவர்கள் எடுத்தியம்பினார்கள்.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை நாம் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். முந்திய காலங்களில் பெண்கள் கடிதம் எழுத, கையெழுத்துப் போடத் தெரிந்து கொண்டால் போதும் பெரிய அளவில் படிக்கத் தேவையில்லை என ஒரு காலம் இருக்கத்தான் செய்தது.

இன்று அந்த அமைப்புகள் மாறி பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் வேரூண்டியிருக்கின்றது. சின்ன வயதிலேயே ஆண் பிள்ளைகளை கடைக்கு அனுப்புவதும், பெண் பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்புவதும் தற்போது குறைந்து வருகின்றது. சிறுவர் பராமரிப்பு அமைப்புகளும், சட்டங்களும் இம்மாற்றத்திற்கு ஒரு காரணம் என்று கூடக் கூறலாம். இன்னும் ஒரு மாதத்தில் புதிய ஆண்டில் பிரவேசிக்கப்போகிறோம். அது கல்வி ஆண்டு, சிந்தனையாண்டு, இன்டநெட் யுகம் இப்படி அடுக்கிக் கொண்டு போகலாம்.

இந்த யுகத்தில் வாழப் போகும் நாம் மடத்தனங்களுக்கு மடியமைத்துக் கொடுக்காமல் கல்விக்கு ஏணியமைத்துக் கொடுக்க எம்மை நாம் மாற்ற வேண்டும்.

பாடசாலை பிள்ளைகளின் நன்மை கருதி பெற்றார்கள் அழைக்கப்படும் போது கண்டிப்பாக பெற்றார் சமுகம் கொடுக்க வேண்டும். பெற்றார் ஆசிரியர்களுக்கிடையில் இறுக்கமான பிணைப்பு இருக்க வேண்டும். அப்போதுதான் கல்வி வளர்ச்சியில் கால் ஊன்ற முடியும்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''நீ ஒரு அறிஞனாக இரு இல்லையேல் ஒரு மாணவனாக இரு இல்லையேல் கல்விக்கு உதவுபவனாக இரு நான்காம் நபராக இராதே'' என்று சொன்னார்கள்.

எப்போதும் அறிவுத் தாகமுடையவர்களாக இருக்க வேண்டும் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காமல் தனது போக்கில் போய்க் கொண்டிருப்பவர்களையும் அன்றாட வாழ்வில் சந்திக்கவே செய்கின்றோம். அவர்களைப் பற்றி சிந்திக்கவும் செய்கின்றோம்.

கல்விப் புத்துணர்ச்சி எல்லா மட்டங்களில் இருந்தும் ஊக்கமளிக்கப்பட வேண்டும். குறிப்பாக குத்பா மிம்பர்கள் கல்வி வளர்ச்சிக்காக நிறைய நிறையப் பயன்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் பிள்ளை படிக்கின்றார்கள் என்ற உணர்வுடன் மட்டும் இருக்காது எப்படிப் படிக்கின்றார்கள், எதனைப் படிக்கின்றார்கள் அவர்களது குறிப்புப் புத்தகங்கள் எப்படியிருக்கின்றது வீட்டு அப்பியாசங்களைச் சரிவரச் செய்கின்றார்களா? என்பதை நாமும் பார்வையிடுவதுடன், ஆசிரியர்களிடமும் வினவிப் பார்க்க வேண்டும். கல்விச் சுற்றுலா, கல்விக் கண்காட்சி போன்றவற்றிற்கு நமது பிள்ளைகளை அனுப்புவதற்குக்கூட தயங்குகின்ற பெற்றார்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

கல்வியில்லாத இருட்டறை வாழ்க்கையில் இருந்து பெற்றாராகிய நாம் அறிவு வெளிச்சத்துக்கு வரவேண்டும். நமது வருங்காலச் செல்வங்கள் படிக்க வேண்டும், பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற நல்ல எண்ணங்களை நாம் கருத்தில் கொள்வது அவசியமாகும்.




இன்று திருமணம், கத்னா, வீடு குடிபுகுதல் போன்ற சாதாரண நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இலட்சக் கணக்கில் செலவிடுபவர்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றார்கள். அதே வேளை கல்விக் கண்ணைத் திறப்பதற்கு வறுமையொறு தடைக்கல்லாக இருப்பதால் கல்விப் பயணத்தை தொடர முடியாது பலர் மிகவும் தவிக்கின்றார்கள்.

இத்தகைய அறிவுத் தாகத்தில் இருந்து கஸ்டப்படுபவர்களுக்கு நாம் கை கொடுத்து உதவி செய்ய வேண்டும். நமது சமூகத்தில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் எழுது விளைஞர்கள், கணக்காளர்கள், மேல்பட்டதாரிகள் போன்றோர் தொடரணியில் வெளிவர முஸ்லிம் சமுதாயம் சிந்திக்க வேண்டும்.

அரசாங்கத்தை மட்டும் காலமும் நம்பிக் கொண்டிருக்காமல் கல்விக் கூடங்கள், விஞ்ஞான கூடங்கள், பொறியியல் பயிற்சிக் கல்லூரிகள் போன்றவற்றை உருவாக்கத் தெண்டிக்க வேண்டும். நாளை நமது இஸ்லாமிய உம்மத்து கல்வியறிவு இல்லாது கை கட்டி நிற்கக் கூடாது. அதற்காக செய்ய வேண்டிய அத்தனை சிரமங்களையும் இன்று முதல் தலை மேல் கொண்டு செயல் படுவோமாக!

**நன்றி :**
**இலங்கை சுயாதீன தொலைகாட்சி** (ITN - TV)
**1996**
**நெறியாக்கம்: அல்ஹாஜ் ஹுஸைன் பாரூக்**

OOOOOO



# 10. மற்றவர் மனதை மாசுபடுத்தாதே !

புனிதமான நோன்புப் பெருநாள் தினத்தில் உள்ளம் பூரித்த நிலையில் காணப்படும் நாம் மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறைபற்றி கொஞ்சம் சிந்திப்போமாக. எப்படியும் வாழலாம் என்ற நிலையில் வாழ்ந்து விடமுடியாது. இஸ்லாமியன் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வழிமுறை நமக்குக் காட்டப்பட்டிருக்கின்றது.

இறை நம்பிக்கை கொண்ட ஒரு முஃமீனின் வாழ்வு மற்றவர்களுக்குச் சிரமம் கொடுக்காத வாழ்க்கையாகும். தனது கையாலும், நாவாலும் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாதவனே மனிதன். அவனே உண்மை முஸ்லிம் என்பது நபிகளார் (ஸல்) வாக்காகும். அன்றாட வாழ்வில் மற்றவர்களைப் பேசியும், மற்றவர்களுடன் அடித்துக் கொண்டும் பகமையுணர்வுடன் வாழும் மக்கள் நிறைய வாழ்கின்றார்கள்.

மனிதனுடைய குடும்ப வாழ்க்கை வியாபாரம், கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றில் நம்பிக்கை நாணயம் வேண்டும். வெறுமனே இபாதத் என்ற பெயரில் தொழுகையை மட்டும் நிறைவேற்றிக் கொண்டு மற்றைய வாழ்வில் முழுக்க முழுக்க மற்றவர்களுக்கு மோசடி செய்வது நமது வணக்க வழிபாட்டிலிருக்கும் உயிரோட்டத்தைக் கெடுத்துவிடக் கூடியதாகவிருக்கிறது.

நாம் வணங்கும் வணக்கம் செவ்வனே அல்லாஹ்வுக்காக கலப்பற்ற வணக்கமாக மாற வேண்டுமாயின் மற்றவர்களுக்குத் துன்பமில்லாத இயல்புடைய அமல்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்களுடன் ஏற்படுகின்ற பொறாமை உணர்வுகளினாலேயே மற்றவர்கள் மீது நமக்குத் தவறான எண்ணம் உண்டாகின்றது. நெருப்பு விறகைச் சாப்பிடுவது போல பொறாமையுணர்வு நமது அமல்களைச் சாப்பிட்டு விடுகின்றது.



மற்றவர்களும் நம்மைப் போன்று சமூகத்தில் சமூக அந்தஸ்து பெற்று வாழ வேண்டுமென நினைக்கும் போது பரந்த நோக்கம் நமது உள்ளத்தில் ஊடுருவி தொழில்படுவதைக் காண முடிகின்றது. நாம் மட்டும் முன்னேற வேண்டும் நமக்கே தொழில் நிலைகள் நடக்க வேண்டும். நாமே வீடு கட்ட வேண்டும், மற்றவர்கள் குடிசைகளிலும், கைநீட்டும் நிலையிலும் இருக்க வேண்டும் என நினைக்கும் போது உள்ளத்தின் சுருங்கிய நிலையையும், பொறாமைத் தீயையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நிலை நமது சமூகத்தில் மாற வேண்டும். நம்மைப் போன்று மற்றவர்களும் உழைத்து, உண்டு உடுத்து வாழ வேண்டும் என்ற பொதுப்படையான எண்ணம் முஸ்லிம்களிடத்தில் வர வேண்டும். தொழில் தறைகளில் நீதியும், நியாயத்தையும், நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.மற்றவர்களது வியாபாரப் பொருட்களை எடுத்து அவைகளுக்குப் பணம் செலுத்தாது மோசடி செய்பவர்களது தொகை இன்று அதிகரித்து வருகின்றது. போலிச் செக்குகளையும், குறித்த திகதியில் வங்கியில் பணமிடாமலும் அமானிதத்திற்கு துரோகம் இழைப்பவர்கள் அதிகரித்து வருகின்றனர்.

இதனால் மனவேதனையடையும் ஓர் வியாபாரி தமது தொழில் நிலைகளை தொடரமுடியாமல் திண்டாட வேண்டி-யிருக்கின்றது. இந்நிலைகளை உருவாக்கிவிட்டு தான் சமூகத்தில் நல்லவன் போல் நடக்கத் தலைப்பட்டாலும், அவர் மனசாட்சிக்கும் நம்பிக்கைக்கும் ஊறு விளைவிப்பதைக் காணுகின்றோம். நம்பிக்கை மோசடி செய்து பூரணமுஸ்லிமாக வாழ நினைப்பது பகற்கனவாகும்.

அல்லாஹ்வுக்கும், றஸுலுக்குமாக தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்பும் ஓர் அடியான் நீதியையும், நியாயத்தையும், உண்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். சமூகத்தில் மட்டும் அந்தஸ்த்தை எதிர்பார்த்து சொந்த வாழ்வில் தவறின் மேல் தவறு செய்யும் சகோதரர்கள் திருந்த வேண்டும்.

இன்றைய இஸ்லாமிய சமூக அமைப்பில் இவ்வாழ்க்கைக்காக காத்துக்கிடக்கும் எத்தனையோ ஏழைக்குமர்கள் இருக்கின்றார்கள். வயதெல்லை தாண்டி வழிதெரியாது திகைத்து நிற்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு, காணி, வசதிபோன்ற அமைப்புகளின்றி தவிக்கின்றார்கள். இந்த இக்கட்டான ஏழ்மைச் சூழலில் ஓர் திருமணத்தை பேசி முடிவு எடுத்தாலும் அதனை குலைத்துவிட மாப்பிள்ளை வீட்டுக்கு பலதையும் சொல்லி அந்த ஏழைத்திருமணப் பேச்சை இடை நடுவே துண்டாடி விடுகின்றார்கள். இந்நிலையால் கண்ணீர் வடிக்கும் ஏழைக்குமர்கள் மனம் பதறும் போது குலைந்து விட்டு சந்தோஷம் காண நினைப்பவர்கள் சுவனம் செல்ல நினைப்பது எவ்வளவு அறிவீனமாகும்.


கூட்டு அமைப்பில் வாழ்கின்ற சமூகத்தில் மற்றவர்களுக்கு உதவியாளராக மாறவேண்டுமே தவிர உபத்திர வாதியாக மாறிவிடக் கூடாது. பக்கத்து வீட்டு முஸ்லிம்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் நடந்து கொள்ள வேண்டும். அயல்வீட்டுக்காரன் பசித்திருக்க தான் வயிறு நிரம்பத் தின்பவன் என்னைக் கொண்டு ஈமான் கொண்டவனில்லை. மேலும் கறி சமைத்தால் ஆனத்தை அதிகமாக வைத்து பக்கத்து வீட்டாருக்கும் பங்கீடு செய்யுங்கள் என பயகம்பர் (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள்.

இன்று பக்கத்து வீட்டில் பசியுடனும் துன்பத்துடனும் வாழும் போது நாம் மட்டும் உண்டு சந்தோஷமாக வாழ்வது நமது ஈமானின் பிரகாசத்தை மாசுபடுத்துகின்றது. நம்மிடத்திலேயிருக்கின்ற குரோதங்களும், கோபதாபங்களும் மறந்துபோக வேண்டுமாக இருந்தால் மற்றவர்களுக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் துஆ செய்கின்ற பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுக்கும் பிரார்த்தித்துப்பழக்கப்பட்ட உள்ளம் மற்றவர்களின் உயர்வையே எதிர்பார்க்கின்றது. மாற்றமாக அசிங்கமான தாழ்வுச் சிக்கல்களை மனதில் ஏற்படுத்தி மற்றவர்களுக்கு துன்பம் கொடுக்கும் மனிதனாக மாறாமல் இருக்க அல்லாஹ் கிருபை செய்வானாக. ஆமீன்.

**நன்றி :**
**ரீ.என்.எல் தொலைகாட்சி (TNL) – 1997**
**ஒளிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் ஏ. ஆர். எம். ஜிப்ரி**
**அனுசரணை: ட்ரவல் டேட்டா நிறுவனம்**





## 11
## கல்வியில் முஸ்லிம்களின் பங்களிப்பு !

கருணையாளன் திருக்குர்ஆனைக் கற்பித்தான். அல்லாஹ் ஆசானாக இருந்து இந்த மனித சமுதாயத்துக்கு முகம்மது நபி (ஸல்) அவர்கள் மூலம் அல்குர்ஆனை உலகுக்கு கற்றுத்தந்தான். அல்குர்ஆனின் ஆரம்ப வசனமே அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு புனீத ஹிறா மலையில் இக்ற.். ஓதுவீராக என்றே இறங்கியது கல்வியின் முக்கியத்துவத்தை இஸ்லாம் ஆரம்பத்திலேயே சொல்லித்தந்து விட்டது.

அறிவார்ந்த சமுதாயம் ஒன்று உலகில் பெருக வேண்டுமென்பதே இந்த உலகை தோற்றுவித்த அல்லாஹ்வின் நோக்கமாகும்.

பள்ளி செல்லாத நாயகம் அவர்கள் உம்மியாக இருந்த போதும் பள்ளிகள் எல்லாம் பணிந்து நின்று கல்வி பயின்று கொண்டது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். என்னைப் பற்றி ஒரு சிறிய செய்தியாயினும் அதனை மற்றவர்களுக்கு எத்திவையுங்கள் என்றார்கள். எப்போதும் மற்றவர்களுக்கு போதனை செய்யும் போக்கையே வலியுறுத்தினார்கள். யார் தனது அறிவை மறைக்கின்றாரோ அவருக்கு நரகின் நெருப்பாலான கடிவாளயம் போடப்படும் என்பதை அளுத்தமாகச் சொல்லிக்காட்டினார்கள்.

கற்றவன் கலலாதவனுக்கு கற்றுக் கொடுக்காமலிருப்பதும் குற்றமே. கல்லாதவன் கற்றவனிடம் கற்காதிருப்பதும் குற்றமே. கற்றவன் கற்றபடி ஒழுகாதிருப்பதும் குற்றமே என்பதாக இஸ்லாமிய இலக்கியங்கள் நமக்கு கல்வியின் தூண்டுதலுக்கு களம் வகுத்து நிற்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். நீ ஒரு அறிஞனாக இரு அல்லது கல்வி பயிலும் மாணவனாக இரு அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு கை கொடுத்து உதவி செய்பவனாக இரு. நான்காமவனாக இருக்காதே என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். கல்வி ஒரு காணாமல் போன சொத்து அதனைக் கண்ட இடத்திலேயே நீ கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

கல்வியறிவு இல்லாமையாலேயே இன்றைய சமூகத்தில் தொழில் பிரச்சினை சமூகப் பிளவுகள் கலவரங்கள் என்பன தலையெடுக்க தலையாய காரணமாக இருக்கின்றது. சமூகத்தில் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் மதிக்கப்படவேண்டும். கல்லூரிகள் கௌரவப்படுத்தப் படல்வேண்டும். உலமாக்களுக்கு உரிய கௌரவம் கொடுக்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் சிறந்த சமூக சீர்திருத்தத்துடன் கல்வி பயில வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றுடன் நமது கல்வியை ஆக்கிக்கொள்வது நல்லது. நாமும் நமது பிள்ளைகளும் படித்து முன்னேற வேண்டும். சமுதாயத்தில் ஏனையவர்களின் நிலை எப்படியானாலும் குற்றமில்லை என்ற எண்ணம் வந்து விடவே கூடாது.

நமது முஸ்லிம் உம்மத்துகளில் கணிசமான காலத்துக்கு முன்னர் வாழ்ந்த நமது இஸ்லாமிய கனவான்கள் கல்விக்காக காணிகளைக் கொடுத்தார்கள். கட்டிடங்களைக் கொடுத்தார்கள். தனது தோட்டத்துறவுகளையும் அதன் வருமானங்களையும் பொதுத் தலங்களுக்குப் பயன் தரும் வகையில் எழுதி வைத்தார்கள். இன்றும் அதே பரம்பரையில் வந்த நாம் அதே நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் கல்விகூடங்களுக்கு உதவி செய்கின்ற மனப்பக்குவம் குறைந்து வருகின்றது என்றால் அது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இஸ்லாமிய சகோதர சகோதரிகளே! நமது சமூகத்திலிருந்து கல்விமான்கள் உருவாக வேண்டும். அதற்காக நாம் நம்மால் முடிந்த உதவி ஒத்தாசைகளைச் செய்ய வேண்டும்.



உயர்வகுப்பு மாணவர்களின் கல்வித் தேவைகளைக் கண்டறிய வேண்டும் கனணி இயந்திரங்கள் கம்பியூட்டர்கள் விஞ்ஞான கூடங்கள் இல்லாத பாடசாலைகளும் ஒன்று பட்டு ஒத்துழைத்து அதனை தருவிக்கும் உபாயங்களைச் செய்ய வேண்டும்.

2000ம் ஆண்டை எட்டிப்பிடிக்கவிருக்கும் மிகக் குறுகிய கால கட்டத்தில் நமது உம்மத்துகளின் கல்வி நிலையைப் பற்றி சிந்திக்க மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

அல்குர்ஆனை சிந்திக்க ஆய்வு செய்ய நமது சமூகத்தில் பாரிய முயற்சி செய்யப்பட வேண்டியிருக்கின்றது. அல்லாஹுதஆலா தனது குர்ஆனில்...

''அல்குர்அனை நீங்கள் சிந்திக்க வேண்டாமா உங்கள் உள்ளத்திலே பூட்டுப் போடப்பட்டிருக்கின்றதா''? எனக் கேட்கின்றான். நமது வளர்கின்ற பிள்ளைகளின் வாழ்வில் அல்குர்ஆனின் பின்பற்றலை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும். சிந்திக்கப்பட வேண்டிய அல்குர்ஆன் பலருடைய வீடுகளில் மூலையிலேயே முடங்கிக்கிடக்கின்றது. எடுப்பார், ஓதுவார் சிந்திப்பார் எவருமில்லை. இந்த நிலை ஏன் நமது சமூகத்தை பீடித்திருக்கின்றது?

குர்ஆன் நமக்கு வழிகாட்ட வந்த மறை. அதனைப் படித்துத்தான் இன்று விஞ்ஞானிகள் எத்தனையோ ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆராய்ந்து பார்க்க வேண்டிய முஸ்லிம் உம்மா வீண்விளையாட்டிலும் தேவையற்ற போக்குகளிலும் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் நமது இல்லங்களில் எத்தனை பத்திரிகைகளை வேண்டுகின்றோம். படிக்கின்றோம். வரவேற்கப்படக் கூடியதுதான்.

வாசிப்பு பழக்கம் கட்டாயம் நம்மிடையே வரவேண்டிய ஒன்றுதான். ஆனால் திசைமாறிய பத்திரிகைகளுக்கும் போக்கு மாறிய புத்தகங்களுக்கும் பணத்தை செலவிடும் நாம் இன்று அல்குர்ஆன் எத்தனை மொழிகளில் வெளிவந்து இருக்கின்றது. அவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி நமது பிள்ளைகளின் கற்கை மொழி பாஷைகளில் அவற்றை விளங்கப்படுத்திக் கொடுக்கின்றோமா? சிந்தனை செய்து பாருங்கள்.


திருமண வீடுகள் ஹோட்டலில் திருமணங்கள் என்றெல்லாம் பலலட்சம் ரூபாய்களைச் செலவு செய்யும் நாம் ஆகிறத்தின் ஜன்னத்தில் ஆனந்தமாக குடியிருக்க வழிசெய்யும் அல்குர்ஆன் மொழிபெயர்ப்புப் பிரதிகளை இது வரை வேண்டி கொடுக்காது இருந்தால் இது முதலாவது அதனை படிக்க ஏற்பாடு செய்வோம்.

முஸ்லிம்களின் குர்ஆன் மத்ரஸாக்களில் கல்வி பயிலும் மாணவர்கள் டியூஷன் வகுப்புக்களால் மத்ரஸாக்களை கைவிட்டுச் செல்லும் பரிதாப நிலைகளை அறிந்து ஆரம்ப கற்கை நெறியான அல்குர்ஆன் மத்ரஸாக்களின் வழிகாட்டலுக்கு வழிசமைத்துக் கொடுத்து கல்விக்காக காலமும் கை கொடுத்து உதவுவோமாக.

**நன்றி :**
**இலங்கை ரூபவாஹினி முஸ்லிம் சேவை**
**1997**
**ஒளிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். யூனுஸ்**

OOOOOO






## 12.
## இமாம் ஜஃபர் ஸாதிக் (ரலி) அவர்கள் !

முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்பமாகிய (அஹ்லுல்பைத்) வழித் தோன்றலில் வந்தவர்களே இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரலி) அவர்கள். இவர்கள் மத்ஹபுகளில் இமாம்களுக்கு இமாமாகவுமுள்ளார்கள். ஹிஜ்ரி 83ம் ஆண்டு றபீயுல் அவ்வல் மாதம் பிறை 17 திங்கள் இரவு முஹம்மது பாக்கர் (ரஹ்) அவர்களுக்கும், உம்மு மர்வா என்ற தாய்க்கும் பிறந்தவர்களே இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரலி) அவர்கள். அன்னை உம்மு மர்வாவின் மணி வயிற்றில் உதித்த இக்குழந்தையை தந்தை முஹம்மது பாக்கர் (ரஹ்) அவர்கள் தனது தந்தை ஸைனுல்லாப்தீன் (ரஹ்) அவர்களின் மடியில் வைத்து பிள்ளைக்கு பெயரிடுமாறு வேண்டிக் கொண்டார்கள். அழகுக்குழந்தையை கைக்கெடுத்த ஸைனுல்லாப்தீன் (ரஹ்) அவர்கள் இமாம் அலி (ரலி) அவர்களின் உடன்பிறந்த சோதரரின் பெயரான ஜ.்.பர், என்பதை இக்குழந்தைக்கும் பெயரிட்டு ஜ.்.பர், ஜ.்.பர் என்று செல்லமாக அழைத்தனர்.

இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரலி) அவர்கள் பாட்டனார் ஸைனுல்லாப்தீன் (ரஹ்) அவர்களின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்தார்கள். அமுதூட்டி வளர்த்த பெரியார் அன்னவர்கள் தீனியத்தான அறிவையும் ஊட்டி இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரலி) அவர்களை சின்ன வயதிலேயே நன்னெறிப்படுத்தினார்கள்.

இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரலி) அவர்கள் பனிரெண்டு வயதாக இருந்தபோது பாட்டனாரான ஸைனுல்லாப்தீன் (ரஹ்) அவர்கள் இவ்வுலக வாழ்வை முடித்து மறுமைக்கான பயணத்தை எய்திவிட்டார்கள். தனது பாட்டனாரின் மரணத்தையடுத்து தனது தந்தை முஹம்மது பாக்கர் (ரஹ்) அவர்களிடமே சன்மார்க்கக் கல்வியைப் படித்தார்கள். 19 ஆண்டுகளாக தனது தந்தையிடம் மெய்ஞான அறிவுகளையும் படித்தறிந்தார்கள். தனது முப்பாதாவது வயதில் இமாமின் பீடத்திலிருந்து இமாம் ஜ.்.பர் ஸாதிக் (ரலி) அவர்கள் இஸ்லாமிய ஞானத்தை போதிக்கும் பேற்றைப் பெற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதீனாவில் அவர்களால் நடாத்தப்பட்ட இஸ்லாமிய ஞானக் கலாபீடம் பாலைவனத்தில் பல பகுதிகளிலும் காந்தம் போல் கவர்திழுத்தது. ஹிஜாஸ், ஈராக், சிரியா, குறாஸான் ஆகிய நாடுகளிலிருந்து 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றார்கள். மார்க்க விற்பன்னர்களும் நபிமொழி வல்லுனர்களும் அக்கலையகத்திலிருந்து அ.ஃலுஸ் ஸுன்னா முப்திகளாகவும், உலமாக்களாகவும் வெளியேறினார்கள். இவ்வாறு வெளியான மாணவர்களில் மிக முக்கியமான இமாம் அபூ ஹனீபா (ரஹ்), இமாமுல் மதீனா என்றழைக்கப்படும் இமாம் மாலிக் (ரஹ்) ஆகியோரும் அடங்குவர். இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்களிடம் இரண்டு வருடங்கள் கல்வி பயின்றார்கள்.

அபூ ஹனீபா (ரஹ்) அவர்களிடம் உங்கள் வயது என்ன? என்று ஒருவர் வினவியபோது ''எனக்கு வயது இரண்டு'' என்றார்கள். ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள்? என்று வினவியபோது அதற்கவர் இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்களிடம் கல்வி கற்ற இரண்டு ஆண்டுகளே நான் உயிரோடு இவ்வுலகில் வாழ்ந்த காலமாகும் என மெய்கல்வியின் உயிரோட்டத்தை வயதாக வர்ணித்தார்கள்.

ஹிஜ்ரி 147ம் ஆண்டு ஹஜ் செய்வதற்காக மக்கமா நகர் வந்த கலீபா மன்சூர் ஹஜ் கடமைகளை நிறைவு செய்து பின்னர் மதீனா நகரம் சென்றார். மதீனத்து மண்ணில் கால்பதித்த கலீபா இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) யை பழிவாங்க வேண்டுமெனத் தீர்மானித்தார்.

அதன் முடிவாக இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்களுக்கு அழைப்பு அனுப்பினார். இமாம் அவர்களும் வந்து சேர்ந்தனர். ''என் ஆட்சியோடு நீயும் ஆள நினைக்கின்றாயா? உன் வாழ் நாளை இன்றுடன் முடிக்கின்றேன்'' என கலீபா காரமாக பேசினார். எல்லாவற்றையும் கேட்டு மௌனமாக நின்ற இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்கள் இப்படி மெதுவாக சொல்ல ஆரம்பித்தார்கள்.

''மு.ஃமீன்களின் தலைவரே! உங்களுக்கெல்லாம் முன்னர் மாபெரும் ஆட்சியை சுலைமான் நபிக்கு கொடுத்த போது அவர்கள் நன்றியுடையவர்களாகவும், ஐயூப் நபி (அலை) சோதிக்கப்பட்டபோது பொறுமையுடையவர்களாகவும், யூஸுப் (அலை) சகோதரரால் துன்புறுத்தப்பட்டபோது பொறுமையுடன் இருந்து அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தார்கள்''.



இந்த உரைக்கேட்ட கலீபா மன்சூரின் கர்வம் அடங்கியது. கலீபா மன்சூர் நாடு திரும்பிய போது மீண்டும் இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்கள் மீது பொறாமைத் தீ அடர்ந்தேறியது. கலீபா தனது ஒற்றைப் படைத் தலைவன் முஹம்மது பின் சுலைமானை அழைத்து இமாமை கொல்வதற்கு சதித்திட்டமொன்றினை தீட்டினார்.

அந்த விஷத்திட்டத்துடன் மதீனா நகரம் வந்த முஹம்மதிப்னு சுலைமான் இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்களிடம் படிக்கும் மாணவனைப் போன்று பாசாங்கு செய்து அவர்களின் அன்புக்கும், ஆதரவுக்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டான். ஒரு நாள்... ஒரு தட்டில் நஞ்சூட்டப்பட்ட திராட்சைப் பழங்களை வைத்து இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்களிடம் கொண்டு வந்து இது எனது காணிக்கை. இதை என் முன்னே சாப்பிட வேண்டுமென முஹம்மதிப்னு சுலைமான் அடம் பிடித்தார்.

அன்புத் தொல்லை தாங்கமுடியாமல் இமாம் ஜ.ஃபர் ஸாதிக் (ரலி) அவர்கள் திராட்சைப் பழத்தை சாப்பிட்டார்கள். தனது 68வது வயதில் ஹிஜ்ரி 148ம் ஆண்டு ரஜப் மாதம் பிறை 15ல் வபாத்தாகினார்கள். ஹஜ்ஜுக் கடமையில் அவர்கள் கட்டிய இ.ஃறாம் துணியாலும், அலி (ரலி) அவர்களின் தலைப்பாவினாலும் கபனிட்டு ஜன்னதுல் பகீயில் தகப்பன் பாட்டனாரின் கபுறின் அருகாமையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

இமாமவர்களது வாழ்க்கையின் சிறப்பியல்புகளை நமது வாழ்விலும் கடைப்பிடிக்க அல்லாஹ் கிருபை செய்வானாக! ஆமீன்.

**நன்றி : நவமணி**
**30-11-1997**

**ஏற்பாடு: அல்ஹாஜ் ஏ. எல். எம். சத்தார்**
**- இதழியல் டிப்ளோமா பட்டதாரி**

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 13. இஸ்லாமிய இளைஞர்களின் நோக்கும் போக்கும் !

அல்லாஹுதஆலா மனிதனுக்கு செய்திருக்கின்ற நிஃமத்தில் சிறப்பு மிக்க ஒன்றுதான் இளம் வயதில் குணசீலனாக ஆக்கி வைப்பது வயதிலேயே பெறுமதியான காலத்தை இளமை எதிர் நோக்கியிருக்கின்றது. நமது இளம் பராயத்தை நல்ல வழியில் கழிப்பதன் மூலம் சிறந்த எதிர்காலப் பலனைப் பெறுகின்றோம்.

இளமையில் கல்வி கொள்ளும் காலத்திலிருந்தே ஒழுக்கம், அடக்கம், அமைதியுடையவர்களாக நம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப் படுகின்றது. பெற்றாருக்கு வழங்க வேண்டிய கௌரவம் இவைகள் அனைத்தும் இளமைக்கு அணி சேர்கின்றது.

பள்ளியில் கல்வி கொள்கின்ற காலத்திலேயே நல்ல பிள்ளையாக நாம் தெரிவு செய்யப்படல் வேண்டும். நல்ல குணசாலிகளுடன் நட்புக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களுடன் அன்பாகப் பழக வேண்டும். தான் படிக்கும் கல்லூரிக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும்.

பரீட்சைக் காலங்களுக்காகப் பாடங்களை ஆயத்தம் செய்யும் நாம் பள்ளிப்படிப்போடு மட்டும் நின்றுவிடாது மாணவர்களுடனும் சேர்ந்து படித்து பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய வேண்டும். இளமைக் காலத்தில் ஏற்படுகின்ற சலனங்களினால் பலர் நண்பர்களின் வீடுகளில் இரவில் தங்கி படிப்பதுமுண்டு. தன்வீடுகளில் தங்காது உறங்காது பிறர்களின் வீடுகளை தங்குவதற்குத் தஞ்சமாக்கிக் கொள்கின்ற போது ஆபத்தான விளைவுகளுக்கு அதுவே ஆரம்பக் கட்டமாக அமைந்து விடுகின்றது. இளமையின் பாரம்பரியத்துக்குச் சொந்தமான நாம்



நமதில்லங்களிலேயே தங்கிப் பயில நம்மை நாம் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

பரீட்சைக்காலம் முடிவடைந்த பின்னர் பெறுபேறுகள் வருகின்ற வரை மிகவும் பெறுமதியான காலமாகக் கணிக்கப்படுகின்றது. சிலர் மேலதிக வகுப்புகளுக்கும் பலர் தொழில்களுக்கும் இன்னும் சிலர் வீணாக வீட்டில் காலத்தைக் கழிப்பதற்கும் எத்தனிப்பதுண்டு.

இத்தகைய காலகட்டங்களில் பலர் தகாத தொடர்புகளிலும் மாட்டி வாழ்க்கைப் பயணத்தில் மிக சிக்கலான அனுபவங்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய போக்குகள் மாறி பொருத்தமான வழிகளில் நமது போக்குகளை விடுமுறை நாட்களில் கழித்துக் கொள்ள தெண்டித்துக்கொள்ள வேண்டும். இளமையுடைய ஆதங்கத்தினால் நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பழக்கங்களை கை கொள்வோர்களும் உண்டு. குடியைப் பற்றி அல்லாஹுதஆலா தனது அல்குர்ஆனில் கூறும் போது

''குடியும், சூதாட்டமும் விக்கிரக ஆராதனையும் அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் செயல்களாகும். அவற்றை தவிர்த்துக் கொள்ளவும்''. மதுப் பழக்கம் விரிவடைந்து வருவதனாலேயே இன்று ஹிரோயின், தூள், கஞ்சா, அபின், லேகியம் என்றெல்லாம் போதைகளுக்கு இளைஞர்கள் அடிமையாகி விடுகின்றார்கள். நாளாவட்டத்தில் சிந்திப்பதற்கு எஃதுவாக இருந்த மூளையின் சிந்தனைப் பகுதி தடைப்பட்டு அன்றாட வாழ்வில் அனைவராலும் வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்கப்படக் கூடியவனாக ஆகிவிடுகின்றான். நபிமணி (ஸல்) கூறினார்கள்.

மது போதையைத் தரக் கூடியது அனைத்தும் தடுக்கப்பட்டது என்று கூறினார்கள். இவற்றை உணர்ந்து எமது இளமைக் காலத்திலிருந்தே போதைப்பழக்கத்திற்கு அடிமையாகுவதை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இளமை காலத்திலே நாம் உடுக்க கூடிய உடைகளில் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விரும்பக் கூடிய சாதாரணமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைகளை உடுக்க பழகிக் கொள்ள வேண்டும். வளர்ந்து வருகின்ற இன்றைய சமுதாயத்தினர் அணிகின்ற உடைகளைப் பார்க்கின்ற போது கவலைக் கிடமாக இருக்கின்றது. முழுக்க முழுக்க மேற்கத்தேய நாகரிகங்களுடன் கூடிய ஆடைகளையே அணியத் தலைப்பட்டு விடுகின்றனர்.

விபசார விடுதிகளிலும், ஆடம்பர கேலிக்கை கிளப்புகளிலும் படமாக்கப்படும் புகைப்படங்களும் காட்ஸ் பெக்குகளில் உள்ள காட்களின் வடிவங்களையும் வடிவமைத்து தயார் செய்யப்படுகின்ற உடுப்புகள் எல்லாம் இன்றைய இளைய தலைமுறையினரைக் கவர்கின்றது என்று சொன்னால் இவைகளைக் கண்டு எடுத்து கூறாமல் இருக்க முடியாது. இளம் வயதில் மிக உன்னிப்பாக வாழ வேண்டிய நாம் நமது சிகையலங்காரங்களைக் கூட சினிமா, எக்டர்கள் கிரிக்கட் வீரர்கள் ரெஸ்லிங் வீரர்களை பார்த்து சரி செய்து கொள்கின்றோம். சிலர் பெண்களா? என்று கேட்கின்ற அளவுக்கு கேள்வியின் வடிவமாக இளமையை அமைத்துக் கொள்கின்றனர்.

அனைத்து உலகுக்கும் வழிகாட்ட வந்த வள்ளல் அருமை நபி (ஸல்) அவர்களின் வாழ்விலேதான் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. நமக்கு வழிகாட்ட வந்த வள்ளல் நபி (ஸல்) அவர்கள் முடிவைத்தல், தலைசீவுதல், முதல் மனித சமுதாயத்திற்குத் தேவையான அத்தனை விடயங்களையும் அழகாகக்கூறிக் காட்டியுள்ளார். அதை விடுத்து கிரிக்கட் வீரர்களையும் ரெஸ்லிங் வீரர்களையும் சினிமா நட்சத்திரங்களையும் பின்பற்றுவது அறியாமையாகும்.

இளமைக் காலத்தில் முற்றிலும் இசைக்கு அடிமைப்பட்டு தனது உடை, போக்கு எல்லாவற்றையும் மேற்கத்தேய பாணியில் அமைத்துக் கொள்வதைப் பார்க்கின்றோம். இன்றைய இசை அமைப்புக்கள் அனைத்தும் மனிதனை இருப்புக் கொள்ளச் செய்வது அல்ல அவ்வளவு விவேகமாக மனிதனை ஆட்டும் சக்தி கொண்ட ஆளுமையான கணனித்துறையில் இசைகளை கட்டவிழ்த்து



விடப்பட்டிருக்கின்றது. இஸ்லாம் அனுமதித்துள்ள ஆகுமான இசை என்ன என்பதை உலமாக்களிடம் கேட்டறிந்து இசை தொடர்பு கொள்ள யோசித்துக் கொள்ள வேண்டும்.

கெஸ்டீவன் யூஸுப் இஸ்லாம் இஸ்லாத்தை ஏற்று இசையை விட்ட சரிதையைப் படிப்போம். வாழ்வின் வயதைப் பொறுத்தவரை 10ல் பயல் 20ல் இளைஞன், 30ல் மூப்பு, 40ல் நரை 50ல் அறிவு, 60ல் செரிவு, 70ல் ஏக்கம், 80ல் தூக்கம் 90ல் தொறுதொறு 100ல் இழுபறி 110ல் இழுத்தெறி என்பார்கள். இருபது வயது முதல் தொடரும் இளமையின் காலகட்டத்தை இஸ்லாமியத்தின் அடிப்படையில் இட்டுச் செல்ல வேண்டும்.


இளமைக் காலத்திலேயே பலர் துப்பாக்கி ஏந்தவும் அதனால் விரக்தி கொள்ளவும் கடைசியில் தற்கொலை நிலைகளுக்குத் தள்ளப்படுவதையும் பார்க்கின்றோம். தற்கொலை இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது. நன்றாக சிந்தித்து எமது இளமையைப் பாதுகாத்து இளமையை எப்படி செலவு செய்தாய்? என்று கேட்கும் கியாமத்து நாளில் நல்லவர்கள் பட்டியலில்சேர்ந்து கொள்ள அல்லாஹ் நம் அனைவருக்கும் கிருபை செய்வானாக.

**நன்றி :**
**இலங்கை ரூபவாஹினி முஸ்லிம் சேவை**
**ஆகஸ்ட் 1997**
**ஒளிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். யூனுஸ்**

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 14. உலக சமாதானத்திற்கு இஸ்லாம் கூறும் வழிகள்!

புனித ரமழான் மாதம் பகல் பொழுது முழுவதும் நோன்பிருந்து உள்ளமும், உடம்பும் சாந்தியாகவும் அமைதியாகவும் இருக்கின்ற இந்த அந்திமாலைப் பொழுதில் அமைதியையும், சமாதானத்தையும் பற்றி சிந்திப்போம்.

அல்லாஹுத்தஆலா தனது அல்குர்ஆனில் மனிதர்களே! சாந்தியும் சமாதானமும் அளிக்கக் கூடிய வீட்டிற்கு அல்லாஹ் (உங்களை) அழைக்கின்றான். (அவனுக்கு வழிப்பட்டு நடக்கும்) அவன் விரும்புகிறவர்களை (அதற்குரிய) நேரான வழியிலும் செலுத்துகின்றான்.

அல்லாஹ்வின் சுவனம் எப்போதும் அமைதியானதாகவும், நிம்மதி தரக் கூடியதாகவும் இருக்கின்றது. மனிதனை சுவனத்துக்கு நிர்ணயம் செய்யும் உள்ளம் என்ற வீடும் நிம்மதியாக இருக்க வேண்டும். மனிதனுடன் மனிதன் சந்தோஷமாக இருக்கும் அடிப்படை வழியை அருமை றஸூல் (ஸல்) கூறிவைத்தார்கள்.

''அல்லாஹ்விடத்தில் மனிதனில் சிரேஷ்டமானவன் ஸலாத்தைக் கொண்டு ஆரம்பிப்பவனாவான் எனக் கூறினார்கள்.

மனிதன் இன்று ஸலாம் சொல்லாமையாலும், புன்சிரிப்புடன் பழகாமையாலும், பேச்சுக் கதைகளை நிறுத்திக் கொள்வதாலுமே பிரச்சினைகள் தலை தூக்குகின்றது.

தவறு செய்வதன் மூலம் மனிதனது உள்ளம் பரபரப்படைகின்றது. அங்கு அமைதி காணப்படுவதில்லை. தொழுகை, நோன்பு, ஸக்காத், ஸதகா, குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல், ஸலவாத் ஓதுதல் போன்ற அமல்கள் உள்ளத்துக்கு அமைதி தருவதாகவும் ஊருக்கும் நாட்டுக்கும் அருளையும் அமைதியையும் வரவேற்பதாகவும் அமைகின்றது. உலமாக்களின் போதனைகளும், பள்ளிவாயல்களில் அமல் செய்யும் மக்களின் எண்ணக் கருக்களாலும் அமைதியான சமூக அமைப்பைக் காணமுடியும்.



வணக்கத்தலங்களிலும், கல்விபயிலும் கல்லூரிகளிலும் உயர்கல்வி பெறும் பல்கலைக் கழகங்களிலும் ஒழுக்கம் இழந்த நிலை உருவாகுமானால் சமூகப் பிளவுகளுக்கு வழிகோரி நிற்கும் பட்டம், பதவி, நாடுபிடிப்பு, எல்லை விரிப்பு போன்றவற்றினாலேயே இன்று உலகம் பூராகவும் அமைதி குலைந்து காணப்படுகின்றது. இதனால் பாதிப்படையும் மனித சமூகம் புண்பட்ட மனதுடன் வணக்கத்தலங்களிலும், பாதையாத்திரையாகவும், பிரசுரங்கள் வெளியிட்டும், கூட்டங்கள் கூடியும் முடிவெடுக்க உலகெங்கும் மக்கள் சாரிசாரியாகத் திரள்கின்றனர். கண்ணீர் வடித்து பிரார்த்தனை செய்து உண்ணாவிரதம், மறியல் போராட்டம் என்றெல்லாம் தொடர்ந்து செல்கின்றது.

அடுத்த புறத்தில் வானலாவ மனிதனை மனிதன் குறிவைத்து குண்டுமாரி பொழிகின்றான். தரையில் கண்ணிவெடி, மிதிவெடி, பொறிவெடி, குண்டுவெடிப்பு என்றெல்லாம் சமூகத்தில் அமைதியில்லாத நிலமை உருவாகி பச்சை நிறப்பூமியில் இரத்த சாயம் தோய்கிறது. இதனால் நாட்டில் வறுமையும், ஆஸ்பத்திரிகளில் காயப்பட்டு அங்கம் இழந்தவர்களும், அகதி முகாம்களில் கண்ணீருடன் வாழ்பவர்களும் அதிகரித்துக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இத்தனைக்கும் காரணம் ஒற்றுமை குலைந்த ஒழுக்கமில்லாத சமுதாய அமைப்பு. உருவாகி வருவதே காரணமாகத் திகழ்கின்றது. ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும். ஒழுக்கமின்மை உயிரையும் போக்கும். பெற்றார்கள், உற்றார்களுக்கு மத்தியில் ஒற்றுமையுடன் நடந்து கொள்வதும் ஆசிரியர்கள், முதியோர்கள் போன்றோர்ருக்கு கண்ணியம் செய்வதிலுமே சிறப்பான ஒற்றுமையை உருவாக்க முடியும். பிறசமயத்தவர்களை அன்புடனும், ஆதரவுடனும், புரிந்துணர்வுடனும் நோக்க வேண்டும்.

நமது சமயத்தை எடுத்து நடக்க வேண்டிய கட்டத்தில் பிறசமயத்தினருடன் பேதமைகாட்டி பழகும் படி சமயக்கருத்துக்கள் கூறவில்லை. அன்பையும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் உருவாக்கும் களம்கள் சமூகத்தில் தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணம்**
**முஸ்லிம் சேவை - இப்தார் சிந்தனை**
**23-12-1997**

**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 16. விசால மனசுக்கு விட்டுக்கொடுப்பே முக்கியம் !

அன்புடன் அகிலத்தை ஆட்சி செய்யும் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உண்டாவதாக.ஸலாத்தும்,ஸலாமும் சாந்தி நபி (ஸல்) அவர்கள் மீதும் தோழர்கள் மீதும் தொடர்ந்தவர்கள் மீதும் உண்டாவதாக. அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், புனித பெருநாளில் விடியல் பொழுதிலே குத்பாப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களே! மகிழ்ச்சியுடன் கூடி இருப்பவர்களே! இன்றைய தினம் அன்பையும், மகிழ்ச்சியையும் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறி பகர்ந்து கொள்வோம்.

பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான் என்பதாக அல்குர்ஆன் அழகாக கூறுகின்றது. அன்றாட வாழ்வில் காலையில் எழுந்தது முதல் மாலை வரை நூற்றுக்கணக்கான பிரச்சினைகளுக்கு மனிதன் முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவற்றுள் மனதை சந்தோசப்படுத்தும் மனதுக்கு வருத்தத்தை தர வல்லதுமான பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. சில விடயங்களை அணுகும் போது சிரித்த முகத்துடனும், மிக மனத்திருப்தியுடனும் அணுகுகின்றோம். இன்னும் பல பிரச்சினைகளை குறிக்கோளே மாறி மனச்சஞ்சலத்துடனும், கோபத்துடனும் நோக்குகின்றோம்.

கோபம் வரும் போது ஷைத்தானும் அதனுடன் சேர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றான்.அதனால் மனிதன் மேலும் விகாரப்பட்டு தனது ஆக்ரோசத்தை அதிகரிக்கின்றான்.இந்த நிலையில் தான் மனிதனிடம் பொறுமை தேவைப்படுகின்றது. எவ்வளவு வேகமாக கோபம் வருகின்றதோ அவ்வளவு தூரம் பொறுமையும் மன நிலையில் ஏற்படுகின்ற போது அங்கு அல்லாஹ்வின் அருள் குடி கொள்வதைக் காண்கின்றோம். அதனால்தான் பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருப்பதாகப் புனிதக் குர்ஆனின் வசனத்தால் தெளிவுரை பெறுகின்றோம்.



நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, எனக்கு ஏதேனும் நல்லுபதேசம் செய்யுங்கள் என்று வேண்டினார். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள் கோபப்படாதே! கோபப்படாதே! என பல தடவைகள் மடக்கி மடக்கிக் கூறினார்கள்.கோபப்படாதே என கோமான் நபி (ஸல்) கூறியது அமைதியாக இரு என்ற அன்பான கட்டளைக்கு அத்திவாரமிடுகிறது.

சாந்தியாகவும் சமாதானமாகவுமே எல்லா மனிதர்களும் வாழ வேண்டுமென விரும்புகின்றார்கள். ஆயினும் ஒவ்வொருவருடைய தொழில், வேலை, குடும்பம், சூழல் தாக்கங்களால் ஏதோ ஒரு கோணத்தில் மனிதன் கவலை தோய்ந்து உணர்ச்சிவசப்பட்டு ஏசவும், சில சமயங்களில் கை நீட்டவும் தலைப்பட்டு விடுகின்றான். சாதாரனமான குடும்ப வாழ்வில் தகப்பன் பிள்ளைகளுக்கிடையிலும், அண்ணன் தம்பிகளுக்கிடையிலும், அக்கா தங்கைகளுக்கிடையிலும் கோபதாபம் ஏற்பட்டு மாதக்கணக்கில் பேச்சு வார்த்தைகள் ஏதுமின்றி உறவுகளை துண்டித்து வாழ்வதை இன்று சர்வ சாதாரணமாக பார்க்கின்றோம்.

இவை இத்தனைக்கும் காரணம் ஷைத்தானியத்துக்கு நாம் நமது மன நிலையில் இடம் கொடுத்ததுதானே தவிர வேறு ஒன்றுமில்லையென்றுதான் சொல்லவேண்டும். அன்பின் இலக்கணங்கள் கோபத்தால் அழிந்து விடுவதைக் காணுகின்றோம். குடும்ப வாழ்க்கையில் தாய் பிள்ளைகளுக்கிடையே மனக்கசப்புகள் வந்தாலும், அவைகளை வைத்து மனதில் சாதித்துக் கொண்டிருக்க கூடாது.காரணம் கோபம் மனதில் குடிகொண்டிருக்கும் போதெல்லாம் மனதில் நிம்மதி கெட்டுப்போய் விடுகின்றது. அல்லாஹ்வின் ரஹ்மத் நமது உள்ளத்தை ஆள்வது தூரப்படுத்தப்படுகிறது. குடும்பத்தி-னரோடும், இனபந்துக்களோடும், அயல் வீட்டுக்காரர்களோடும் அன்பாக பழகிக்கொள்ள வேண்டும்.

அரபிகளின் மத்தியிலே கோபத்திற்கு பொருத்தமான முது மொழி சொல்வார்கள். கோபத்தின் ஆரம்பம் பைத்தியத்தை விடப் பயங்கரமானது. ஆயினும் அதனுடைய இறுதி மிக துக்ககரமானது. இதுதான் அம் முது மொழியின் பொழிப்பாகும். கோபம் வந்தவுடன் வாயினால் வருகின்ற வார்த்தைகளை நெறிப்படுத்த முடியாது. சாரத்தை உயர்த்திக்கட்டிக் கொள்வார்கள். கல்லு, வாள், பொள்ளுகளை கையில் எடுத்துக் கொள்வார்கள். அடுத்த கணமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்க்களத்தில் குதித்து விடுகின்றார்கள்.பின்னர் தலையுடைபட்டு வைத்தியசாலையில் படுத்துறங்கும் போது அல்லவெனில் பொலிஸ் விசாரணைக் கூண்டில் பொழுதைக் கழிக்கும் போது தான் ஏன் நாம் அவசரப்பட்டோம், மடத்தனமாகப் போய் முட்டிக்கொண்டோம் என்று சிந்திக்கின்றார்கள்.

வருமுன் சிந்திக்க வேண்டுமே தவிர .வந்த பின்னர் சிந்திப்பதில் அர்த்தமில்லை. நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''கத்தாளை தேனைக் கெடுப்பது போல கோபம் ஈமானை கெடுத்து விடும்'' என்றார்கள். பிறந்த காலம் முதல் பெற்றோராலும், கல்விமான்களாலும் போதிக்கப்பட்டு ஈமானை படித்து அதனைப் பேணிக்காக்க முயன்று வரும். வாழ்க்கையின் முடிவாகவும் நாம் எதிர்பார்ப்பது அந்த ஈமானைத் தான். அதனை ஐந்து நிமிடத்தில் தோன்றும் கோபத்தினால் மாற்றிக் கொள்வதாகயிருந்தால் நமது சிந்தனைத் தடுமாற்றம் பற்றி மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.


பெருநாள் தினத்தில் கோபங்களை மறந்து உற்றார் உறவினர்களுடன் ஸலாம் கூறி மன மகிழ்ச்சி பெற வேண்டும். பெருநாள் சந்தோஷத்துக்குரிய நாள் என்பதை உணர வேண்டும்.

ஈத் முபாரக் !

**நன்றி :**
**சிரச டீ.வீ.** (SIRASA - TV)
1999
**பள்ளிவாயலில் நேரடி ஒளிப்பதிவு**

OOOOOO





## 17. இஸ்லாமிய பார்வையில் தானதர்மம்!

காலை பஜ்ருத் தொழுதது முதல் ஓதி, தஸ்பீஹ் செய்து வாடிய முகம்களுக்கு வாரிவழங்கி நோன்பு திறப்பதற்காக கொஞ்சம் ஓய்வெடுத்து உட்கார்ந்திருக்கும் இந்த நல்ல நேரத்தில் ''சதகா'' என்ற தர்மத்தின் மகத்துவத்தை நோக்குவோம்.

தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும் என்பார்கள். சங்கை நபி சதகாவைப் பற்றி சொல்லும் போது தர்மம் விதியையும், விபத்தையும் தடுக்கும் என்றார்கள். ஸதகா - ஸகாத் விதியில் இருந்து சற்று மாறுபட்டதாகும். ஸகாத் குறிப்பிட்ட பொருளில் -குறிப்பிட்ட வர்க்கத்திற்கு குறிப்பிட்ட காலத்திலேயே கொடுக்க முடியும். ஆனால்... சதகாவைப் பொறுத்த மட்டில் எவர்களுக்கும் கொடுக்கலாம், எந்தப் பொருளிலும் கொடுக்கலாம். எப்போதும் எந்தக் காலத்திலும் கொடுக்கலாம்.

இன்று.... அன்றாட வாழ்வில் துன்பப்படுபவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர். அவர்களின் நிலை அறிந்து நாம் வழங்க வேண்டும்.

ஸதகாவில் ஏற்றமானது ஒரு கையால் வழங்குவது மறுகைக்கு தெரியாமல் இருப்பதாகும். இதன் யதார்த்தம் உதவிகளை மறைமுகமாகச் செய்வது மகத்துவமானது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ஸதகா வழங்க வழங்க நமது பொருளாதாரச் செல்வம் அபிவிருத்தி அடைகின்றது. இறைத்த கிணறு ஊறும் இறையாத கிணறு நாறும் என்பார்கள். ஊற்றெடுக்கும் நீர் போல் தொழில்களும் பறக்கத்தாகும்.

ரமழான் காலத்தில் வாழ்க்கைப் போராட்டத்தில் தத்தளிப்பவர்கள் நமது வாசலுக்கு வருகின்றார்கள். அதில் ஏழை, அனாதை, அகதி, விதவை, அங்கவீனர், புலனற்றவர் என்றெல்லாம் எத்தனையோ பேர் வருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை பேரையும் அன்பாக ஆதரித்து நம்மால் முடிந்த உதவிகளை உபகாரமாகக் கொடுக்க வேண்டும். கொடுப்பவனின் கரங்கள் மேலாகவும் எடுப்பவரின் கரங்கள் கீழாகவும் இருக்கும்.


கொடுத்த கரங்களை அல்லாஹ் மேலோங்கவே செய்கின்றான். வாகனங்களில் பிரயாணம் செய்யும் போது பஸ்களில் ரெயில்களில் அங்கவீனர்கள், குருடு, ஊமை போன்ற புலசக்தி குறைந்தவர்கள் தங்களுக்கு ஏதாவது கேட்டால் இவர் இஸ்லாமா? என்ற சமய ஆராய்ச்சி செய்யாது மனிதன் என்ற தோரணையில் கொடுக்க முன்வர வேண்டும்.

''உங்களிடம் யாராவது யாசித்தால் விரட்டிவிடாதீர்கள்'' என அல்லாஹுதஆலா அல்குர்ஆனில் ஆணையிடுகின்றான். அரைக்க அரைக்கச் சந்தணம் மணக்கும். கொடை கொடுக்கக் கொடுக்க சமூகத்தில் வறுமை போய்விடும். தனியாக முஸ்லிம்களை மட்டும் கருத்தில் கொண்டு உதவி செய்கின்ற அந்த நல்ல பழக்கத்தோடு பொதுவான நல்ல காரியங்களுக்கும் நமது ஸதகாக்கள் பயன்பட வேண்டும். தன்னைப் போன்று தனது சகோதரனையும் நேசிக்காத வரை ஒருவன் பூரண முஃமினாக மாட்டான் என்பது நபிகளார் வாக்காகும்.

எவருக்கும் உதவுவோம். என்ற நல்ல குறிக்கோளுடன் கல்விக்கூடங்கள், மதரஸாக்கள், மஸ்ஜித்கள், மகப்பேற்று மருத்துவ மனைகள் புற்றுநோய், காசநோய் ஆஸ்பத்திரிகள், அனாதை நிலையம், அகதி முகாம்கள், அங்கவீனர் நிலையங்கள் போன்றவற்றிற்கும் இந்த முபாறக்கான ரமழானின் ஸதகாவின் மூலம் உதவி செய்து நமக்கு வரக்கூடிய பலாய் - முஸீபாக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவோமாக.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லீம் சேவை - இப்தார் சிந்தனை**
**18-11-1999**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர், எம். றீஸா**





# 18.
# சாந்தி சமாதானத்திற்கு சன்மார்க்கம் கூறும் வழி!

பகல் பொழுதெல்லாம் அல்லாஹ்வுக்காகப் பக்குவமாய் நோன்பிருந்து இந்த மாலைப் பொழுதில் மகத்தான இப்தாருக்காக காத்திருக்கின்ற நல்ல வேளையில் இன்றைய உலகில் மிக முக்கியமான விடயத்தை சிந்திப்பது மேலானதாகும்.

இஸ்லாம் என்ற இனிய சொல்லுக்கு சாந்தி சமாதானம் என்று பொருள் படும். அல்லாஹுத்தஆலா இந்த இஸ்லாம் என்ற சொல்லைப் பிரகடனப்படுத்திய நாள் முதல் இந்த சொல் ஒலிக்கப்படாத நாளே கிடையாது.

இன்று வானொலி, தொலைக்காட்சி, இன்டநெட், பத்திரிகை ஊடகங்களில் தினமும் இந்தச் சொல் எடுத்தோதப்படுகின்றது. நபிமார்கள் மூலம் போதிக்கப்பட்ட இஸ்லாத்தில் இணைந்தவர்களை முஸ்லிம்கள் என்று அழைக்கின்றோம்.

இஸ்லாத்தை அல்லது முஸ்லிம்களை ஒழித்து விட வேண்டும் என்று யாராவது எண்ணத் துணிந்தால் அது சமாதானத்தையும், சாந்தியையும் எதிர்க்க துணிந்ததாகும்.

இஸ்லாத்தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் எப்போதும் சமாதானத்தையும் அகிம்சையையும் விரும்பி வந்துள்ளனர். இன்றும் நாம் சமாதானப் பிரியர்கள்தான்.

நமது சமாதானத்திற்கு அண்ணலார் விட்ட அடித்தளம் அஸ்ஸலாமு அலைக்கும் என்ற பதிவகமாகும். அல்லாஹ்விடத்தில் மனிதரில் சிரேஷ்டமானவன் ஸலாத்தைக் கொண்டும் ஆரம்பிப்பவன் என ஏந்தலர் (ஸல்) எடுத்துரைத்தார்கள். ஒருவரை கண்டவுடன் உங்கள் மீது சாந்தி உண்டாவதாகுக என்னும் போது பதிலுக்கு அவரும் அதனை உரைக்க பாசக் கயிற்றில் இருவரும் இறுக இணைகின்றோம்.

காலை எழுந்தவுடன் தாய், தந்தை, பிள்ளை என்று ஸலாம் கூறும் போது அன்பும் அமைதியும் தானாக உருவாகின்றது. பாடசாலை சென்று ஆசிரியர்களுக்கு ஸலாம் கூறும் போது கல்விக்கூடத்தில் சொல்ல முடியாத அன்பையும் செல்வாக்கையும் பெறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸாபஹா என்பது கை கொடுத்து ஸலாம் கூறுவதாகும். முஆனகா என்பது கட்டியணைத்து ஆறத்தழுவுவதாகும். இஸ்லாம் அங்கீகரித்த அமைப்பில் பழகுவோமானால் பகைமை உலகை விட்டே பறந்து போய் விடும்.

இன்று கவிஞர்கள் பாடும் போது சமாதானம் என்ற சொல் அகராதியிலிருந்து எடுபட்டு போய் விட்டதென கூறுகின்றார்கள். இல்லவே இல்லை! இஸ்லாம் என்ற சொல் உயிர் வாழும் வரை சமாதானம் இருக்கவே செய்யும். டெஸ்டியூப் குழந்தை பிறந்து விட்டது. சமாதானக் குழந்தை எப்போது பிறக்கும்? என வினாத் தொடுக்கின்றார்கள்.

சமாதானக் குழந்தை பிறந்தது பிறந்ததுதான். ஆனால் தமக்குள் சமாதானம் இல்லாமல் பலர் இறந்து கொண்டு இருக்கின்றார்கள். பொறாமை, பதவிப்போட்டி, நான் எனும் கர்வம், விட்டுக் கொடாமை போன்றவற்றால் மண் தோண்டி மரம் நட வேண்டிய பூமியில் மையித்துக்களும், மண்டையோடுகளும் தோண்டப்படுகின்றன. பச்சைப் பசேலென்ற பூமி இரத்தம் தோய்ந்து கொச்சைப்படுத்தப் பட்டுள்ளது.


இந்நிலைக்கு இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஒரே ஒரு பரிகாரம் ஒற்றுமையும் அன்பும் அறிவுபூர்வமான ஸலாத்துடன் கூடிய அணுகுமுறையுமாகும்.

உலகத் தலைவர்கள் முதலில் ஸலாம் கூற வேண்டும். மற்ற சமயத்தவர்களை மதிக்க வேண்டும். சமயத்தலைவர்களையும், முதிர்ந்தவர்களையும், அறிஞர்களையும் மதிக்க வேண்டும். அன்பு வளர இந்த நல்ல நேரத்தில் உங்கள் பக்கத்தில் உள்ளவருடன் அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்லுங்கள். சமாதானம் தழைக்கும் பாசம் வளரும்.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லிம் சேவை - இப்தார் சிந்தனை**
**18-11-1999**

**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**





# 19. பொது நோக்கு!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இனிய திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன். தாமும் தமது மனைவி பிள்ளைகளும், தனது குடும்பமும் சந்தோஷமாக உண்டு, குடித்து, உடுத்து உள்ளாசமாக வாழ்ந்தால் போதும் என்று நினைக்கின்ற மனிதர்கள் இன்று நிரம்பிக் காணப்படுகின்றார்கள்.

பொது நோக்கம் என்பது வாழ்வில் சுத்த சூனியமாக நினைப்பவர்களே இவர்களாவார்கள். இவர்களால் சமூகத்திற்கு எந்த நன்மையும் இல்லை. ஹிஜ்ரி 1420 வருடங்களுக்கு முன்னால் பொதுச் சேவையின் புத்துயிர் தலைவர் அருமை நபி (ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் பொதுச் சிந்தனையை வளர்த்தார்கள். பொது உணர்வை ஊட்டிய நபிகளார் (ஸல்) கூறும் போது...

''தன்னைப் போன்று தனது சகோதரனை நேசிக்காத வரை அவன் பூரண விசுவாசியாக மாட்டான்'' என்றார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் மற்றவர்களின் நிலைப்பாட்டை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். ஜும்ஆத் தொழுகையை எடுத்துக் கொண்டால்.... பொது இடத்தில் வாராந்தம் மக்களை ஒன்றிணைத்து அன்றைய காலகட்டத்தின் சமூக சிந்தனையை மக்களிடம் ஒப்புவிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

வருடாந்த ஹஜ் கடமை உலகளாவிய அளவில் மக்களின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் தேவைப்பாடுகளையும் கருத்தில் கொண்டு செய்யப்படும் ஒரு தியாக வழிபாடாகும். களைத்து சடைவுற்ற ஒரு ஹாஜியை தூக்கி இருத்தி முகத்தை துடைத்து தண்ணீர் பருக்குகின்றோம். அந்த ஹாஜி உலகின் எந்த மூலைமுடுக்கைச் சேர்ந்தவராகவோ இருக்க முடியும். நமது சேவை சமூக நோக்குடன் தூர யோசிக்கின்ற தன்மையைத் தருவதைப் பார்க்கின்றோம்.

கறி சமைக்கும் போது ஆனத்தை அதிகமாக வைத்து அடுத்த வீட்டாருக்கும் கொடுக்கும்படி அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். சோற்றை மட்டும் சமைத்துவிட்டு ஊற்றிச் சாப்பிட ஒன்றுமில்லையென யோசித்துக் கொண்டிருக்கும்

ஒருவரிடம் அடுத்த விட்டார் கறியைக் கொண்டுபோய் கொடுக்கின்ற போது எத்தகைய ஆனந்தத்தை அடைவார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அற்புதமான கருத்துக்களை அண்ணலார் (ஸல்) அவர்கள் சமூகத்திற்கு முன்வைத்தார்கள். மதீனா செல்லும் வழியில் முதலாவது மஸ்ஜிதை குபாவில் நிறுவிய போது ஸஹாபாக்களுடன் இணைந்து நாயகம் (ஸல்) அவர்களும் ஈச்சை மரங்களைச் சுமந்து அந்தப் பள்ளியை நிறுவினார்கள். பள்ளிவாயிலின் வேலைகளை சிரமதான அடிப்படையில் செய்வதே சிறப்பானது என்ற முடிவுக்கு வந்தார்கள்.


அடுத்தவர் பசியை தனது பசியாக உணர்ந்து தாஹா நபியவர்கள் செயல்பட்டார்கள். பைதுல் மால் என்ற பொது நிதியத்தை உண்டாக்கி வாழ்வில் துன்பப்பட்டு, துயரப்பட்டு வாழ்வை ஓட்டிக் கொள்ள முடியாமல் வாடி நிற்பவர்களுக்கு அந்த நிதியத்தின் மூலம் அளப் பெரும் சேவை செய்தார்கள். மானுடம் இந்த மாநிலத்தில் மரியாதையாக வாழ வேண்டும் என்பதற்காக இனிய வழிமுறைகளை எடுத்தியம்பினார்கள். ‘ஸகாத்’ என்ற பெயரில் பொருளாதார அபிவிருத்தி நிதியத்தை உலகில் தோற்றுவித்தார்கள். அதன் மூலம் கஷ்டப்பட்டு வாழ்க்கை வழி நடாத்தி வாழ முடியாதவர்களுக்கு வாரி வழங்கினார்கள். அந்த பணத்தை சேகரிக்க பொது உணர்வு படைத்தவர்களை நியமித்தார்கள்.

இவைகளையெல்லாம் நாம் கருத்தில் கொண்டு நமக்குள்ளே பொது உணர்வுகளை வரவழைத்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் பள்ளிவாயல், பாடசாலை, நூதனசாலை, நூலகம், ஆஸ்பத்திரிகள் என்றெல்லாம் முஸ்லிம்கள் நமது சொத்துக்களை பொது இடங்களுக்கு எழுதி கொடுத்தார்கள்.

அந்த பொது நோக்கின் பாரம்பரியத்திற்குச் சொந்தமான முஸ்லீம்களாகிய நாமும் வீட்டுத்திட்டம், தொழில் திட்டம் கடன்திட்டம் என்று தூரநோக்குடைய நல்ல காரியங்களுக்கு எமது மூளை, அறிவு, பொருள், உடல்பலம் என்பவற்றைப் பயன்படுத்தி நல்லன செய்து நல்லடியார்கள் கூட்டத்தில் சேர்வோமாக.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லிம் சேவை – நற்சிந்தனை**
**01-12-1999**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**





# 20. குர்ஆன் மதரஸாக்களின் குறைபாடு !

அல்லாஹ் ஹக்கு சுபுஹானஹுவதஆலா தனது அருள் மறையில் கூறுகின்றான். கருணையாளன் திருமறையைக் கற்பித்தான் என்பதாக அல்குர்ஆனில் 6666 வசனங்கள் அமைந்துள்ளன. அதனை மக்களுக்கு எடுத்துப் போதிப்பதன் மூலம் கற்பித்தவன் ஒரு புனிதனாகின்றான்.

சிறுவர்களுக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பவர் உலகில் உயர்ந்த தருமத்தைச் செய்கின்றார் அது மிகையாகாது. குர்ஆனை ஆரம்பத்தில் ஸஹாபாக்கள் மனனம் செய்தார்கள். ஒருவர் ஓத மற்றவர் சரி பார்த்து வந்தார்கள். அன்று தொட்டு இன்று வரை அல்குர்ஆன் பள்ளிவாயல்களிலும், பல்கலைக்கழகங்களிலும் பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது.

நமது நாட்டில் குர்ஆன் மத்ரஸாக்கள் எனும் பெயரில் நம் நாட்டுக்கு இஸ்லாமிய பணி செய்யவந்த உலமாக்களும் மௌலானாக்களும் அதனை ஏற்படுத்திவைத்தார்கள். ஒவ்வொரு ஊரிலும் பள்ளிவாயலுடன் கூடிய குர்ஆன் மத்ரஸாக்கள் இயங்கும். அங்கே முஅல்லிம், ஹஸரத், மௌலவி, லெப்பை என்ற பெயரில் யாராவது சிறார்களுக்கு அல்குர்ஆனைச் சொல்லிக் கொடுப்பார்கள்.

தத்ரீஸுல் குர்ஆன் த.்.லீமுல் குர்ஆன் என்ற ஆரம்ப வகுப்புக்கான அரபி அட்சரத்துடன் கூடிய - அரபி நூல்கள் சிறார்களுக்கு பயிற்றுவிக்கப்படும். அதன் துணை கொண்டு அல்குர்ஆனை வாசிக்க கற்றுக் கொள்வார்கள். அதன் பின் அம்மஜுஸ்உ, 30 ஜுஸ்உக்கள் மௌலூதுகள், கலிமாக்கள், மார்க்கச் சட்டங்கள் அனைத்தும் பயிற்றுவிக்கப்படும். அ.்.காமுல் முஸ்லிமீன், தொழுகை அடவு, தொழுகை ஷாபிபோன்ற நூல்கள் மார்க்கப் பாடங்களுக்கு வழிகாட்டி நூலாகச் சொல்லிக் கொடுக்கப்படும்.

அரம்ப காலத்தில் ‘‘றைஹால்’’ பலகையில்வைத்து குர்ஆனை ஓதிக் கொடுத்தார்கள். பின்னர் மேசைகளில் வைத்து ஓதிக் கொடுக்கும் முறை அறிமுகமானது. கால வட்டத்தில் பாடசாலைகளில் வகுப்புக்களாக குர்ஆன் மத்ரஸாக்கள் அமையப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களில் மத்ரஸாக்களில் பயிலும் மாணவர்களுக்கு வெண்மை நிற உடைகள், பெண்களுக்கு பர்தா ஹிஜாப் என்றெல்லாம் மிகச் சிறப்பாக விரிவடைந்து வந்தது. மீலாத் விழாக்கள் போன்ற பல நிகழ்ச்சிகளில் மாணவர்கள் காட்டி வந்த திறமையும், ஒத்துழைப்பும், இன்றும் மறக்க முடியாததாகும். ஆனால்... தற்போதைய கால கட்டத்தில் குர்ஆன் மத்ரஸாக்களின் நிலை மிகப் பரிதாபகரமாக இருக்கின்றது.


பாடசாலைக்கு மிக அழகாகச் செல்லும் பிள்ளைகள் மத்ரஸாக்களுக்கு மிக மட்டமான உடையணிந்து வருகின்றனர். குர்ஆனில் முன்பக்கம் இருந்தால் பின்பக்கம் இல்லை. குறிப்புக் கொப்பிகள் சரியாக அமைவதில்லை. அப்பியாசக் கொப்பிகளுக்கு அட்டைபோடுவதில்லை. இப்படியாக மார்க்கக் கல்விக்கு மதிப்புக் கொடுக்காமல் நமது மாணவர்களை மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றோம்.

3.00 மணிக்கு மத்ரஸாவுக்கு சமூகம் கொடுக்கும் மாணவர்கள் 3.30 மணிக்கு டியூஷன் செல்ல வேண்டுமென அடம்பிடித்து நிற்கின்றனர். டியூஷன் வகுப்புக்களில் மாணவர்கள் கொண்டுள்ள தாகம் குர்ஆன் மத்ரஸாக்களை புறக்கணித்துள்ளதை நன்கு உணர முடிகின்றது. வீடுகளில் நடைபெறும் சிறய விஷேடங்களுக்கெல்லாம் நாள் கணக்கில் மாணவர்கள் வராமல் லீவு எடுக்கின்றனர். இன்று எத்தனையோ இடங்களில் மத்ரஸா நடாத்தும் ஹஸரத்மார்களுக்கு சீரான சம்பள அமைப்புகிடையாது.

சில இடங்களில் மாணவர்களிடம் அசூலிக்கப்படும் பணம் முற்றாக பள்ளிவாயல் நிதியில் சேர்க்கப்படுகின்றது. இதனால் மனமுடையும் ஹஸரத்மார் மனஅசௌகரியத்துடன் அல்லாஹ்வின் கூலியை மட்டும் எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அல்லாஹ்வின் உதவியுடன் நாமும் உதவி செய்வோம். ஒரு மணித்தியாலத்திற்கு 100 ரூபா வீதம் சாதாரண கல்விக்காகச் செலவிடும் நமது சமுதாயம் அல்லாஹ்வின் கலாமான அல்குர்ஆனை கற்பதற்கு கஞ்சப்படுவதை நினைக்க கவலையாக இருக்கின்றது.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லிம் சேவை – நற்சிந்தனை**
**டிசம்பர் 1999**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**





# 21. சமூக ஒற்றுமைக்கு இஸ்லாம் கூறும் வழிகள்!

இன்றைய சமூகத்தில் இன்றியமையாததாகத் தேவைப்படுவது ஒற்றுமையாகும். ஒன்று பட்டால்... உண்டு வாழ்வு எனச் சொல்வார்கள். அல்லாஹுதஆலா தனது அருள்மறை அல்குர்ஆனில் ஒற்றுமைப் பற்றி கூறுகையில்......

"ஒற்றுமையெனும் கயிற்றை பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள் பிரிந்து விடாதீர்கள்" என ஆணையிடுகின்றான். முதலில் பெற்றார் பிள்ளைகளுக்கிடையில் ஒற்றுமைப் பேணப்பட வேண்டும். தாயுடன் பகைத்துக் கொண்டு வீட்டுக்கே வராத எத்தனையோ பிள்ளைகள் இருக்கத்தான் செய்கின்றார்கள். பால் கொடுத்து, பழம் கொடுத்து வளர்த்த மகன் வீடு திரும்பாததால்... கவலைப்படும் தாய் தகப்பன் கொஞ்சமல்ல. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்ற கருத்துக்கொப்ப வாழும் பிள்ளைகள் தங்களது தாய் தகப்பனுடன் ஒற்றுமைப்பட வேண்டும்.

விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை கொள்ள வேண்டும். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என வாதிடும் போக்கை விடுகின்ற போதுதான்.... அன்பும், பாசமும் வளரக் கூடியதாக இருக்கின்றது.

கணவன், மனைவிக்கிடையில் ஒழுங்கான உறவு இல்லாமையால் எத்தனையோ வீடுகளில் வயது வந்த பிள்ளைகள் மனோவியாதிக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். கணவனும், மனைவியும் கைகோர்த்து கதைக்கின்ற போது அல்லாஹ்வின் அர்ஷுடைய அமரர்கள் அவர்களுக்காக துஆ கேட்கின்றார்கள். சந்தோஷப்படுகின்றார்கள்.

சிறிய மனக்கசப்புகளையும் வளருகின்ற பிள்ளைகளின் முன்னால் காட்டிக் கொள்ளக் கூடாது. குடும்பத் தலைவர்களிடம் காணப்படும் ஒற்றமைதான் அந்தக் குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக வளரக் கூடியதாக இருக்கின்றது.

ஆசிரியர் மாணவர்களுக்கிடையில் அன்பும், பண்பும்பின்னிப் பிணைய வேண்டும். பாடசாலை மட்டத்தில் வளரும் நட்பு பாசக்கயிறாக மாறி காலமெல்லாம் அறிவு பூர்வமான ஒற்றுமைக்கு வழிகோலி நிற்கின்றது. அயல் வீமட்டாருடன் எல்லோரும் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையாக நடக்க வேண்டும். ஆபத்துக்குதவுபவன் அயல் வீட்டுக் காரன் ஆவான். அடுத்த வீட்டுக் காரனைத் திருப்திப்படுத்தாத வரை ஒருவன் சுவனம் போக முடியாது என்பது அண்ணலாரின் வாக்காகும். அதற்கமைய சூழல்களில் ஒற்றுமையை வளர்க்க வேண்டும். காலையில் எழுந்ததும் உங்கள் மீது சாந்தி உண்டாவதாக என்ற அன்பொழுகும் வார்த்தையுடன் அளவலாவ வேண்டும்.

சமாதானத்திற்காக பாதயாத்திரை, ஊர்வலங்கள், உண்ணாவிரதம், தீபம் ஏற்றுதல், கலை நிகழ்ச்சி, சமய அனுஷ்டானம் என்றெல்லாம் தொடர்கிறது. சமாதானம் நிலைக்க வேண்டுமாயின் மனித மனங்களில் குறுகுறுக்கும் தன்மைகள் மாற வேண்டும். ஒற்றுமையில்லாத அமைப்பினாலேயே சமூகத்தில் கெட்ட பழக்க தோசங்களுக்கு இளைஞர்கள் அடிமைப்படுகின்றார்கள். விபச்சாரம், குடி, போதைவஸ்த்து, கடத்தல் வியாபாரம் போன்ற கெடுதிகளுக்கும் காரணமாக அமைகின்றது.


சிலர் மார்க்கத்தின் பெயரால் பலர் அரசியலின் பெயரால் பிரிந்து விடுகின்றார்கள். நம்மிடையே அன்பும், இரக்கமும் எப்போதும் இருக்க வேண்டும்.

சிறிய விடயங்களுக்கெல்லாம் அடித்துக் கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும் பொலிஸ் நிலையம் செல்வது அழகான காரியமாக அமையாது. வருமுன் காக்கக் கூடியவர்களாக மாறவேண்டும். பள்ளிவாயிலில் தொழுகைக்காக நிற்கும் நாம் ஆண்டி, அரசன், முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடுகளை மறந்து அல்லாஹ்வைத் தொழுகின்றோம். அந்தப் பயிற்சியை பள்ளிக்குள் மட்டும் செயல்படுத்தாது முழுவாழ்விலும் கொண்டு வர முயற்சிப்போம்.

இன்று செல்வம் செழிக்க வேண்டிய பூமி, சிவப்பு இரத்தத்தால் தோய்ந்து கிடக்கின்றது. மரங்களை உற்பத்தி செய்து பழங்களை வெளியேற்றிய மணல் தரை மண்டையோட்டையும், றைவாகப் புதைக்கப்பட்ட சாவுகளையும் வெளியேற்றிக் கொண்டிருக்கின்றது. இந்நிலை மாறி உலகின் கண்ணே ஒற்றுமை உருவாக பிரார்த்திப்போம்.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லிம் சேவை - நற்சிந்தனை**
**டிசம்பர் 1999**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**





## 22. சுத்தம் பற்றி இஸ்லாம் கூறுவது என்ன?

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ். சத்தியத் தூதர் உத்தம நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாகுக! தொலைக் காட்சியின் வழியாக இஸ்லாத்தின் தூய சிந்தனைகளை அறிய ஆவலாயிருக்கும் நேயர் நெஞ்சங்களே இஸ்லாத்தில் சுத்தம் பற்றி ஆராய்வோம்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.. சுத்தம் ஈமானின் பாதியாகும் என்றார்கள். சுத்தம் என்று கூறும் போது உளச்சுத்தம், புறச்சுத்தம், உடல் சுத்தம் என்றெல்லாம் அதனை வகுக்க முடியும்.

ஐங்காலத் தொழுகை நிறைவேற வேண்டுமாயின் அதற்கு வுளு செய்ய வேண்டியுள்ளது. வுளுவின் மூலமாக மனிதனில் பல பாகங்களில் படியும் வியர்வை, அழுக்கு, தூசு என்பன அவனை விட்டும் அகன்று விடுகின்றது. அதனால் அவன் அடையும் ஆறுதலும், அமைதியும் அவனது அகத்துக்கு நிம்மதியைக் கொடுக்கின்றது. உலகத்தில் இன்று சூழல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்தது சுத்தத்தில் இருந்து உலகம் படிப்படியாக விலகிக் கொண்டது தான் காரணமாகும்.

மனிதன் தன்னையும், தனது சூழலையும் மாசுபடாமல் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். காலை எழுந்த உடன் மூக்கைச் சீறிவிடு என்றும், சாப்பிடும் போது கையை கழுவிக் கொள் என்றும், மல கூடத்திற்கு செருப்பு அணிந்து செல் என்றும் பல்வேறு கட்டங்களில் மா நபி (ஸல்) அவர்கள் சொன்னதெல்லாம் சுத்தமான ஒரு சமுதாயத்தை கட்டி எழுப்பத்தான் என்பதிலே ஐயமில்லை. மல சல கூடங்களில் இருக்கும் பட்டீரியாக்களில் இருந்து பாதுகாக்க இஸ்லாம் எவ்வளவு தூரம் அறிவுரை வழங்கியுள்ளது. சிந்தித்துப் பார்க்க வேண்டும். வியாழக்கிழமைகளில் நகம் வெட்டி சுத்தமாகிக் கொள்ளுங்கள் என நபிகளார் நவின்றார்கள். இன்று நகம் கடிப்பதாலும் விஷக்கிருமிகள் தொற்று நோயைப் பரப்புவதாலும் வயிறு ஊதி நோயுற்று எத்தனையோ பேர் ஆஸ்பத்திரிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதிப்படுகின்றார்கள். நகத்தை நீளமாக வளர்த்து கின்னஸ் புத்தகத்தில் பெயரை பதித்துக் கொள்வதை விட சுத்தமாக இருந்து சுகதேகியாக இருப்பது எவ்வளவு மேலானதாகும். நாயகம் (ஸல்) கூறினார்கள், பாதையில் மற்றவருக்கு துன்பம் கொடுப்பவற்றை அகற்றி விடுங்கள் அது ஸதகாவாகும் என்றார்கள்.


இன்று பாதை எங்கும் குப்பையும், கூழமும், அழுக்கு நீரும் விடப்பட்டு சுற்றாடல் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காலையிலே தொழிலுக்கு செல்பவர்கள் கை பேக்குடன் போன காலம் மாறி இன்று கையிலே குப்பை பேக்கு ஒன்றையும் கூடவே தூக்கிச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. குப்பை தொட்டியில் போட்டு சூழலை பாதுகாப்பவர்களும் உண்டு. நடு வீதியிலே தூக்கி வீசி நகரத்தை நரகமாக்குபவர்களும் உண்டு. பெரிய பெக்டரிகளிலிருந்து வெளியேறும் கழிவுகளும் மாசுபடும் காற்றும் இன்று ஓசோன் படலத்தை ஓட்டையாக்கி விட்டது.

நாசகார ஆயுத தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுப் புகை இன்று சூரியனிலேயே ஒரு பெரிய கறுப்பு புள்ளியை தோற்றுவித்து விட்டது. சின்ன புள்ளி அல்ல இது பூமியைப்போல 13 மடங்கு பெரிய கறுப்பு பாறையை ஏற்படுத்தியுள்ளது. அத்தனைக்கும் காரணம் ஈமான் காக்கும் சுத்தமும், சுகாதாரமும் காக்கப்படாததாகும். டெங்கு, யானைக்கால் போன்ற பயங்கர அச்சுறுத்தலுக்கு காரணம் சுத்தம் இல்லாத போக்கே தவிர வேறு ஒன்றுமில்லை. தொற்று நோயினால் செத்து மடியும் மனித சமூகத்துக்கு யார் பதில் சொல்வார்கள்?

மதீனா பள்ளியை சுத்தம் செய்த கறுப்பு நிறப் பெண் மௌத்தான போது நபிகள் (ஸல்) கேள்விப்பட்டு அந்தப் பெண்ணின் அடக்கஸ்தலத்துக்கு சென்று தொழுதார்கள். இறந்த ஒரு பெண்ணின் கபுறில் நின்று இறைதூதர் தொழுதார்கள் என்றால் காரணம் என்ன? பள்ளியை சுத்தம் செய்த ஒரு உத்தமிக்கு நபிகளார் வழங்கிய முத்திரை தான் இது. சுத்தத்தின் முக்கியத்துவத்தை உணர்வோம். சுகமாக வாழ்வோம். சூழலைப் பாதுகாப்போம். இன்ஷா அல்லாஹ்!

**நன்றி :**
**சக்தி டீ.வீ.** (SHAKTHI - TV)
**10-08-2000**





## 23.
## ஸஹரின் மகிமை!

கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய புனித ரமழான் மாதத்தில் ஸஹர் என்ற வசனம் காதில் எட்டியதும் சந்தோஷப்படாத இதயங்களே இல்லையெனலாம். பிஞ்சு நெஞ்சங்களும் உம்மா எங்களையும் சஹருக்கு எழுப்புங்கள், என கெஞ்சிக் கேட்கின்ற மன சுபாவம் நிறைந்த அரும் வேளை தான் ஸஹர் நேரமாகும். இரவின் பிந்திய நேரத்திலேயே ஸஹர் செய்வதை நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத்தந்தார்கள். ஸஹர் உணவு பறக்கத்தாக இருக்கின்றது. வந்து உண்ணுங்கள் என்று சஹாபாக்களுக்கு நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வுக்காக ஒரு மனிதன் உடல் ரீதியான அமல்களில் ஈடுபட உடல் வலிமை மிக முக்கியமாக இருக்கிறது.

தொடர்ந்து பசியோடு இருந்து நோன்பு பிடிக்கும் படி இஸ்லாம் பணிக்காமல் பிந்திய இரவில் ஏதாவது உண்டு ஸஹர் செய்வதை நமக்கு சுன்னத்தாக்கப்பட்டுள்ளது. கண்மணி நாயகம் (ஸல்) கூறினார்கள் யகூதி நஸாராக்களையும் முஸ்லீம்களையும் வேறுபடுத்திக் காட்டுவது ஸஹர் நேர உணவாகும் என்றார்கள்.

எனது உம்மத்தில் மூன்றை நான் பயப்படுகின்றேன். மிதமிஞ்சிய சாப்பாடு, அதிகமான தூக்கம், இன்னும் சோம்பேரித்தனம் என்றார்கள். காலையிலும் பகல் பொழுதிலும் உணவருந்துவதைத் தவிர்த்து இப்தாரின் போதும் ஸஹர் வேளையிலும் உணவருந்துகின்றோம். இரு வேளை பசியில் இருக்க வேண்டும் என்பதற்காக ஸஹர் நேரம் மிதமிஞ்சி உணவருந்திப் பழகிக் கொள்ளக்கூடாது. உடல் நலம்பாதிக்கப்படும் அளவுக்கு உணவருந்தி நோன்பு நோற்பதால் நோன்பின் றூகிய்யத்தான உயிரோட்டம் இல்லாமல் போய்விடும்.

ரமழான் காலத்தில் வகை வகையான பதார்த்தங்களை வாய்க்கு ருசியாக சமைக்க வசதிபடைத்த வீடுகளில் சமையல் காரர்களைக் கூட ஏற்பாடு செய்து கொள்கின்றோம் என்றால் நமது நோன்பின் நோக்கத்தை நாமே பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறக்கத் நிறைந்த ஸஹர் நேர உணவை நாயகம் (ஸல்) அவர்கள் பண்புள்ள தோழர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். நாமும் ஸஹருக்காகத் தயார் செய்யும் உணவை அடுத்த வீட்டில் நோன்பு நோற்கும் அடியார்களின் நிலைமையறிந்து கொடுத்துதவ முன் வர வேண்டும். ரமழான் தலைப் பிறையிலிருந்து பள்ளி வாயல்களில் தங்கியிருக்கின்ற முஸாபிர்களுக்கு ஸஹர் உணவை அனுப்பி வைக்கலாம். நம்பிக்கை, நாணயம் உள்ள முஸாபிர்களாக இருந்தால் நம் வீட்டுக்கே அழைத்து வந்து அவர்களை ஸஹர் செய்ய ஏற்பாடு செய்தால் அதிகமான பறக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.


அநாதையில்லம், அகதிமுகாம்கள், மதரசாக்கள், ஹிஸ்புல்குர்ஆன் நடத்தும் இடங்களுக்கு ஸஹர் உணவை பொட்டலம் செய்து அனுப்பி அதிகமான அருளெனும் றஹ்மத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். உங்கள் வீடுகளுக்கு பக்கத்தில் தங்கியிருந்து கடமை புரியும் உலமாக்கள், ஆசிரியர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு நமது ஸஹர் உணவு மூலம் அவர்களுக்கும் ஸஹர் செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும். இரவு நேரத்தில் சரியான ஹோட்டல் வசதி இல்லாது எத்தனையோ ஊழியர்கள் நோன்பை கை விடுவதும் உண்டு. பொது நோக்கமுடைய மு.'.மீன்கள் இந்நபர்களை இனம் கண்டு ஸஹருக்கு சரியான ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டும்.

ஸஹர் நேரம் எழும்பும் நமது பிஞ்சு நெஞ்சங்களுக்கு நிய்யத் சொல்லிக் கொடுத்து உற்சாகப்படுத்திவிட வேண்டும். அடுத்த வீட்டார் குறித்த நேரம் வரை எழும்பவில்லையானால் அவர்களை சற்று அதட்டி விட வேண்டும். ஸஹருக்கு எழும்பியவர்கள் தனது முன் வீட்டின் லைட்டை எரிய விட வேண்டும். மின்சாரம் இல்லாத இடத்தில் விளக்கையாவது வெளிப்புறத்தில் ஏற்றிவிட வேண்டும்.

ஸஹருக்கு எழும்பும் நாம் தஹஜ்ஜத் தொழுகையை நிறைவு செய்யப்பழகிக்கொள்ள வேண்டும். பெண்களும் இதில் கவனம் எடுத்து தஹஜ்ஜத் தொழ வேண்டும். ஸஹர் நேரத்தை சிறப்பாக கழிக்கும் நாம் ஸஹரின் பின்னர் தூங்கி விடாமல் சுபுஹுத் தொழுகையையும் நிறைவேற்றிக் கொள்ள இந்த ஸஹர் நேரத்தில் துஆ கேட்டுக் கொள்வோமாக.

**நன்றி :**
**டயானா விஷன் டீ.வீ.** (DAYANA VISION - TV)
**14-11-2000**
**ஏற்பாடு: ஹுஸைன் பாரூக்**





# 24. புனித பத்ர் யுத்தம் நினைவு !

மக்காவில் இருந்து புனித மதீனாவுக்கு நாயகம் (ஸல்) அவர்கள் நபி பட்டம் கிடைத்து 13ஆம் ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதம் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் சென்றார்கள். மதீனாவில் வந்து இஸ்லாமிய த.'.வாப் பணியை செம்மையாக ஆரம்பித்தபோது மக்கத்து ஸஹாபாக்கள் நிம்மதியாக இருப்பதாக தெரியவில்லை.

அடிக்கடி குறைஷிகளின் மூலம் முஸ்லிம்கள் மக்காவில் துன்புறுத்தப்பட்டார்கள். கலிமா சொன்ன காரணத்தினால் இம்சிக்கப்பட்டார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் கேட்ட போது உத்தம ஸஹாபாக்கள் உணர்ச்சிவசப்பட்டு யுத்தம் செய்ய அனுமதி கேட்டு நின்றார்கள். எதையும் நிதானித்துச் செய்யும் ஏந்தல் றஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் அன்பு ஸஹாபாக்களுக்கு ஆறுதல் கூறி பொறுமையுடன் இருக்கும்படி போதனை செய்தார்கள்.

இஸ்லாமியர்கள் மக்காவில் அனுபவிக்கும் சித்திரவதை வாழ்க்கையை அல்லாஹ் அனுமதிக்கவில்லை போலும்.... நீதியான றப்பல்லவா அவன்? வஹி வழங்குவதில் வல்லவனல்லவா? அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அநீதி இழைப்பவர்களுடன் போராடும்படி ரப்பில் ஆலமீன் கட்டளையிட்டான். அல்லாஹ்வின் கட்டளையை செவியுற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முஸ்லீம்களில் ஒரு அணியைத் திரட்டினார்கள். அதில் 313 முஸ்லிம்கள் இருந்தனர். முஸ்லீம்களிடத்தில் 05 குதிரைகளும், 70 ஒட்டகைகளும் இரண்டு போர் கவசங்களும் காணப்பட்டன.

இவை அனைத்தையும் விட பேராயுதமாக இஸ்லாமிய ஸஹாபாக்களிடம் ஈமானுடைய இஸ்தீரமும் தக்வாவுடைய தைரியமும் காணப்பட்டது. மதீனாவின் நிருவாகத்தை கவனிக்க அபூலுபாபாவையும் பள்ளிவாயலின் இமாமாக உம்முமக்தூம் (ரலி) யையும் றுகையா என்ற பெண்மணியை கவனிக்க அவரின் கணவர் உஸ்மான் (ரலி) யையும் தாயின் நோயைக் கவனிக்க அபூஉமாமா (ரலி) யையும் நிறுத்தி விட்டு மற்றைய ஸஹாபாப் பெருமக்கள் பத்ரை நோக்கிப் புறப்பட்டார்கள். பத்ர் என்ற இடத்தை சற்று நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பத்ர்'' என்பது வர்த்தக சந்தையாகும். இது மக்காவிலிருந்து சிரியா செல்லும் வழியில் 300 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ளது. வர்த்தகர்கள் இங்கு களைப்பாறுவது வழக்கம். இங்கு ஒரு நீர் நிலையும் உண்டு. இந்த பத்ரை நோக்கி போய்க் கொண்டிருக்கும் போதுதான் சிரியாவுக்கு வந்த அபூ சுப்பியானின் வர்த்தகக் குழு சிரியாவிலிருந்து மக்கா நோக்கி வந்து கொண்டிருந்தது.

அபூ சுப்பியான் மக்கா குறைஷியாவார். முஸ்லிம்கள் மதீனாவில் இருந்து யுத்தத்திற்கு தயாராகும் செய்தியை அபூ சுப்பியான் மக்கா குறைஷித் தலைவர்களுக்கு மறைக்காமல் ஆவேசத்துடன் எடுத்துச் சொன்னார். அவ்வளவுதான் தாமதம் குறைஷியர்கள் யுத்தத்திற்கு தயாரானார்கள். அபூஜஃலின் பாரிய தலைமையில் அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டன.

100 போராடும் குதிரைகளும், 700 போர் கவசங்களும் சமையலுக்காக ஒரு தினத்திற்கு 10 ஒட்டகங்கள் வீதம் ஆயிரக்கணக்கானவர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டார்கள். இரண்டு அணிகளும் புனித பத்ர் யுத்தத்தை நோக்கி நடை பயின்றது. குறைஷிப்படையினர் குடித்து, கும்மாளமிட்டு, ஆடி, பாடி மிக ஆடம்பரமாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

முஸ்லிம்கள் பணிவாகவும், தாழ்மையாகவும் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அடியொட்டி அமைதியாக தஸ்பீஹ், தஹ்மீது ஓதியவர்களாக, நோன்பு நோற்று, தொழுது சாத்வீகமாக நடை பயின்றனர். குறைஷியர்கள் நீர் வசதி நிரம்பியிருக்கின்ற நிலப்பரப்பை தங்கள் வசமாக்கிக் கொண்டு கூடாரமடித்து குழுக்களை அமரச் செய்தனர்.

முஸ்லீம்கள் நீர் வசதியில்லாத இடத்தில் கூடாரமடித்தார்கள். குடிக்கவோ, குளிக்கவோ, வுழு செய்யவோ வாய்ப்பு இருக்கவில்லை. ஸல்லல்லாஹு (அலை) அவர்களால் கேட்கப்பட்ட துஆவுக்கு அல்லாஹ் அங்கீகாரம் அளித்தான். மழை சோவெனப் பொழிந்தது. ஸஹாபாக்கள் எத்தனங்களைப் பிடித்து தண்ணீரை சேமித்துக் கொண்டார்கள். தண்ணீரைக் கண்டதும் யுத்தத்தில் வெற்றி கொண்டது, போலான உணர்வை ஸஹாபாக்களுக்கு ஏற்படுத்தியது. புனித ரமழான் மாதம் 17ம் நாள் இரவு நபிகளார் (ஸல்) அவர்கள் துஆ கேட்டார்கள். அது மிக உருக்கமாக இருந்தது. யாஅல்லாஹ்! பெருமையும், மமதையும் கொண்ட குறைஷியர்கள் உனது றஸுலைப்



பொய்யாக்குன்றனர். உன்னை எதிர்த்து சூழுரைத்து நிற்கின்றனர். நீ வாக்களித்த வெற்றியை எமக்குத் தருவாயாக. யாஅல்லாஹ்! இச்சிறு கூட்டம் அழிக்கப்பட்டால் இப்பூவுலகில் இஸ்லாமியர்கள் எவருமே இல்லாத நிலை ஏற்படும். என்றும் உயிரோடிருப்பவனும் என்றும் நிலையானவனுமான றப்பே! என்று அந்த துஆ தொடர்ந்தது. இன்று யுத்த தினம் ஹிஜ்ரி 02ம் ஆண்டு புனிதமான ரமழான் மாதம். 17வது நாள் பொழுது புலர்ந்தது. இரு சாராரும் யுத்தத்திற்கு தயாரானார்கள்.

உடனே முஸ்லீம்களிலே இருந்து மதீனத்து அன்ஸாரிகள் மூவர் வந்தனர். இப்படித்தான் அரபு நாட்டு போர் மரபாகும். முதலில் ஒருவருடன் ஒருவர் எதிர்த்து வெற்றிதோல்வியை நிறுவிய பின்னர்தான் போராட்டம் சூடுபிடிக்கும். அந்த அமைப்பிலேயே இந்த போராட்டத்தையும் ஏற்பாடு செய்தனர். முஸ்லீம்களின் பகுதியில் இருந்து வந்த அன்ஸாரிகள் எனும் மதீனா வாசிகள் முன்பாய்ந்தது குறைஷிகளுக்குப் பிடிக்கவில்லை.

அவர்கள் வேண்டாம். எம்மைப் போன்ற மக்காவாசிகளே முன் வரவேண்டும் என குறைஷியர்கள் குரல் கொடுத்தனர். மக்காவாசிகள் சளைத்தவர்களா? அவ்வளவுதான் அடுத்த கணம் உத்தம நபி (ஸல்) அவர்களின் உத்தரவின்படி ஹம்ஸா (ரலி) அவர்களும், அலி (ரலி) அவர்களும், உபைதா (ரலி) அவர்களும் மோதுவதற்கு முன்வந்தார்கள்.

யுத்தம் இரு சாராருக்குமிடையே முரசொலிக்க ஆரம்பித்தது. முன்னால் வந்த குறைஷியர் மூவரின் தலையும் தறிக்கப்பட்டு நிலத்தை முத்தமிட்டுக் கிடந்தது. அந்த வாள் வீச்சு முஸ்லீம்களின் அபாரச் செயலாக மாறியது.

முஸ்லீம்களின் பக்கம் பாய்ந்த மூவரில் உபைதா (ரலி) அவர்களின் காலில் மாத்திரம் உராய்ச்சல் ஏற்பட்டிருந்தது. நாயகம் (ஸல்) அவர்கள் போரை உஷார்படுத்தினார்கள். காபிர்கள் தங்களது தலைவர்களை இழந்த ஆத்திரத்தில் வேகமாகப் போராடினார்கள்.

ஆனாலும்.... இந்த யுத்தத்தில் நிச்சயமாக அல்லாஹ்வின் நேரடியான உதவி கிடைத்தது என்பதில் ஐயமில்லை. இதுபற்றி அல்லாஹுத்தஆலா குர்ஆனில் கூறும்போது.... பத்ரில் நீங்கள் எதிரிகளைவிட ஆயுதத்தாலும், தொகையாலும் குறைந்தவர்களாக இருந்த சமயத்தில் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தான். ஆகவே நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு அல்லாஹ்வுக்குப் பயந்து வழிபட்டு நடவுங்கள். இந்த அத்தியாயத்தின் மூலம் அல்லாஹ்வின் பேருதவி பத்ரில் கிடைத்ததை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அல்லாஹ்வின் வானத்து அமரர்கள் அணிஅணியாக வந்து இந்த யுத்தத்தில் பங்கேற்றார்கள். இதனை பல ஸஹாபாக்கள் கண்ணாரக் கண்டார்கள்.

மு.்.மீன்கள் ஒரு ஸஹாபி எதிர்படையில் ஒருவரைத் துரத்திச் செல்லும் போது அவரை நெருங்குமுன்பதாகவே அந்த எதிரியின் தலை வெட்டப்பட்ட நிலையில் உடலிலிருந்து வீழ்ந்து துடிப்பதனைக் கண்டு வியப்புற்று நின்றார்.

தான் எதிரியை வீழ்த்துவதன் முன்னால் அந்த எதிரி எப்படி வீழ்த்தப்பட்டார். என்பதை எண்ணி எண்ணி அந்த ஸஹாபியின் மூளை சுழல ஆரம்பித்தது. சில ஸஹாபிகள் நிலத்தில் கால்பதியாத குதிரைகள் போவதை கண்டு அதிசயித்தார்கள். இந்த மலாயிகத் எனும் வானவர்களின் அணியை வான்மறை அல்குர்ஆன் உறுதி செய்கின்றது.

நபியே அப்பொழுது நீர் விசுவாசிகளை நோக்கி வானத்திலிருந்து அனுப்பப்பட்ட 3000 மலக்குகளைக் கொண்டு உங்கள் இறைவன் உங்களுக்கு உதவி செய்தது உங்களுக்குப் போதாதா? என்று கூறியதையும் நினைத்துப்பாரும்.

இந்த ஆயத்தின் மூலம் அமரர்களின் அணி அகிலத்திற்கு வருகை தந்து பத்ர் யுத்தத்தில் பங்கேற்றது புலனாகின்றது. இந்த யுத்தத்தில் குறைஷித் தலைவர் அபூஜ.்.லுக்கு பயங்கர விளைவு ஏற்பட்டது. அவ்பின் சகோதரர் முஆத் (ரலி) அபூ ஜ.்.லை கொலை செய்ய முயற்சித்தார். அவரோடு முஅவ்வின் என்பவரும் இணைந்து கொண்டார். இவர்கள் இருவரும் சிறுவர்கள். இவர்கள் நடக்கும் போது கழுத்தில் தொங்கும் வாள் தரையில் இழுத்துக் கொண்டு வந்தது.

இருவரும் அபூஜ.்.ல் எங்கே? அபூஜ.்.ல் எங்கே? என தேடலாயினர். இவர்களுக்கு அபூஜ.்.ல் நின்ற திசை காட்டப்பட்டது. நேராக இருவரும் சென்று அபூஜ.்.லின் குதிரையின் காலை வெட்டினார்கள். இதனை கண்ட அபூஜ.்.லின் மகன் இக்ரிமா விரைந்து



வந்து சிறுவரின் புயத்தை வெட்டினான். கை தொங்கிக் கொண்டிருந்தது. தொடர்ந்து தொங்கும் கையால் யுத்தத்தில் ஈடுபட முடியாமல் சிறுவர் தனது கையை காலின் கீழ் வைத்து யுத்தமுனையில் கையை எறிந்து விட்டார். மீண்டும் மறு கையில் வாள் ஏந்தி போராடினார்.

இறுதியில் இந்த யுத்தத்தில் அபுஜ.்.ல் கொல்லப்பட்டார். இந்த யுத்தத்தில் முஸ்லீம்களுக்கு பெரும் வெற்றி கிடைத்தது. முஸ்லீம்கள் தரப்பில் எட்டு அன்ஸாரிகளும், 06 முஹாஜிரீன்களும் மொத்தமாக 14 பேர் ஷஹீதாகினார்கள்.


எதிரணியில் 70 பேர் இறந்தார்கள். 74 பேர் கைது செய்யப்பட்டார்கள். காபிரீன்கள் சடலத்தை ஒரு இடத்தில் புதைத்து விட்டு கைதிகளுக்கு முஸ்லீம்களுக்கு பணம் செலுத்தி வரும்படியும், படித்தவர்கள் முஸ்லிம் சிறார்களுக்கு எழுத்தறிவைப் புகட்டி விடுதலையாகும் படியும் நபிகளார் கைதிகளை கண்ணியமாக நடாத்தினார்கள்.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லீம் சேவை**
**30-05-2001**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 25. ரமழானின் முந்திய 10ல் ரஹ்மத்தின் முக்கியத்துவம்!

அருமை ரமழான் வந்து விட்டது. அகிலத்தில் உள்ள அனைத்து முஸ்லீம்களின் உள்ளமும் சந்தோஷத்தில் சங்கமமாகி இருக்கின்றது. காரணம் கருணை நபி (ஸல்) கூறினார்கள். ரமழான் வருவது கொண்டு யார் சந்தோஷம் பெறுகின்றாரோ அல்லாஹ் அவருடைய உடம்பை நரகத்தை விட்டும் தடுத்து விடுகின்றான் என்றார்கள்.

ரமழானின் ஆரம்பமே ஒரு மகிழ்ச்சி! மகிழ்ச்சிக்கு அல்லாஹ் வழங்கும் பரிசு மாபெரும் சுவனமாகும். எண்ணிப்பார்க்க நெஞ்சம் இனிக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ் ரமழான் மூன்று கட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய ஆரம்பம் ரஹ்மத் உடைய பத்து நாட்களாகவும், நடுப்பத்து பாவமன்னிப்புடைய மஃ. பிரத்துடையதாகவும், பிந்திய பத்து நாட்கள் இதுகுன் மினன்நார் நரகத்தை விட்டும் விடுதலை பெறுவதாகவும் அமைந்திருக்கின்றது.

நாங்கள் ரமழானுடைய முந்திய பத்துப் பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால் அதிவிஷேசிக்கத்தக்க அற்புதமான நன்மைகளை அது அள்ளி வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

ரமழானுடைய ஆரம்ப முதல் சுவனத்தின் வாயல்கள் திறக்கப்பட்டு விடுகின்றன. நரகத்தின் வாயல்கள் அடைக்கப்பட்டு விடுகின்றன. தௌபாவின் வாயல்கள் கதவடைக்கப்படாமலேயே இருக்கின்றது. அகிலத்தையே அட்டகாசம் புரிந்து திரிகின்ற ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன.

கண்மணி நாயகம் (ஸல்) கூறினார்கள். ரமழானுடைய ஆரம்பத்தில் அல்லாஹ் ஜல்ல ஸஃனுஹு தஆலா கூறுகின்றான். யார் எங்களை நேசிக்கின்றார்களோ நாம் அவர்களை நேசிக்கின்றோம். இன்னும் யார் எங்களை தேடுகின்றார்களோ நாம் அவர்களை தேடுகின்றோம். இன்னும் யார் எங்களிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகின்றார்களோ நாம் அவர்களுக்கு ரமழானுடைய கண்ணியத்தைக் கொண்டு பிழை பொறுக்கத் தேடுகின்றோம் என்பதாகவும்... அல்லாஹுதஆலா நன்மை தீமை எழுதக் கூடிய அமரர்களுக்கு அறிவிக்கின்றான். இத்தகைய நல்லவர்களுக்கு புனித ரமழானில்



நன்மையை மட்டும் எழுதும் படியும் அவர்களின் தவறுகளை எழுதாமல் இருக்கும் படியும் பணிக்கின்றான். மேலும் அவர்களின் கடந்த காலப் பாவங்களையும் அல்லாஹ் போக்கி விடுகின்றான் என்பதாக ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். இந்த அருமை பொருந்திய ரமழானில் ஆரம்பத்தில் நல்அமல்களுக்காக எங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் மீது அன்பையும், பண்பையும் இறுக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருள் இறங்கும் இக்கால கட்டத்தில் அதன் மீது நம்பிக்கை வைத்து அருளுக்குரிய அடியானாக மாறவேண்டும். பாவங்களுக்காக ரமழானில் பட்சாதாபப்பட்டு இராவிழித்து கண்ணீர் மல்க கல்பு உருகி பிரார்த்திக்க வேண்டும். மனிதன் சுமந்திருக்கும் பாவத்திற்கு மருந்து ரமழானில்தான் இருக்கின்றது என்றால் அதைப்பருகிக் கொள்ள ஏன் நாம் தயக்கம் காட்ட வேண்டும்?

புனித ரமழான் மாதம் இந்த மணியான நாட்களில் நோன்பை நோற்காது இருக்கும் மக்களின் நிலமையை எண்ணிப் பார்க்க வேண்டும். கைக்கெட்டியதை வாய்க் கெட்டாத கூட்டமாக அல்லவா ஆகிவிடுவார்கள். இந்த ரமழானில் ஆரம்பத்தில் இதை விட மனவேதனை என்னதான் இருக்கின்றது?

நபிமணி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ரமழான் மாதம் காரணமின்றி நோன்பை விட்டு காலமெல்லாம் நோன்பிருந்தாலும் அதனுடைய பயனை அடைய முடியாது என்று உரைத்தார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் அருள் வரும் போதே அதனை அள்ளிப் பருக வேண்டும்.

தாவூதுத் தாயி என்ற பெரியார் கூறுகின்றார்கள். ரமழானுடைய ஆரம்ப இரவு தூக்கம் சற்று மிகைத்து விட்டது. தூக்கத்தில் ஒரு கனவு கண்டேன். அதில் சுவர்க்கம் இருப்பதையும் அதன் பக்கத்தில் ஒரு ஆற்றின் அருகே நான் அமர்ந்திருப்பதையும் அந்த சுவர்க்கத்தில் சூரிய பிரகாசத்தை ஒத்த முகமுடையவர்களைக் கண்டேன். அப்போது நான் **''லாஹிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரஸுலுல்லாஹ்'' என்று சொன்னேன். அவர்களும் பதிலுக்கு ''லாஹிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரஸுலுல்லாஹ்''** என்று சொன்னார்கள். அப்போது இவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்த ஹாமிதீன்கள் என்னும் நோன்பு நோற்றவர்கள் என்றும், ரமழானில் றுகூஉ, சுஜுது செய்தவர்கள்தான் என்பதை என் மனம் சொல்லிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் ஜல்லசஹ்னுஹுஹுவதஆலா நோன்பாளிக்கு நானே கூலி தருகின்றேன் என்று கூறியிருக்கும் போது அந்த கூலியின் மகத்துவத்தை எப்படி உதாரணத்தின் மூலம் விளங்கப்படுத்த முடியும்? சூரியப் பிரகாசமான முகத்தை சொர்க்கத்தில் நோன்பாளிக்கு கொடுத்திருப்பதே அல்லாஹ்வின் அளப்பரிய சேவையாகும்.

நோன்பாளியின் துஆ மிகப் பெருமதி வாய்ந்ததாக இருக்கின்றது. பிரார்த்தனை உலகில் வந்த எல்லா நபி மாருக்கும் கொடுக்கப்பட்டேயிருக்கின்றது. அவர்கள் தங்களின் தேவை நிறைவேறும் வரை அல்லாஹ்வின் நம்பிக்கை வைத்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் அவர்களது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது போல முகம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தினர்கள் ரமழானில் கேட்கும் துஆ விஷேசமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

அல்லாஹ்விடத்தில் தனது கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும் துஆவின் மூலம் முறையிட்டு வெற்றி கண்டவர்கள் கோடான கோடி மானுடர்கள் ஆவார்கள். அவர்களில் ஒருவராக நாமும் ஏன் இருக்கக்கூடாது? இப்போதே நமது பிரச்சினைகளை அல்லாஹ்விடத்தில் ஒப்புவிப்போம். நோன்பு திறக்கும் வேளையிலும், ஸஹர் செய்யும் வேளையிலும் கேட்கப்படும் துஆக்கள் நிச்சயமாக அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த ரமழானில் முற்பத்திலே ஏந்தாத கரங்களினால் என்ன பயன் உண்டு?

நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். சுவனம் நான்கு நபர் அளவில் கொண்டு வரப்படும் குர்ஆன் ஓதுபவர்கள், நாவைப் பேணுபவர்கள் பசித்தவருக்கு உணவு வழங்குபவர்கள், நோன்பு நோற்பவர்கள் என மாநபி (ஸல்) மலர்ந்தருளினார்கள். அல்லாஹ்வின் சுவனம் அலங்கரிக்கப்பட்டு நோன்பாளிக்கு வழங்கப்படும் அதே நேரத்தில் குர்ஆன் ஓதுபவர்களுக்கும் சுவனம் காத்து நிற்கின்றது. ரமழானில் ஒரு அட்சரத்துக்கு முப்பது நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருக்கின்றது.

ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைக்கும். இந்த ரமழானில் ஆரம்பத்திலிருந்தே தினமும் ஒரு ஜுஸ்உ வீதம் ஓதி வருவோமேயானால் ரமழானின் முடிவில் 30 ஜுஸ்உகளையும் ஓதிமுடிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும், அதை விட அதிகமாக ஓதுபவர்கள் மேலும் சிறப்பான நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்கள்.



ரமழானின் ஆரம்பத்திலேயே பள்ளிவாயல்களில் நடைபெறும் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸுகளில் பங்கு பற்ற முயற்சி செய்ய வேண்டும். அது நமக்கு குர்ஆனைத் திறன்பட ஓதுவதற்குப் பயிற்சியளிக்கின்றது. அல்குர்ஆனை அழகாக ஓதக் கற்றுக் கொள்வதும் மனித வாழ்வில் கிடைத்த மாபெரும் பாக்கியமாகும்.

நோன்பாளியின் மௌனம் அமைதி நன்மையாகப் பதிவு செய்யப்படுகின்றது. நோன்பாளி ஒரு பக்கமிருந்து மறுபக்கமாக உறங்கிக் கொள்வதும் நன்மையாகவே பதிவு செய்யப்படுகின்றது. பகலிலும், இரவிலும் நாவைப் பேணி நடந்து கொள்ள வேண்டும். பிறரைப்பற்றியும் பாவமான வீணான பேச்சுக்களையும் பேசும் போது அந்த நோன்பு ''பாயிதா'' என்ற பிரயோசனம் அற்றதாக மாறிவிடுகின்றது.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவருக்கு பேச்சு அதிகமாகிவிட்டதோ அவருக்கு பாவம் அதிகரிக்கின்றது. யாருக்கு பாவம் அதிகரிக்கின்றதோ அவரின் உள்ளம் மரணித்துவிடுகின்றது. யாருடைய உள்ளம் மரணித்துவிட்டதோ அவர் செல்லும் இடம் நரகமாகும் என்பதாக நாயகம் (ஸல்) நவின்றார்கள். பயன் இல்லாத பேச்சுக்களால் பாவத்தையே தேடுகின்றோம். காலை எழுந்தது முதல் வீணான பேச்சுக்களை பேசியும், தர்கித்தும், விவாதித்தும், வழக்காடியும் காலத்தை கழித்து என்ன பயன் இருக்கின்றது?


பிறரைப் பற்றி பேசுவதால் அடுத்தவரின் ஜடலத்தை கீறிச் சாப்பிடுவதற்கான பாவத்தைப் பெறுகின்றோம். இந்த அழகிய ரமழானிலுமா இன்னொருவரைப் பற்றிப் பேசி குற்றத்தைச் சுமந்து கொள்வது? சிந்திக்க வேண்டும். கண்மணி நாயகம் (ஸல்) கூறினார்கள். நாவை அடக்குவதே மனிதனுக்கு நிம்மதியானதாகும் என்றுரைத்தார்கள்.

ரமழானின் முதல் பத்திலேயே நாவை அடக்க ஆண்களும், பெண்களும் பழகிக் கொள்ள வேண்டும். பகல் பொழுதிலே அதிக ஓய்வு பெண்களுக்கு கிடைத்தாலும் அதனை நன்மையான வழியிலேயே செயல்படுத்த முயற்சிப்போமாக.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லிம் சேவை – சஹர் சிந்தனை**
**06–11–2001**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 26.
## அண்ணலாரின் அழகிய முன்மாதிரிகள் !

அகில உலகுக்கும் வழிகாட்டியாக வந்த வள்ளல் அஹ்மத் முஸ்தபா (ஸல்) அவர்களின் மீலாதுன் நபியை நினைவு படுத்துகின்ற வேளை அந்த அருங்குண நாதரின் வாழ்க்கை முன்மாதிரியையும், அழகிய குணங்களையும் அலசி ஆராய்ந்து பார்க்க கடமைப் பட்டிருக்கின்றோம்.

உலகில் தோன்றிய அனைவருமே மக்களால் பாராட்டப்பட்ட பின்னரே அல்லாஹ்வினால் பாராட்டப்படுகின்றனர். ஆனால் அகிலத்தின் முன்னோடி நம்முடைய றஸூல் (ஸல்) அவர்கள் இறைவனாலேயே பாராட்டப் பெறுகின்றார்கள். அல்குர்ஆனில் அல்கலம் எனும் அத்தியாயத்தில் - மேலும் நபியே நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணமுடையவராக இருக்கின்றீர். (68:4) என்பதாக பிரஸ்தாபிக்கின்றான்.

படைத்த றப்பில் ஆலமீனிடம் பண்புக்குரிய பட்டத்தை முதலில் பெற்றுக் கொண்டு கருமம் ஆற்றுகின்ற பாக்கியம் வேறு யாருக்குத்தான் கிடைத்திருக்கின்றது. ஒரு மனிதனின் வாழ்க்கையில் மனைவி முக்கிய இடத்தை பெறுகிறாள். வாழ்க்கைத் துணைவி கணவனின் உண்மை நிலைப்பாட்டை எப்போதும் எச்சந்தர்ப்பத்திலாவது எடுத்துரைக்கத் தவறமாட்டாார்கள். அத்தகைய மாண்புறும் மனைவிமார் நபிகளார் (ஸல்) அவர்களுக்கு இருந்தனர். அவர்களில் அன்புக்குரிய மனைவி ஆயிஷா (றழி) அன்ஹா நபிகளாரின் குணத்தைப் பற்றிக் கூறுகையில் ... ‘‘நபியுல்லாஹி (ஸல்) அவர்களின் குணம் குர்ஆனாக இருந்தது.’’ சுருக்கமாகவே கூறியிருக்கின்றார்கள்.

குர்ஆனே குணம் என்றால் முழுக் குர்ஆனில் சொல்லப்பட்ட நன்மைகள் அனைத்தையும் ஒரே கையில் ஏந்திய ஒரு ஆண்மகவாக மாநபியவர்களை மனக்கண் முன் நிறுத்தினால்.... ஆயிஷா (றழி) கூறிய குர்ஆனின் குணத்தை கண்டு கொள்ளலாம். பாராட்டியதன் பின்னால் மாநபி (ஸல்) அவர்களைப் பின்பற்றும் மக்கள் கூட்டம் தான் மகுடம் சூட்ட வேண்டும்.



அரபுலகில் சிறிய வயதில் ‘அல் அமீன்’ நம்பிக்கைக்குரியவர் என்ற புகழையும் பாராட்டையும் பெற்றார்கள். அதைவிட ஒரு பாராட்டு உம்மத்திடமிருந்து வேறு எதைத்தான் பெறமுடியும்? அருமையான பாராட்டு அற்புதமான பாராட்டு.

காருண்ய நபி (ஸல்) அவர்கள் தங்கள் சார்பாக மூன்று விஷயங்களைக் கவனித்து வருவார்கள். 1 வீண் விவாதங்களில் தலையிட மாட்டார்கள். 2 அவசியமில்லாமல் பேசமாட்டார்கள். 3 பிரயோசனமில்லாத காரியங்களில் எப்போதும் சம்பந்தப்பட மாட்டார்கள். இது போன்று பிறர் சார்பாகவும் மூன்று காரியங்களைக் கவனித்து வருவார்கள். 1 எவரையும் கெட்டவரென்று எப்போதும் கூறவே மாட்டார்கள். 2 பிறர் பாலுள்ள குற்றம் குறையாவையென்று தேடித் துருவிக் கொண்டிருக்க மாட்டார்கள். 3 பிறமக்களின் அந்தரங்க வாழ்க்கையை தேடி அலையமாட்டார்கள்.

ஒரு முஸ்லிமை சந்தித்தால் ஸலாம் எனும் - அழகிய முகமன் சொல்வார்கள். தன்னை சந்திக்க வந்தவருடன் கைகொடுத்துப் பேசுவார்கள். வந்தவர் கையை எடுக்கின்ற வரை கையை திடீரென எடுத்துப் பேச்சை முறித்துக் கொள்ள மாட்டார்கள். வேறெவரும் பேசிக் கொண்டிருக்கும் போது இடையே குறுக்கே பேசமாட்டார்கள். எவரும் முன்பின் தெரியாமல் பேச ஆரம்பித்தால் பொறுமையுடன் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். தன்னுடன் பேச விளைபவருக்கு சந்தர்ப்பத்தை கொடுத்து செவிமடுப்பார்கள்.

அவரின் பேச்சு முடிவடைந்த பின்னரே பேச ஆரம்பிப்பார்கள். சிரித்த முகத்துடனேயே பழகுவார்கள். எப்போதும் உண்மையையே பேசுவார்கள். வாக்குமாறமாட்டார்கள். நபிமணி (ஸல்) அவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள். மண்சுவர்களினாலான வீட்டுக்குள் தங்கள் இல்லற வாழ்க்கையை நடாத்திச் சென்றார்கள். கயிற்றுக் கட்டில் ஒன்றும் தண்ணீர் வைக்கும் தோல்பையையுமே அவர்களது அறையில் காணக் கூடியதாக இருந்தது. வீட்டில் கணவன் மனைவிக்கான கட்டிலும் விருந்தினருக்கான கட்டிலும் போதும் என்று கூறினார்கள்.

பலநாட்கள் அவர்கள் வீட்டில் அடுப்பு எரியாமல் இருந்தது. அடுப்பு ஏற்ற வறுமை தடைக்கல்லாக இருந்தது. வறுமையை அரவணைத்துக் கொண்டதன் தாத்பரியத்தை நாயகம் (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் வினவினால் ''என் நிலமை நடுப்பகலில் குதிரை மீது சவாரி வருபவன் இளைப்பாறும் பொருட்டு ஒரு மரநிழலிலே தங்கி விட்டு அப்பால் புறப்பட்டுச் செல்வதை ஒக்கும்'' என்றார்கள். ஆடம்பர வாழ்க்கையும், வீணான செலவுகளும் அளவுக் கதிகமான சுகபோகமும் அவர்களுக்கு பிடிக்கவில்லை. பணத்துக்கோ, சொத்துகளுக்கோ தன்னை அர்ப்பணியாது இஸ்லாம் என்ற இனிய மார்க்கத்தின் கனிந்த குணங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தார்கள்.

நீதி தவறாது மக்களை வழிநடத்தினார்கள். எப்போதும் எவருக்கும் பாரபட்சம் காட்ட மாட்டார்கள். சமாதானமான தீர்வுகளையும், தீர்ப்புக்களையுமே வழங்குவார்கள். ''சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் மைந்தொரு பாற் கோடாமை சான்றோர் கனி'' என்பதற்கமைய எல்லோருக்கும் திருப்திதரக்கூடிய பாரபட்சமற்ற தீர்ப்புக்களை வள்ளல் நபி (ஸல்) வழங்குவார்கள்.

ஒரு யூதனுக்கும் ஒரு முஸ்லிமுக்குமிடையே வியாபார பிணக்கு ஏற்பட்ட போது நீதி யூதரின் பக்கம் இருந்ததனால் யூதரின் பக்கமே தீர்ப்பு வழங்கினார்கள். ஜன்ம விரோதிகளாக இஸ்லாத்தின் பக்கம் யூதர்கள் இருந்த போதும் நீதியை மறைக்கத் தலைப்படவில்லை.

ஒரு முறை மக்ஜூம் வர்க்கப் பெண் திருடியதால் அவள் பெரிய இடத்துப் பெண் என்பதால் அவளை மன்னித்துவிட குறைஷியர்கள் உஸா பின் ஸைதை நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பினார்கள். சிபாரிசுக்கு வந்த ஸைதுக்கு நபிகளார் (ஸல்) என்ன சொன்னார்கள் தெரியுமா? ''பனீ இஸ்ரவேலர்களும் பாரபட்சம் காட்டியே அழிந்து போனார்கள். என்னுடைய மகள் பாத்திமா திருடிய போதும் நிச்சயமாக கையைத் துண்டித்து விடுவேன்'' என்றார்கள். இதிலிருந்து நீதிக்காக அவர்கள் ஒரு போதும் பாரபட்சம் காட்டவில்லை என்பதைக் காணமுடிகின்றது.

மாநபி (ஸல்) அவர்கள் மன்னிக்கும் மனப்பான்மை உடையவர்களாக இருந்தார்கள். தன்னுடைய சொந்த சாச்சா ஹம்ஸா (றழி) அவர்களை உஹது யுத்தத்தின் போது ஹிந்தா என்ற பெண்மணி அவர்களது ஈரலை சப்பித் துப்பினார்கள். இப்படியான அசிங்கமான அழுக்காற்றல் மிக்க செயலைக் கூட நபிகளார் (ஸல்) மன்னித்து ஹிந்தாவுக்கு இஸ்லாத்தில் பிரவேசிக்க இடமளித்தார்கள். சுத்தமாக வாழ்வதற்கு போதுமான அறிவுரைகளை நல்கினார்கள். அவர்கள் ஒரு வாழ்வியல் முன்னோடியாக திகழ்ந்தார்கள். பல்லை



சுத்தம் செய்வதை பல்வேறு முறைகளில் விளக்கப்படுத்தினார்கள். மலசல உபாதைகள் கழிக்கச் செல்லும் போது எந்த அமைப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை சொல்லத் தவறவில்லை.

கண்ணியத்துக்குரிய நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் குழந்தைகளுடன் மிக அன்பு செலுத்துபவர்களாக இருந்தார்கள். அது போன்று முதியவர்களுடனும் முகம்கோணாது முகமலர்ச்சியோடு கௌரவித்தார்கள். அவர்கள் சிறியவர் முதியவர் பற்றிய சிறப்பை விபரிக்கும் போது - எங்களில் யார் சிறியவர்களுக்கு இரக்கம் காட்ட வில்லையோ மேலும் பெரியவர்களுடனும் இரக்கம் காட்ட வில்லையோ அவர் என்னைச் சார்ந்தவர்களல்ல. என எடுத்தியம்பினார்கள். வெளியூர்களுக்கு சென்று திரும்பும் போதெல்லாம் சிறுவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள்.

தம் பேரப்பிள்ளைகளான இமாம் ஹஸன் (றழி) ஹுஸைன் (றழி) இருவரையும் தம் வயிற்றில் ஏற்றிக் கொள்வதும், காலில் ஏற்றி ஏறிவரச் சொல்லியும் இரக்கம் காட்டினார்கள். மாண்புக்குரிய நபி (ஸல்) அவர்கள் நோயாளிகளைச் சென்று விசாரித்தார்கள்.

ஸஃது (றழி) அவர்களுக்கு அகழ்ப் போரின்போது அம்புக் காயம் ஏற்பட்டு அவதிப்பட்டபோது அவரை அடிக்கடி சென்று பார்க்க வேண்டும் என்பதற்காக ஸஃது (றழி) அவர்களை பள்ளிவாயலில் அருகே கூடாரம் அடித்துத் தங்கச் சொன்னார்கள். ஸைதிப்னு அர்ஹம் (றழி) க்கு கண் நோய் ஏற்பட்ட போது உடல் நலம் விசாரிக்க நபிகளார் (ஸல்) அவர்கள் சென்றார்கள். நோயாளியை விசாரிக்கச் செல்பவர்களுக்கு ''சுவனபதியில் ஓர் இல்லத்தை நீர் ஏற்படுத்திக் கொண்டு விட்டீர் '' என்று கூறுவார்கள்.

பூமான் நபி (ஸல்) அவர்கள் புறம் பேசுவதை முற்றாக எதிர்த்தார்கள். அவதூறு கூறுவதையும் அடியோடு சாடினார்கள். ஒரு முறை நபிகளார் மனைவி ஆயிஷா (றழி) ஸபிய்யா (றழி) அவர்களைக் குறிப்பிட்டு ''அவர் குட்டையாக இருப்பதே தாங்கள் குறைகாணப் போதுமாயிற்றே'' என்று கூறினார்கள். அதைக் கேட்ட நபிகளார் (ஸல்) நிச்சயமாக நீர் கூறிய வார்த்தைகள் கடலில் கலக்கிவிடப்படுமானால் அது மெய்யாகவே அக்கடலை அழுக்கடையச் செய்துவிடும் என்று செப்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம நபி (ஸல்) அவர்கள் ஊழியர்களிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டார்கள். நாயகம் (ஸல்) அவர்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி செய்த அனஸ் (றழி) கூறுகின்றார்கள். ''அல்லாஹ்வின் தூதர் - அவர்கள் தன்னைப் பார்த்து ஏன் இதனைச் செய்தாய்? என்றோ ஏன் அதனைச் செய்யவில்லையென்றோ கேட்டதே கிடையாது'' என்றார்.


இல்லற வாழ்வில் மனைவிகளுடன் பாசமாகவும் நேசமாகவும் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து கொண்டார்கள். - தன் மனைவியிடம் நல்லவர்களாக இருப்பவர்களே உங்களில் நல்லவர் என்று ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினார்கள்.

மாண்பு நபி (ஸல்) அவர்கள் கோபம் கொள்பவர்களாக இருக்கவில்லை. அவர்கள் கோபத்தை அடக்குபவர்களாக இருந்தார்கள். அவர்கள் தனக்கு தீங்கு இனைக்கப்படும் போது கோபப்படுவதில்லை. அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் போதுதான் கோபப்படுவார்கள். அரசியல், பொருளாதாரம், வணிகம், வாழ்க்கை அனைத்திலும் வழிகாட்டியாக வாழ்ந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிகளை - என்றும் பின்பற்றி நடப்போமாக.

**நன்றி :**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**முஸ்லிம் சேவை - மீலாத் சிந்தனை**
**12-05-2003**
**ஒலிப்பதிவு ஏற்பாடு: அல்ஹாஜ் எம். இசட். அஹமட் முனவ்வர்**

OOOOOO





# 27.
# நன்றி மறப்பது நன்றல்ல!

மனிதர்களுக்கு யார் நன்றி செலுத்த வில்லையோ அவர் இறைவனுக்கு நன்றி செலுத்தியவராக ஆகமாட்டார் என நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

மனிதன் ஒருவருடன் ஒருவர் தேவையுற்றவர்களாக சமூகத்தில் வாழ வேண்டிய அமைப்பிலுள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இக்கால கட்டத்தில் பிறரிடமிருந்து எத்தனையோ உதவிகளைப் பெற்று தனது தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றான். இத்தகைய இரக்க மனப்பான்மையுடன் உதவி ஒத்தாசைகளைச் செய்த மனிதர்களுக்கு நாம் எப்போதும் நன்றியுள்ளவர்களாக மாற வேண்டும்.


உதவியைப் பெறுகின்ற போது மாத்திரம் கூனி, குறுகி கண்ணீர் வடித்து உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அதனை நிறைவேற்றும் போது மிகச் சிரமத்துடனும் பல கெடுபிடிகளுக்கு மத்தியிலே நிறைவேற்றிக் கொள்கின்றனர். உப்பிட்டவரை உள்ளளவும் நினை! என்று சொல்வார்கள். காலமெல்லாம் கஷ்டத்தில் உழன்று மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்து நின்ற ஒருவர் தனது திடீர் முன்னேற்றங்களினால் எல்லோரையும் மதிக்காது பேசாது நன்றியற்ற சுபாவத்துடன் நடந்துகொள்ளக் கூடாது.

இன்று ஒரு முறை உதவி செய்தவர்கள் மறுமுறை உதவி செய்ய முடியாது என ஒதுங்கிக் கொள்வதற்கு காரணம் மனிதனது நன்றியில்லாத பழக்கவழக்கங்களே யாகும். தனக்குப் படித்துத் தருகின்ற ஆசிரியர் - தான்படித்த கல்விக்கூடம் - தான் வேலை செய்த முகவர் நிலையங்கள் அங்கே கடமையாற்றிய அலுவலர்கள் எல்லோருடனும் எப்போதும் அன்புடையவர்களாகவும், நன்றி உடையவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். நன்றியுள்ள மனிதர்களைப் பார்த்து மானுட வர்க்கமே நன்றி கூறுவதோடு இறைவனும் அவனை சிறந்தவனாகப் பொறுப்பேற்றுக் கொள்கின்றான்.

**நன்றி :**
**இலங்கை ரூபவாஹினி முஸ்லிம் சேவை**
**12-12-2001**
**ஒளிப்பதிவு ஏற்பாடு: எம். மபாஹிர் மௌலானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 28.
## பெற்றாரைப் பேணு!

"தாய் தந்தையர்களை சீ! என்ற வார்த்தை கொண்டு ஏசாதீர்கள்" என அல்குர்ஆன் கூறுகின்றது. தாயும் தகப்பனும் ஒரு மனிதனின் உள்ளத்தில் என்றும் நிலைத்திருந்து நினைவு கூரப்பட வேண்டியவர்களாகும்.

ஒரு குழந்தையை பெற்றெடுக்க தாயும், தகப்பனும் எடுத்துக் கொள்கின்ற சிரமம் எண்ணிமுடிக்க இயலாததாகும். குழந்தைகளின் நோய் துன்பத்தில் கூட இரவு - பகலாக விழித்துக் காத்திருப்பார்கள். இத்துணை சிரமங்களையும் அனுபவித்து நம்மை சமுதாயத்தின் முன்னே சிறந்த மனிதனாக நடைபயில ஒத்தாசையளித்த பெற்றாரை நாம் மறந்துவிடக் கூடாது. பெற்றாரிடத்தில் அன்பாகவும் ஆதரவாகவுமே பழகிக் கொள்ள வேண்டும்.


பெற்றாரின் பொருத்தத்திலேயே இறைவனது பொருத்தமும் இருக்கின்றது. நாயகம் (ஸல்) கூறினார்கள். தாயின் பாதத்திலேயே தனயனின் சுவனம் இருக்கின்றது என்றார்கள். தாயை மனச்சாந்தியுற வைக்கின்ற போதுதான் மகனுக்கு ஆத்மீகச் சாந்தி கிடைக்கின்றது.

எடுத்த எடுப்பிலேயே தாய் தந்தையரை ஏசுவது, பேசுவது எல்லாம் இன்று கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் விளைவுகளை நாம் பின்னர் அனுபவித்தே ஆகவேண்டும். சுவர் ஒன்றை நோக்கி பந்தை வீசியடிக்கின்றபோது அது மீண்டும் எறிந்தவரை நோக்கியே வருகின்றது. இதுபோல் இன்று நாம் பெற்றாரை மதிக்காவிட்டால் நாளை நமது பிள்ளைகள் நம்மை மதிக்க மாட்டார்கள் என்பது தான் இயல்பாகும்.

சிறிய வயதில் நம்மைதூக்கி சுமந்து நடக்க வைத்த பெற்றார்கள் இன்று வயோதிப நிலையை அடைந்து விட்டால் அவர்களை நாம் அணுகி அவர்களின் எல்லா அலுவல்களையும் செய்து கொடுத்து பெற்றோருக்கு நன்றியுள்ளவர்களாக மாறுவோமாக நாளைய சுவர்க்கம் இன்றைய செயல்பாடுகளாகும்.

**நன்றி :**
**இலங்கை ரூபவாஹினி முஸ்லிம் சேவை**
**டிசம்பர் 2001**
**ஒளிப்பதிவு ஏற்பாடு: எம். மபாஹிர் மௌலானா**





## 29.
## பேராசை பெரும் நஷ்டம்!

பிள்ளைகளும், பொருளாதாரமும் உலகின் அலங்காரங்களாகும் என அல்குர் ஆன் கூறுகின்றது. இவ்வுலகின் அலங்காரங்களை கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது. பேராசையோ நோக்கமாக கொள்ளலாகாது.

ஒரு மரத்தில் கூடு கட்டிய காகம் இரண்டு முட்டைகளையிட்டது. தன்னைவிட எல்லாப்பறவைகளும் நன்றாக வாழ்வதாக எண்ணியது. மற்றவர்களைப் போன்று வாழ வேண்டுமென பேராசை வைத்தது. பக்கத்து மரத்திலே கூடு கட்டி வாழ்கின்ற கழுகு வெளியே போகின்ற நேரம் பார்த்து காகம் கழுகின் கூட்டுக்குள் புகுந்தது. களவாக கழுகின் இரண்டு குஞ்சுகளைத் தூக்கி வந்து தனது கூட்டுக்குள் வைத்து அடைகாத்தது. காகக் குஞ்சுகளும் வெளிவந்தன. கழுகுக் குஞ்சுகளும் வெளிவந்தன. நாட்கள் செல்லச் செல்ல கழுகுக்குஞ்சுகள் காக்கைக்குஞ்சுகளை திண்டு விட்டன. இன்னும் சில நாட்களில் கழுகுக் குஞ்சுகள் பெரிய காக்கையையும் திண்டு விட்டன. பேராசையின் இந்த முடிவு நமக்கு நல்லதொரு உதாரணமாகும்.


தத்துவ மேதை இமாம் கஸ்ஸாலி (ரஹ்) சொன்னார்கள். இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம் ஒரு விருந்து வைக்கும் சபை போன்றதாகும். விருநது வைத்திருந்த சபையில் ஒரு பாத்திரத்தில் மணம்வைத்திருந்தார்கள். வந்தவர்களெல்லாம் மணத்தை சிறிது எடுத்து தடவிக் கொண்டு சாப்பிட்டு வெளியேறினர். இன்னும் சிலர் மணத்தை பூசியதுடன் சாப்பிட்ட பாத்திரத்தையும் தூக்கிச் சென்றார்கள். இங்கே மணம் பூசியவர்களைப் போன்று சிறுக உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டுமே தவிர பாத்திரத்தை எடுத்துச் செல்பவர்கள் போன்று எல்லாவற்றையும் எடுத்துச் செல்லலாம் என்ற பேராசை அமைத்து அலையக் கூடாது.

பேராசைகளைத் துறந்து இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட மனிதர்களாக மாறுவோமாக.

**நன்றி :**
**இலங்கை சுயாதீன தொலைகாட்சி (ITN - TV)**
**காலைச் சிந்தனை –2006**
**ஒளிப்பதிவு: எம். எம். சித்தீக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 30.
## பிறரை நேசிக்கும் முஃமின்!

நபியே! உங்களை அகில மக்களுக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம் என அல்லாஹ் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பற்றி திருக்குர்ஆனிலே குறிப்பிடுகின்றான்.


தனிமனிதனாக வாழ்ந்து இந்த தாரணியை விட்டுப் பிரிந்து விடாமல் முழு சமுதாயத்திற்குமாக வாழ்வதற்கு முகம்மது நபி (ஸல்) அவர்களது வாழ்வும், வாக்கும் நமக்கு வழிகாட்டுகின்றது. தான் மட்டும் இன்பசுகத்தை அனுபவித்து வாழ்ந்தால் போதுமானது. மற்றவர்கள் எப்படியோ எதை, எதை வேண்டுமானாலும் அனுபவித்துக் கொள்ளட்டும் என்ற போக்கில் வாழ்பவர்கள் தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தன்னைப் போன்று தனது சகோதரனையும் கவனித்து வாழ்பவனே உண்மை விசுவாசி என நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். நாம் மற்றவர்களின் துன்பத்தில் உதவி செய்பவர்களாகவும் கஷ்டங்களைக் கண்டு கைகொடுப்பவர்களாக திகள வேண்டும். எப்போதும் எம்மைப் போன்றே மற்றவர்களும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மற்றவர்களுக்காக மனமுருகி பிரார்த்தனை செய்ய வேண்டும்.

துன்பங்களாலும் துயரங்களாலும் கடன்பளுக்களாலும் கவலையுடன் வாழ்பவர்களின் சுமையை எம்மால் முடிந்தவரை குறைக்க பார்க்க வேண்டும். மற்றவர்களின் துன்பத்தில் நாங்கள் மகிழ்ச்சி கொள்ளக் கூடாது. நமது குடும்பம், அயல் குடும்பம் என்று உதவி செய்ய உறுதி பூண வேண்டும். மக்களின் கஷ்டங்களை நாங்கள் போக்கி வைக்கின்றபோது அல்லாஹ் நமது கஷ்டங்களைப் போக்குகின்றான். நமக்காக வாழ்ந்து சுயநலமுடைய அடியானாக இவ்வுலக வாழ்க்கையில் இருந்து பிரிவதை விட நமக்காகவும் பிறருக்காகவும் வாழச் செய்கின்ற இஸ்லாமிய அமைப்பில் நாம் காலூன்றி வாழவேண்டும்.

**நன்றி :**
**இலங்கை சுயாதீன தொலைகாட்சி** (ITN - TV)
**காலைச் சிந்தனை –2006**
**ஒளிப்பதிவு: எம். எம். சித்தீக்**





## 31.
## வியாதியஸ்தரை விசாரிப்பது சிறப்பு!

மனிதன் நோய்வாய்ப்படுவது இறைவனின் சோதனையின் ஓர் அங்கமாகும். நோயுற்றவர்களை விசாரியுங்கள் முகம்மது (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். அன்றாட வாழ்வில் அதனை செய்தும் காட்டினார்கள். அதிகாலை தொழுகை முடிந்ததும் வருகின்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய மேனியில் அனுதினமும் ஒரு பெண் குப்பையைக் கொட்டினாள்.

ஒரு நாள் அவளைக் காணவில்லை. அப்போது நாயகம் (ஸல்) அவர்கள் அப்பெண்ணை விசாரித்தார்கள். கடுமையான காய்ச்சலினால் அப்பெண் வாடுகின்றாள் எனக் கேள்வியுற்றார்கள். அப்பொழுதே அன்புகூர்ந்து அப்பெண்மணியை சேம நலம் விசாரிக்கச் சென்றார்கள்.

சுகம் விசாரிப்பதில் சாதி, சமயம், பார்க்கத் தேவையில்லை. இன்று வீடுகளிலும் வைத்திய சாலைகளிலும் எத்தனையோ மக்கள் நோயுற்று வாடுகின்றார்கள். இவர்களையெல்லாம் நாம் சென்று கவனிக்க வேலண்டும். சத்துணவு, உடுப்பு இல்லாமை, போன்றவற்றால் அல்லலுறுபவர்களுக்கு முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். அதை விட மேலாக அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறுவதோடு இறைவன் உங்களுக்கு சுகத்தைத்தருவான் என சுபசெய்திகளையும் கூறவேண்டும்.


ஒரு ஊருக்கு ஒரு வைத்தியன் கண்டிப்பாக இருக்க' வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. வைத்தியத் துறையில் முயற்சிப்பவர்களுக்கு கல்விக்காக உதவ வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றில் யுத்தங்களுக்குச் சென்று பெண்கள் முதலுதவிச் சிகிச்சையளித்திருக்கின்றார்கள். இன்று தாதித் தொழிலுக்குப் போக தயங்கி நிற்கின்றோம். மருத்துவிச்சி தொழிலுக்கு மனம் கோணி நிற்கின்றோம். முதலுதவி பயிற்சி வகுப்புகளுக்குப் போக முகம் சுளிக்கின்றோம். இவைகளை மறந்து நோயாளர்களுக்கு உதவி செய்ய என்றும் எம்மைத் தயார்படுத்துவோமாக.

**நன்றி :**
**இலங்கை சுயாதீன தொலைகாட்சி** (ITN - TV)
**காலைச் சிந்தனை –2006**
**ஒளிப்பதிவு: எம். எம். சித்தீக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 32. சுருங்கப் பேசுவதே சுகமானது !

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்றஹீம்

அதிகாலை பஜ்ருத் தொழுகையை நிறைவு செய்துவிட்டு காலைக் கடன்களை நிறைவு செய்ய எதிர்பார்த்து நிற்கும் இந்த வேளையில் மனதிற்கு இனிய கருத்துக்கள் உண்மையிலேயே சந்தோஷத்தைத் தரக்கூடியதாக இருக்கின்றது.

நாயகம் (ஸல்) கூறினார்கள். யாரேனும் அல்லாஹ்வைக் கொண்டும், கியாமத் நாளைக் கொண்டும் ஈமான் கொண்டவனாக இருந்தால் நல்லவற்றை பேசவும் அல்லது வாய்மூடவும் என்றார்கள்.

ஈமான் கொண்ட விசுவாசியொருவர் தனது பேச்சினை எப்போதும் சுருக்கமாகவே பேசக் கூடியவராக இருக்கின்றார். காலை எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை நல்லது, கெட்டது என்று வேறுபடுத்தாமல் தொடர்ந்து பேசி பாவத்தை சம்பாதிப்பதைக் காண்கின்றோம்.

அன்றாட வாழ்வில் நாவடக்கம் இல்லாமலேயே பலர் துன்பப்படுகின்றார்கள். ஏச்சு, பேச்சு, சண்டை, பொலீஸ், நீதிமன்றம் என்றெல்லாம் வீணாகத் தங்கள் மனசுக்குத் துன்பத்தை வரவழைத்துக் கொள்கின்றனர்.

இமாம் ஷாபியீ (ரஹ்) சொன்னார்கள். மூன்று கருமங்கள் மனிதனது புத்தியை அதிகப்படுத்துகின்றது. உலமாக்களுடன் உட்கார்ந்து இருப்பது, ஸாலிஹீன்களுடன் பழகுவது, தனக்கு வேண்டாதவற்றை பேசாது விடுவதாகும்.

சம்பந்தமில்லாத விடயங்களிலெல்லாம் வாயைப் போட்டு அலசுவது துன்யாவிலும், ஆகிறாவிலும் துன்பத்தை தருகின்றது.



அம்றிப்னுல் ஆஸ் (ரலி) சொன்னார்கள். இறைவன் மீது சத்தியமாக மனிதனுடைய நாவு நீண்ட சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்கின்றது. நாவின் பொல்லாப்புக் குறித்தே பல்லு, உதடுகள் மனிதனுடைய வாய்க்கு ஆப்பு வைக்கின்றது. என்றார்கள். மனிதனுடைய நாவினாலேயே அவனுடைய அத்துணை உறுப்புகளும் துன்பப்படுகின்றன.

நாவு அடக்கமாக இருந்தால் அவனுடைய உடம்பு, உள்ளம் ஸலாமத் அமைதி பெறுகின்றது. சுலைமான் (ரலி) கூறுகின்றார்கள். பேச்சு வெள்ளியாக இருந்தால் வாய்மூடல் பொன்னாக இருக்கும், பேசப் பழகுவது போல் வாய் மூடப் பழகிக் கொள்ள வேண்டும் என்றார்கள்.

நல்லதைப் பேசி நன்மையைத் தேட நாயன் கிருபை செய்வானாக! ஆமீன்.

**நன்றி :**
**இலங்கை சுயாதீன தொலைகாட்சி** (ITN - TV)
**காலைச் சிந்தனை**
**2006**
**ஒளிப்பதிவு: எம். எம். சித்தீக்**

OOOOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 33.

# முந்தைய சமயங்களின் நோன்புக்கும் முஹம்மது நபியின் நோன்புக்கும் வித்தியாசம் என்ன?

புனித ரமழான் மாதம் நோன்பு நோற்கின்ற முஸ்லிம்களாகிய நாம் - நோன்பின் யதார்த்தம் பற்றி சிந்திக்க வேண்டும்.

விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. (அதனால்) பரிசுத்தவான்களாகலாம் - (அல்குர்ஆன் 02-183)

முன்னிருந்தவர்கள், முந்திய ஆகமங்கள் எல்லாம் நோன்பைப் பற்றி பிரஸ்தாபிக்கின்றபோது - நாம் நோற்கும் நோன்பு அதில் உள்ளடங்கலானதா? அல்லாமல் வேறுபட்ட அமைப்பில் உள்ளதா? என சிந்திப்போம். முந்திய நபிமார்கள் தீர்க்கதரிசிகள் காலத்தில் நோன்பு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதே போன்று பல சமயங்களும் நோன்பை வலியுறுத்தியிருக்கின்றது.

**கிறிஸ்தவ ஆகமத்தில் நோன்பின் விழிப்பு**

லத்தீன் மொழியில் நோன்புக்கு 'தாப்' என்று சொல்லப்படுகின்றது. நீங்கள் உபவாசிக்கும் போது மாயக்காரரைப்போல் முகவாடலாய் இராதேயுங்கள். அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள். (மத்தேயு 6-16)

கிறிஸ்தவ சமயத்தவர்கள் பெப்ரவரி 15ம் திகதி முதல் 40 நாட்கள் உபவாசம் (நோன்பு) நோற்று வருகிறார்கள்.



**யூத ஆகமத்தில் நோன்பின் மகிமை**

நோன்பு என்ற பதம் சுர்யானி மொழியில் 'கர்ப்' என்றும் அப்ரானி மொழியில் 'ஹித்ததுன்' என்றும் அழைக்கப்படுகின்றது.

'சியோனிலே எக்காளம் ஊதுங்கள் பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்' (யோவேல் 2:15)

நீங்கள் இந்த எழுபது வருடமாக ஐந்தாம் மாதத்திலும், ஏழாம் மாதத்திலும் உபவாசம் பண்ணி துக்கம் கொண்டாடின போது நீங்கள் எனக்கென்று தானா உபவாசம் பண்ணினீர்கள்? (சகரியா 7:5) அப்போது தாவூது அந்த பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி உபவாசித்து உள்ளே போய் இரா முழுவதும் தரையில் கிடந்தார். (சாமுவேல் 12: 16)

**இந்து மத இராமாயணத்தில் நோன்பின் சிறப்பு**

சீதாப் பிராட்டியாரை இராவணன் தூக்கிச் செல்கின்றான் என கரட பகவான் வாயிலாக கேட்க, இராமரும் இலட்சுமணரும் சீதாதேவியை மீட்டு வரும்வரை உண்ணுவதில்லை என சபதம் செய்து உபவாச நோன்பு இருந்தார்கள்.

இதை செவியுற்ற ஆஞ்சநேயர் தான் மீட்டுவரச் செல்வதால் - மீட்டு வரும்வரை தானும் உண்ணாமல் உபவாச நோன்பு இருப்பதாக உறுதி கொண்டார்.

இராவணனால் தூக்கிச்செல்லப்பட்ட ஜானகி (சீதை) தன் பதிவிரதத்தனத்தைப் பத்திரப்படுத்துவான் வேண்டி இராவணன் தன்னை அணுகாதிருக்க 40 நாட்கள் நோன்பு நோற்றார்கள்.

**மகாபாரதத்தில் நோன்பின் நோக்கம்**

கௌரவர்கள் என்று நூறு சகோதரர்களும் - அண்ணனான துரியோதனிடத்தில் சூதாடிய பஞ்சபாண்டவர்கள் - சகுனியால் தோல்வியுற்று பின் விடுதலையடைய கிருஷ்ண பகவானின் உதவி நாடி பஞ்சபாண்டவர்கள் 30 நாட்கள் உபவாசம் (நோன்பு) இருந்து உதவி பெற்று மீட்கப்பட்டார்கள். துரியோதனன் வசமான துரோபதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியார் தன் பத்தினித்தனத்தை பத்திரப்படுத்த 25 நாட்கள் உபவாசமும் (நோன்பு) உன்னத தியானமும் பூண்ட நாட்களிலேதான் அவர்களை மானபங்கமாக்க துச்சாதனன் துரோபதை (பாஞ்சாலி)யின் சேலையை இழுக்க இழுக்க நிர்வாணமாகாத முறையில் கிருஷ்ண பகவான் கண்காணித்து வந்தார்.

**பகவத்கீதையில் நோன்பு விபரம்**

மனைவியின் வார்த்தைக்கிணங்க கிருஷ்ண பரமாத்மாவைத் தரிசிக்க வேண்டி குசேலர் பெருமான் 60 நாட்கள் விரதம் வைத்து பின்பே பகவானைச் சந்திக்கும் சமயம் கிட்டியது. பின் உதவியும் பெற்று தன் தரித்திரத்தை நீக்கிக் கொண்டார்.

**புத்த சமயத்தில் நோன்பின் ஒலி**

சித்தார்த்தர் காட்டில் 'கயை' எனும் இடத்தில் ஒரு போதி மரத்தின் கீழ் இரண்டு மாதங்கள் இடைவிடாது உபவாசம் (நோன்பு) வைத்ததன் காரணமாக அவருக்கு உண்மை ஞானம் உதயமாகி புத்தர் தீர்ச்சை பெற்றார் என திரிபீடத்தில் சொல்லப்படுகின்றது. புத்த சமய பக்தர்கள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மாதங்கள் நோன்று நோற்றுவருகின்றனர்.

**சீக்கிய மதத்தில் நோன்பின் குரல்**

சீக்கியருடைய திருவேதமெனக் கருதப்படும் ஆதியாகமத்தில் குருதானக் ஒரு வருடத்தில் 50 நாட்கள் நோன்பிருப்பதாகக் காணப்படுகின்றது. இன்னும் சீக்கியர்கள் வருடத்தில் 60 நாட்கள் நோன்பு நோற்க வேண்டும் என்ற கட்டளையும் உண்டு.

**புனித இஸ்லாத்தில் நோன்பின் மாண்பு**

ஹிஜ்ரத் இரண்டாம் ஆண்டில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது. அதிகாலை முதல் சூரியன் மறையும் வரை பதினான்கு மணித்தியாலங்கள் உண்ணாமல் பருகாமல் இருக்க வேண்டும்.



நோன்பு பிடிக்கும்படி இஸ்லாம் எல்லோரையும் பலவந்தப்படுத்தவில்லை. கடும் நோயாளிகளுக்கும் பிரயாணிகளுக்கும் பிறிதொரு தினத்தில் நோன்பு நோற்க சந்தர்ப்பம் வழங்கியிருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) காட்டிய நோன்பு ஏனைய மதம் சார்ந்த நோன்புகளைவிட மிகவும் வித்தியாசமானதாகக் காணப்படுகின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். வயிற்றில் மூன்றில் ஒருபாகம் உணவு, ஒருபாகம் தண்ணீர், ஒருபாகம் காற்றும் இருக்குமாறு உட்கொள்வது சாலச் சிறந்தது என்றும், பசித்திருப்பது பல நோய்களுக்கு மருந்தாகிறது என்றும் கூறினார்கள். உண்ணாத, பருகாத நோன்பு முறையினால் நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள், நுரையீரல், குடல், தோல் முதலியன கழிவுகளை சீராக வெளியேற்றுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. டாக்டர் அர்னால்ட் எஹ்ரட், டாக்டர் சூ, டாக்டர் மார்க்குலிஸ் போன்றோர் நோயற்ற வாழ்வுக்கு நோன்பிருப்பது மேல் என்கிறார்கள்.

டாக்டர் மார்க்குலிஸ் - பசித்திருக்கும் நிலையில் உட்கொள்ளும் உணவை மனிதன் வேகமாக தன்னுள் கிரகித்து முழுவதையும் பயன்படுத்தி புதிய சக்தி பெறுகின்றான் என்றார்.

இஸ்லாம் காட்டுகின்ற புனித நோன்பின் மூலம் உடம்பிலுள்ள 639 தசைகளும், 208எலும்புகளும், 72,000 நரம்புகளும் அதனோடு கூடிய தசைகளும் புத்துணர்வு பெறுகின்றது.


புனித ரமழான் மாதத்தில் நோன்பு வைப்போம். பாவமான காரியங்களிலிருந்து மீழுவோம்.

**நன்றி :**
ஜே! மாத இதழ்
ஒக்டோபர் 2006
ஏற்பாடு: ஜே பிரதம ஆசிரியர், திரு. ஏ. பி. மதன்

○○○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 34. இறை தூதரின் இறுதி ஹஜ் உபதேசங்கள்!

உலக வரலாற்றிலே உபதேசங்களையும் . உபதேசிகளையும் பார்த்திருக்கின்றோம். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இருபத்து மூன்று வருட காலத்தில் வழங்கிய உபதேசங்களின் சாரமாக விளங்குவது, அன்னார் கடைசியாக ஆற்றிய ஹஜ்ஜின் உரையாகும். மதீனா நகரில் இஸ்லாமிய ஆட்சியை ஓங்கச் செய்வதற்கு பாடுபட்டுக் கொண்டிருந்த மாநபி (ஸல்) அவர்கள் மக்காநகருக்கு ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு (கி.பி.632) இல் ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள்.

இவ்வுரையைக் கேட்பதற்காக 1,24,000 நபித் தோழர்கள் அரபா வெளியில் ஒன்று கூடியிருந்தார்கள். அவர்கள் ஆற்றிய உரையின் ஒவ்வொரு பகுதியும் 'ரபீஆ பின் உமையா பின்கலீப்' எனும் பெயருடைய தோழரால் உரக்கக் கூறப்பட்டது.

காருண்ய நபியவர்களின் கடைசி ஹஜ் உபதேசத்தின் கருத்தாழத்தை இப்போது கவனிப்போம்.

''எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! நாம் அனைவரும் அவனையே வணங்குகிறோம். அவனிடமே உதவியையும், பாவங்களுக்கான மன்னிப்பையும் கோருகின்றோம். அவனிடமே நாம் திரும்பக் கூடியவர்களாக இருக்கின்றோம்.

நமது உள்ளத்தின் தீய எண்ணங்களை விட்டும் நாம் செய்யும் காரியங்களின் தீங்குகளை விட்டும் அவனிடம் பாதுகாப்புத் தேடுகின்றோம். அல்லாஹ் நேர்வழிப்படுத்திய எவரையும் வழிகெடுக்க முடியாது. நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன்இல்லை.

அவன் ஒருவனே! அவனுக்கு இணையே கிடையாது, முழு உலகத்தின் முடி ஆட்சி அவனுக்குரியதே 'முழுமையான புகழும் அவனுக்கே உரியது! வாக்குறுதியை நிறைவேற்றும் வல்லவனும் அவனே. எதிரிகளை இல்லாமல் செய்தவனும் அவனே! வீர வெற்றியைத் தந்தவனும் அவனே! மக்களே!நான் கூறுவதை கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள். இதற்கு பின்னால் இந்த இடத்தில் உங்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமென நான் நினைக்கவில்லை.



இன்றைய நாளையும், இந்த மாதத்தையும், இந்த இடத்தையும் எவ்வாறு புனிதமாக கருதுகின்றீர்களோ அதேபோல் இறைவனை சந்திக்கும் வரை உங்கள் ஒவ்வொருவரின் உயிரும், உடமையும் மானமும் மற்றவர்களுக்கு புனிதமானவையாகும்.

நீங்கள் இறைவனை சந்திக்கும் போது உங்கள் செயல்களைப் பற்றி அவன் கேள்வி கேட்பான். நீங்கள் ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருப்பீர்கள். உங்கள் வாரிசு பற்றியும், அவர்களது பங்குகள் பற்றியும் அல்லாஹுதஆலா கூறியிருப்பது உங்களுக்குப் போதுமானதாகும். இதற்கு நீங்கள் மாறு செய்யாதீர்கள். அன்பளிப்புகளை ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்யுங்கள்.

மக்களே! இந்தப் பூமியில் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தையும், எண்ணத்தையும் ஷைத்தான் இழந்து விட்டான் என்றாலும் அற்ப விஷயங்களில் கூட அவனை பின்பற்றினால் அது அவனுக்கு சந்தோஷத்தை தரும். மார்க்க விடயத்தில் ஷைத்தானியத்தில் எச்சரிக்கையாக இருங்கள்.

மக்களே! நிச்சயமாக நான் உங்கள் மத்தியில் அல்லாஹ்வின் வேதத்தையும், அவனின் தூதரான என்னுடைய நடைமுறைகளையும் விட்டுச் செல்கின்றேன். அவற்றை பலமாக பற்றிப்பிடித்துக் கொண்டு பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறி விடமாட்டீர்கள். மக்களே! நீங்கள் கவனத்துடன் செவிசாய்த்துக் கொள்ளுங்கள். தினமும் ஐந்து வேளை தொழுது வாருங்கள். ரமழான் மாதத்தில் நோன்பு வையுங்கள். உங்கள் சொத்தின் மீதான ஸகாத் எனும் ஏழை வரியைத் தயங்காது வழங்கி வாருங்கள். அல்லாஹ்வின் அருள்மிகு சுவனத்தில் நுழைவீர்கள்.

அவதானமாக இருங்கள்! நான் உங்களுக்கு தூதை எத்திவைத்து விட்டேன். உங்களின் அடிமைகளை நன்கு கவனியுங்கள். நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங்கள். நீங்கள் உடுப்பது போன்ற ஆடைகளை அவர்களுக்குக் கொடுங்கள்.

மக்களே! நிச்சயமாக அல்லாஹ்வின் சந்நிதானத்தில் ''தக்வா'' எனும் இறையச்சமுடையவரே உயர்ந்தவர் என்பதை நினைவில் வையுங்கள். எவரிடமும் ஓர் அமானிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ - அதனை அவர் உரியவரிடம் முறையாக திருப்பி ஒப்படைப்பது கடமையாகும். எச்சரிக்கையாக இருங்கள்! ஒரு குற்றம் இழைக்கப்பட்டிருந்தால் அந்த குற்றத்தை செய்தவரைத் தவிர வேறு எவரும் அதற்கு பொறுப்பாளராக மாட்டார். தந்தை செய்த குற்றத்திற்கு மகனோ - மகன் செய்த குற்றத்திற்கு தந்தையோ பொறுப்பாளியாக மாட்டார்.

மக்களே! புரிந்து கொள்ளுங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு சகோதரனாவான். ஒரு முஸ்லிம் சகோதரர் விரும்பித் தராது எதுவொன்றும் மறு முஸ்லிமுக்கு (ஹலாலாக) ஆகுமானதாக ஆகமாட்டாது. ஒருவர் மற்றவரை அடக்கு முறைக்கு ஆளாக்கக் கூடாது. அல்லாஹ்வே நான் எனது ''றிஸாலத்'' என்ற தூதை சமர்பித்துவிட்டேன் அல்லவா? மக்களே! அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் பிறருக்கு அநீதி இழைக்க வேண்டாம். உங்களுக்கு அநீதி இடம் பெற வேண்டாம். அறியாமைக் காலத்தின் பழக்கவழக்கங்கள் என்காலடியில் அழிக்கப்படுகின்றன.

அல்லாஹ் தனது வாக்கின் மூலமே பெண்களை உங்களுக்கு ஆகுமானவர்களாக ஆக்கியுள்ளான். உங்கள் மனைவியர் மீது உங்களுக்கு சில உரிமைகள் உண்டு. அவ்வாறே அவர்களுக்கும் உங்கள் மீது சில உரிமைகள் இருக்கின்றன. மக்களே! எனக்கு பின்னர் எந்த இறைதூதரும் வரமாட்டார்கள். உங்களை தவிர இனி புதிய தொரு சமுதாயம் இனி உலகில் உருவாகாது.

உங்களுடைய மார்க்கத்தின் வரம்புமுறைகளை மீறி நடக்காதீர்கள். அப்படி மீறியதால்தான்..... உங்களுக்கு முன்னுள்ள சமுதாயங்கள் அழிக்கப்பட்டன. இச்செய்தியை மற்றவர்களுக்கும் எத்திவையுங்கள். இங்குள்ளோரை விட ஒருக்கால் அவர்கள் அதிக கவனம் செலுத்துபவர்களாக இருக்கலாம்.



மக்களே! உங்களுக்கு தெரிவிக்க வேண்டியதை நான் தெரிவித்துவிட்டேனா? என்று கேட்டு நாயகம் (ஸல்) நிறுத்திய போது ''அல்லாஹ்வின் திருத்துதர் அவர்களே'' தாங்கள் தெரிவித்துவிட்டீர்கள் என்று உரத்துப் பதில் கூறினார்கள் மக்கள்.

இந்தப் பதிலைக் கேட்டு சந்தோஷமடைந்த நபி (ஸல்) அவர்கள் வானத்தை நோக்கியவர்களாக அம்மக்களைச் சுட்டிக் காட்டி ''இறைவா! இவர்களுக்கு நீயே சாட்சி'' என்று மூன்று முறை கூறி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தங்களின் உபதேசத்தை முடித்தார்கள்.

அவ்வேளை ''இன்றைய தினம் நான் உங்கள் மார்க்கத்தைப் பூர்த்தி செய்து என் அருட்கொடையையும் பரிபூரணமாக்கி வைத்தேன். உங்களுடைய மார்க்கமாக இஸ்லாத்தையும் அங்கீகரித்துக் கொண்டேன்'' (அல்குர்ஆன் 5:3) என்ற அருள்மறை வசனம் இறங்கியது. நபிகளார் (ஸல்) அவர்களின் நல்லுபதேசங்களை நானிலத்தில் பேணி நடக்கின்றோமா? என்பதை இன்றைய சூழலில் கேட்கத் தோன்றுகின்றது.

குடும்ப வாழ்வில் கணவன் மனைவி சண்டையின் விளைவு காதிக்கோடுகள் நிரம்பி வழிகின்றது. ஏன் குடும்ப வாழ்வில் கணவன், மனைவிக்கான புரிந்துணர்வுடன் செயல்படாமல் இருப்பதே இத்தனைக்கும் காரணியாக அமைகின்றது. குற்றம் செய்தவன் எங்கோ இருக்க அப்பாவிகள் குற்றத்தின் கூண்டில் தண்டிக்கப்படுகின்ற இக்கால கட்டத்தில் குற்றவாளிக்கே தண்டனை வாங்கிக் கொடுக்க சமுதாயம் தயக்கம் காட்டுகின்றது.

இன்று கொலை சர்வசாதாரணமாக மாறிவிட்டது. சிறிய சிறிய விடயங்களுக்கெல்லாம் கொந்தறாத்துக் கொடுத்து கொலை செய்கின்ற பாணி பரவி - விரவி காணப்படுகின்றது. அல்லாஹ்வின் அச்சம், பயம் ஏதுமின்றி கொலை செய்யத்துணியும் சமூகம் நபிகளாரின் சிந்தனையில் நாமோனாவைத் தேடுமா?

புனித ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் இறைதூதரின் இறுதி ஹஜ்ஜின் இறுதி உபதேசத்தை சிந்திப்போம் செயல்படுத்துவோம்.

**நன்றி :**
**தினக்குரல் - 31-12-2006**
**ஏற்பாடு: ஈழத்து நூன் - எம். நிழாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 35.

# ஹஜ் முஸ்லிம்களின் சர்வதேச மாநாடு!

ஹஜ்ஜுக் கடமை இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அல்லாஹுதஆலா இது விசேடமான பங்கினை வகிக்கும் இபாதத்தாக அமைகின்றது.

வசதிபடைத்தவர்களும், உடல் ஆரோக்கியமுள்ளவர்களும் இக்கடமையை நிறைவேற்ற உடனுக்குடன் பணிக்கப் படுகின்றார்கள். ஹஜ்ஜின் ஆணிவேராக அமைவது புனித கஃபாவாகும். இது அல்லாஹ்வின் புனித வீடு பைத்துல்லாஹ் என்று அழைக்கப்படும்.

இதனை இபுறாஹீம் (அலை) அவர்களும் இஸ்மாயீல் (அலை) அவர்களும் நிர்மாணித்தார்கள். இவர்களின் வழித்தோன்றலாக முஸ்லிம் சமுதாயம் உலகில் உதயமாகிவருகின்றது.

அல்லாஹ்வின் வணக்கஸ்தலமான கஃபாவை கட்டி முடித்ததும் இபுறாஹீம் நபியவர்கள் கேட்ட பிரார்த்தனையை அல்லாஹ் அங்கீகரித்தான்.

எங்கள் இரட்சகனே, எங்களிருவரையும் உனக்கு முற்றிலும் கீழ்படிகின்ற (முஸ்லிம்களாகவும்)வர்களாகவும் எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தினரை உனக்கு கீழ்படிகின்ற-வர்களாகவும் ஆக்கிவைப்பாயாக, நீயோ தௌபாக்களை மிக்க ஏற்பவன், மிக்க கிருபையாளன், எங்கள் இரட்சகனே (எங்கள் சந்ததிகளான) அவர்களிடம் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்புவாயாக. அவர் எனது வசனங்களை ஓதிக் காண்பித்து வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக்கொடுத்து அவர்களை தூய்மைப்படுத்தி வைப்பார். நிச்சயமாக நீ யாவரையும் மிகைத்தவன். தீர்க்கமான அறிவாளன். (என்று பிரார்த்தித்தார்) அல்லாஹுதஆலா அவரது பிரார்த்தனையை அங்கீகரித்தான்.

புனித கஃபாவை கட்டி முடித்ததும் அல்லாஹ்விடம் தனது பணியின் முடிவை பிரஸ்தாபித்தபோது அல்லாஹ் அழைப்பு விடுக்குமாறு இபுறாஹீம் (அலை) அவர்களுக்குப் பணித்தான். அந்த



அழைப்பை ஏற்றுக்கொண்ட எல்லா நெஞ்சங்களும் இறையில்லமான புனித கஃபாவை நோக்கி பயணித்துக்கொண்டேயிருக்கின்றன.

''அல்லாஹ் புனிதமிகு ஆலயமான கஃபாவை மக்களுக்கு அபயமளிக்கும் கேந்திரஸ்தானமாக அமைத்தான். (அல்குர்ஆன் 05.97) அருள் மிகுந்த கஃபாவில் அமைதி, சாந்தம், மன நிம்மதி அனைத்தும் கிடைக்கவே செய்கிறது. கஃபாவுக்குள் நுழைபவர் தூய்மையானவராக மாறுவதுடன் பயம், அச்சம் அனைத்தையும் துறந்து வாழமுடியும் என்பது நியதியாகும்.

இஸ்லாமிய பண்பாட்டு விழுமியங்களை சிறப்புற செயலாற்றும் நோக்குடனேயே முஸ்லிம்கள் மக்காவில் ஒன்று கூடுகின்றனர். அவர்கள் சொல்கின்ற ''லப்பைக்'' என்ற உச்சாரம் வானைப் பிளக்கின்றது. அதன் அர்த்தம் அடிபணிகின்றேன் என்பது, வெறும் கோஷங்களாக அமையாமல் உயிரோட்டமுள்ள, உணர்வுபூர்வமான செயல்பாட்டின் வடிவங்களாக அமைந்திருக்கின்றது.

சுகபோகத்தில் வாழ்ந்தமனிதர்கள், ஆடம்பரமான ஆடைகளுக்குள் அரைவாசி வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் வெள்ளையாடைக்குள் வீற்றிருக்கின்றார்கள். அதுவும் தைக்கப்படாத ஆடைகள். இது தத்துவத்தின் தடயங்கள், வெள்ளை உடையைக் கொண்டு இஃறாம் அணியுங்கள், வெள்ளை ஆடையைக் கொண்டு கபனிடுங்கள் என்றனர். நபிகளார் (ஸல்) கூறிய வெள்ளையாடையில் ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஹாஜிகள் புனித கஃபாவை சுற்றி சுற்றி தவாப் செய்கின்றனர்.

கஃபாவில் ஏழை, பணக்காரன், அரசன், அடிமை, முதலாளி, தொழிலாளி, படித்தவன், பாமரன் என்ற வித்தியாசமே கிடையாது. அரபா வெளியிலும் முஸ்தலிபா தெருக்களிலும் நாடு, ஊர், நிறம், இனம், மொழி, கோத்திரவாதம், பிரதேசவாதம் அத்தனையும் மறந்து ஒற்றுமை உணர்வு ஏற்படுகின்றது.

சொல், செயல், எண்ணம், நோக்கம், வணக்கம், உணர்வு, உறவு அனைத்திலும் புதுமையான ஒற்றுமையும், மனிதாபிமானமும் பணிவுத்தன்மையும் ஏற்படுகின்றது. எவர் முகத்திலும் பிரகாசமான தோற்றப்பாடு, அமைதி, சாந்தம் தவழும் நடைமுறை எல்லோரது நெஞ்சையும் இனிக்கவைக்கும் நிகழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக முஸ்லிம்களுக்கான உச்சிமாநாடு வருடம்தோறும் புனித மக்காவில் நடைபெறுகின்றது. இம்மாநாட்டுக்கு வீடு வீடாக அழைப்பிதழ் அச்சிட்டு அனுப்ப வேண்டிய அவசியமேயில்லை.

இம்மாநாட்டுக்கு மக்களை அழைக்கும் பொறுப்பை உலகில் முதலாவது பாரமெடுத்துக் கொண்டவர் இபுறாஹீம் (அலை) அவர்களே! ஹரம் ஷரீபில் தொழுகை முடிந்ததும் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறி கைலாகு செய்து கொள்வார்கள். வெள்ளை நிறமுடைய அழகர்களும், கறுப்பு நிறமுடைய அழகர்களும் கட்டியணைத்து இஸ்லாமிய இதயப் பகிர்வுகளை செய்து கொள்வார்கள்.

ஹஜ் என்ற புனித உச்சிமாநாட்டின் முடிவில் உள்ளம் தெளிந்த மனதுடன், பாவங்களை கைவிட்டு அன்று பிறந்த குழந்தையின் மனநிலையில் திரும்பும் ஹாஜிகள் உலகெங்கும் வரவேற்கப்பட வேண்டியவர்களே!

இத்தகைய அருமை, பெருமை தங்கிய அற்புத நாளே புனித ஹஜ்ஜுப்பெருநாளாகும். இன்றைய நாளில் ஒற்றுமையுடன் வாழ்வோமாக.

நன்றி : தினகரன்
31-12-2006
ஏற்பாடு: அல்ஹாஜ் என். எம். அமீன்

OOOOOO



## ஊக்கம் தந்த ஊடகவியலாளர்கள்




பௌஸ் மௌலவியின் பன்னூல் வெளியீட்டு விழாவில் நவமணி பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம். பி. எம். அஸ்ஹர் உரையாற்றுகின்றார்.



பன்னூல் வெளியீட்டு விழாவில் தினகரன் முகாமைத்துவ ஆசிரியரும் மீடியா போரம் தலைவருமான அல்ஹாஜ் என். எம். அமீன் உரையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்துத் துறையில் ஊக்குவித்த (இடமிருந்து வலம்) இசைக்கோ நூர்தீன், இ. ஒ. கூ. முஸ்லிம் சேவை சிரேஷ்ட ஒலிபரப்பாளர் அல்ஹாஜ் எம். இஸட். அஹமட் முனவ்வர், தயாரிப்பாளர் எம். யூனுஸ் ஆகியோருடன் மௌலவி பௌஸ்.



பன்னூல் வெளியீட்டு விழாவில் ஆரம்ப ஆசிரியர் அல்ஹாஜ் எம். எம். எம். மஹ்றூப் கரீம் *MA* மாணவன் மௌலவி பௌஸ் அவர்களுக்கு மாலை அணிவித்து கௌரவம் செய்கின்றார். அருகே அஸ்வர் *JP*, சதகத் *JP*, இஸ்மாயில் அதிபர் ஆகியோர். படத்தெரிவு: எம். எப். எம். ஸைனி.



**<u>இது வரை வெளிவந்த ஆசிரியரது நூற்கள்</u>**

- வைகறை வாசம் (கவிதை நூல்)
- மார்க்கத்தின் மனக்கதவு (கட்டுரை நூல்)
- போதனைப் பொக்கிஷம் (கட்டுரை நூல்)
- முஅத்தினின் முறைப்பாடு (கவிதை நூல்)
- காதிகோட் (கவிதை நூல்)

**<u>விரைவில் வெளிவர இருப்பவை</u>**

- நிறை மார்க்கத்தின் நிலா முற்றம் (கட்டுரை நூல்)
- காத்திருந்த கண்கள் (சிறுகதை தொகுப்பு)
- பாரெங்கும் பலஸ்தீனம் (கவிதை நூல்)
- விடியலை நோக்கிய விசுவாசிகள் (கட்டுரை நூல்)
- சின்ன சின்ன பூக்கள் (சிறுவர் பாடல்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியத்தில் இளைஞராக நிற்பவர்!

இலக்கியம் என்ற சொல்லுக்கு எனக்கு அர்த்தம் தெரிவதற்கு முன்பிருந்தே எழுத்துத்துறையிலும் ஊடகத்துறையிலும் தன்னை நெருக்கமான ஈடுபாட்டுடன் இணைத்துக் கொண்டிருந்தவர் கவிஞர் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள்

நன்றாக ஞாபகமிருக்கிறது. அந்த நாட்களில் மிடுக்கோடு வெளிவந்த தினபதி நாளிதழ்கள் உள்ளிட்ட தேசிய இதழ்களில் அவரெழுதி பிரசுரமாகி இருந்த கட்டுரை, கவிதைகளை பசைபூசி ஒட்டியிருந்த ஒரு கத்தையான தொகுப்பை எனது ஒன்பதாவது வயதில் அவரின் அறையில் படித்தேன். அன்று அவர் பாதுகாத்த ஆக்கங்களின் நினைவாகவே **ஊடகங்களில் உதித்த உபதேசங்கள்** எனும் இந்நூலாகும்.

பௌஸ் மௌலவி கடந்த பல வருடங்களுக்கு மேலாக எழுத்தின் ஊடகத் துறையின் கலாச்சார பாரம்பரியத்தின் பண்பாட்டுக்கூறுகளின் மீது குன்றாத காதலோடு ஒரு இளைஞரைப் போல இன்னும் அதே துடிப்போடு இடையறாது செயல்பட்டு வருபவர். அவரது கவியரங்குக் கவிதைகளில் கிராமத்தின் சுவையும் சாயலும் படிந்தவை. அதை மேலும் செப்பனிட்டால் இஸ்லாமிய கவித்துவத்திற்கு இன்னுமொரு வடிவம் தரலாம் என்பது எனது அபிப்பிராயம். கவியரங்குக் கவிதைகளை பௌஸ் மௌலவியால் அழகாக வாசிக்க முடியும். அவர் சிறந்த ஒரு மேடைக் கவிஞர் என்பது எனது அபிப்பிராயமாகும். இஸ்லாமிய மார்க்கத்தில் ஆழ்ந்த புலமையுள்ள பௌஸ் மௌலவியின் இந்நூல் ஏனைய மதத்தைச் சேர்ந்த சகோதர்களுக்கும் பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கை!
அன்பும், சினேக பூர்வமும், மனிதாபிமானமும் நிரம்பிய மௌலவி பௌஸ் மேலும் பல நூற்களைத் தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
கவிஞர்: M. I. M. ஜாபிர்
தயாரிப்பாளர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

PRINTED BY: FAR EAST ENTERPRISE
68, YONAKA MAWATHA, KESELWATTA, PANADURA. HOTLINE: 0777-533248
EMAIL: fareast@pearl.lanka.net

COVER PAGE DESIGNED BY : A.H. AHAMED ASLAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org